Registered News Paper in Sri Lanka

பக்கம் 24

ரூபா 15/00

දිනමුරසු වාරමලර් ஆக.17-23, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 524

## தேர்தல் வருமா...?

## பேச்சுவார்த்தை எப்போது? அதிகரிக்கும் சர்வதேச அழுத்தம்!



விஜய் நடத்தும் ஒத்திகை

பிஞ்சில் பழுத்தவை

## நிலை தடுமாறிய தேவதைகள்!

## ஆன்மீகம்



### நாம் பெறும் படிப்பினைகள்

தா்மத்திற்கும் அதா்மத்திற்கும் போராட்டம் என்பது உலகம் உண்டான காலம் முதல் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

அதா்மிகள் எவ்வளவு பலம் பொருந்தியவா்களாக இருப்பினும் இறுதி வெற்றி தா்மத்திற்குத்தான்.

மண்ணாசையால் குலம் அழியும். எனவே அதனை விடவேண்டும். மண், பொன், பெண் இந்த மூன்றாசைகளாலும் மனிதன் மிருகமாகியுள்ளான். இதனை அறிவு நூல்கள் மூலம் ஆன்றோா்கள் நமக்கு அறியத் தந்துள்ளாா்கள்.

பெற்றோரை வணங்குதல், குருவை வணங்குதல், தெய்வ பக்தி, அகிம்சை, வாய்மை, வெட்காமை, ஒழுக்கமுடைமை, ஐம்புலனடக்கம் முதலியன பொதுவாக அனைத்து இன மக்களுக்கும் பொருந்தும். ஆனாலும் இந்து சமயத்தவா்களுக்கே இவைகள் உரித்தான ஒழுக்க நெறிகளாகும்.

இறை நம்பிக்கையில்லாத அசுரரையொத்த மனிதா்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். ஆண்டவனை நம்பு. நல்லவை நடக்கும்.

சிவஸ்ரீ.அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

### அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன்

அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள். நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன். என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன். (உசயா 41-10)

பார்த்தீர்களா! அன்புச் சகோதரங்களே! ஆண்டவர் இயேசு கூறுவதை! நிச்சயமாக அவரை எம் சொந்த இரட்சகராக எம் உள்ளங்களில் தூய்மையோடு ஏற்று அவரது கட்டளைகளை நாம் தவறாது அனுசரித்து நடக்கும்போது எமக்கு எத்தகைய பிரச்சினைகள் ஏற்படினும் அவற்றால் நாம் வேதனைப்பட விடமாட்டார். எமக்கெதிராய் வழக்காடுவோர் இல்லாதொழிவர்.

ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலை போல் என்றும் அசையாது இருப்பர். (சங் 125 -1)

என் சொந்த வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்கள் பல பயங்கரமானவை. ஏன் மரணத்தின் வாயிலருகே கூட நான் தள்ளப்பட்டபோது இயேசு தம் வலக்கரத்தால் தூக்கி என் உயிரைப் பாதுகாத்துள்ளார். என்றுமே அவர் என்னைக் கைவிட்டதில்லை. அவரே என் ஜீவன். என் அன்பு அவருக்கு மட்டுமே. அவரே என் தேவன். சகோதரங்களே! விசுவாசத்துடன் இயேசுவிடம் அன்பு கூருங்கள். அவரின் அரவணைப்பிலிருந்து உங்களை விலக விடமாட்டார். துன்பம் உங்களை அணுகவும் விடார்.

ஜோசப் அருள்சாமி, இராஜவெல.

### கியாமத்து நாால் மூன்று நபர்கள்

மாபெரும் திடுக்கநிறைந்த கியாமத்து நாள் மூன்று நபர்களை திடுறச் செய்யாது. அந்நாளில் அவர்களுக்கு கேள்வி ணக்கும் இருக்காது. மனிதர்கள் அனைவரும் தங்கடைய கேள்வி கணக்குகளை விட்டு நீங்கும் வரை அகள் ஓய்வு பெற்றிருப்பார்கள்.

அவர்களில் முதலவர் அல்லாஹ்வுக்காக அவனுடைய திருப்தியைத்தடியவராக அல்குர்ஆனை ஓதி அதனை ஒரு கூட்டனருக்கு இமாமத் செய்பவர்.

இரண்டாமவர் அளஹ்வுக்காக அவனுடைய திருப்தியைத் தேடியவர மக்களைத் தொழுகைக்கு அழைக்கும் ஓர் அழைாளர்.

மூன்றாமவர் தனும் தன்னைப் படைத்த அல்லாஹ்வுக்குமிடை உள்ள செயல்களிலும் தனக்கும் தனக்குக் கீள அடிமைகள், வேலைக் காரர்கள் ஆகியோரின் யத்திலும் நல்ல முறையில் நடந்துகொண்டவர் எனண்ணல் நபி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.521

பரிசுக்குரிய கவிதை

### நீதான் காட்டு

சமாதானம் வேண்டும் என்று
பாடுகின்றார் பாட்டு - அவரே
சங்கிலியால் பிணைத்து அதற்குப்
போடுகின்றார் பூட்டு - அமைதி
வரும் என்ற சேதியதோ
புளிச்சுப் போச்சு கேட்டு - நம்
நாட்டுக்கோர் நல்வழியை
இறைவா நீ காட்டு!

த.சங்கீதா, திருகோணமலை.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### ஏனிந்த அவலம்!!!

சமாதானத்தின்
பத்திரமெல்லாம்
ஏனிங்கு இறுகக்கட்டி
தாழிட்டு ஒரு பக்கமாய்
போடப்பட்டுள்ளது?
சமாதானம் நிலைக்குமா?

வீரையா நித்தியானந்தன், குயின்ஸ்டவுன்.

### படித்திடுவாய்

பூட்டிய பூட்டு கல்விக்கல்ல
வெறும் புத்தகத்திற்கு மட்டுமே
மூளை யெனும் புத்தகத்தில்
பூட்டிட எவராலும் முடியாது - இதனைப்
புரிந்து நீயும் பத்திரமாய் படித்திடுவாய்.

சோபிகா ஸ்ரீஜீவா,வட்டுக்கோட்டை.

### இறுக்கமான பூட்டு

இறுகப் பூட்டி விலங்கிடப்பட்டது
சமாதான ஒப்பந்தமும்
புரிந்துணர்வு உடன்படிக்கையும்
மட்டுமல்ல நம் சந்ததிகளின்
எதிர்காலமும் தான்.

கவிப்பிரியை, பலாங்கொட.

### வினா

திம்பு, சிறிமா சாஸ்திரி
சந்திரிகா, பிரேமதாசா
ஒப்பந்தம் ஒரு கண்துடைப்பு
இது அடுத்த கதவடைப்பு - புது
விலங்கிட்டு.

ஏ.ரி.தயாபரன்.

### கறுப்பு ஜூலை

இருபது ஆண்டுகளுக்கு - முன்
இங்கே நடந்த
இனவாத தீயின்
இருப்புக்கள்
இங்கே கோப்புக்களில்?

எஸ்.பி.சரன், மாத்தளை.

### இறைவனாகியது

விழித்து இருக்கும் போதே
உருவி எடுக்கும் கள்வர்கள் நாலும்
அவர்களின் குருவான
அரசியல்வாதிகள் - நாலும்
இப்போது என் மனம்
முட்கம்பி ஏந்திய
ஏசுநாதர் போல!

ஏ.புவனேந்திரன், வட்டகலை.

## கவிதைப் போட்டி இல.524



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.08.2003

கவிதைப் போட்டி இல.524
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பாதுகாப்பு

உஷ்!
இதற்குள்
இடைக்கால
நிர்வாக
திட்ட வரைபு
பாதுகாப்பு
பலப்படுத்தப்பட்டுள்ளது.

எம்.சி.கலீல், கல்முனை - 05.

### பிற்பொக்கெற்

ஏய்.. 'மணிபேர்ஸே' உன்னை
முள்ளுக் கம்பி கொண்டு
முறுக்கிப் பிணித்தாலும்..
சங்கிலியால் என்றும்
சரியாகப் பூட்டினாலும்
'பிற்பொக்கெற்' அடிப்பவனைப்
பிடிப்பதுதான் கஷ்டம்.

எம்.கே.மஹ்ஜபீன், மருதமுனை - 03.

### கோப்பு

சங்கிலியால் இணைத்து
பூட்டப்பட்டது கோப்பு
மாத்திரமல்ல
பலரின் சமாதான
முயற்சியின்
கையொப்பங்களுந்தான்.

நடராஜா தேகலா, பதுளை.

### இடைக்கால நிர்வாக யோசனை

ஒன்றுமில்லாத
ஒன்றுக்கு
இத்தனை
பாதுகாப்பா?

எஸ்.பி.கணேஷ், தாண்டியடி.

## உங்கள் பக்கம்

### புகழ் பெற கிராமத்தைப் புறக்கணிக்கக் கூடாது!

திருகோணல மாவட்டத்தில் இயற்கை வளம் கொண்கிராமம்" இலங்கைத்துறை முகத்துவாரம். நதைப் பார்க்கிலும் அழகிய கிராமம், தென்னாப்புக்களும் கடற்கரையோரங்களும், பளைரங்களும், மலைக்குன்றுகளும், மீன்பிடித்தாழிலும் உள்ள இக் கிராமத்திற்கு உல்லபயணிகளை ஈர்த்துக்கொள்ளும் சிறப்பு உந்.

இங்கே இதன வளங்கள் இருந்தும் போக்குவரத்துப்பாதை, மின்சாரம் இன்னும் சீரான நிலைக்குரும்பவில்லை. ஒக்ஸ்பாம், ஜி.ரி.சற், ஐ.சி.அி. போன்ற ஒரு சில நிறுவனங்கள் சிலபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்துள்ளஅவற்றுக்கு நாம் நன்றி சொல்லக் கடபைட்டுள்ளோம். மாரி, மழை காலம் நெருங்ன் வீதியின் புனரமைப்பு வேலைகளை த்தால் அந்த ஊரின் புகழ் எங்கும் பரவும்.டுத்த கட்ட நடவடிக்கையாக மின்சார லைகளை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக கவனிப்பார்களா?

அத்துடன் க்காமுனையில் இருந்து இலங்கைத்துறைகத்துவாரத்துக்கு உள்ளே செல்லும் பாள இரண்டு தோணிகளை இணைத்து ஆற்றனக் கடக்கின்றது. மழைக் காலங்களில் இந்ஆற்றின் நீர்மட்டம் உயருமானால் போக்ரத்து தடைப்பட்டுவிடும். இதற்கு ஒரு தான பாலம் அமைக்கும் முயற்சியில் அ சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் பார்வை இங்கே செலுத்துவார்களானால்? எதிர்லம் சிறந்த உல்லாசப் பயணிகளின் வருகக்காக காத்திருக்கும்!

ஆற்று நீர் வெக்கெடுக்கும் காலங்களில் எல்லாத் தரப்பாம குறிப்பாக பெண்கள், குழந்தைகள், வாதிபர்கள் அதீத பயத்துடனேயே பயணிக்கண்டியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஆற்றுள் விழுந்து விடுகின்ற நிலைமையும் இப்குதி மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக ள்ளது.

தனியார் அபைுக்களே இக் கிராமத்தின் அபிவிருத்தி தெர்பில் அதிக அக்கறை எடுத்து செயற்கின்றன. அரசாங்கமும் பாராளுமன்ற உப்பினர்களும் குறிப்பிடத் தக்களவு அக்கைசலுத்தி இக் கிராமத்தின் அபிவிருத்திக்கு வகுக்க வேண்டும். மாற்றாந்தாய் மனப்பமையோடு பாராமுகமாக இருப்பதானது தெந்து இக் கிராமம் பின்தங்கிப் போவதற்கு டுச் செல்லும் என்பதை வேதனையோடு வித்துக்கொள்கின்றோம்.

எஸ்.சச்சிதிருமலை.

மடன் மற்றும்
ஆக்கங்க உட்பட சகல
தொபுகளுக்கும்:
தினமு வாரமலர்,
த.பெ.இல772, கொழும்பு.
தொலைபே -074-514282
தொலை நகல்ax):-074-513266
ஈ-மெ: (E-mail):-
mura@sltnet.lk

## வாசகர் சாலை

திக்திக்கும் தினமுரசே!
தெவிட்டாத தமிழ் அரசே
வண்ணமயமாக - வந்து
வாசக நெஞ்சங்களை
கொள்ளை கொள்கின்றாய்
புதிய புதிய அம்சங்கள்
புல்லரிக்க வைக்கும் உண்மைகள்
கற்று சேகரிக்க - கலைநயமான
இதழ்கள்
கொட்டி முழங்கிடு
தமிழ் வாழ வையகத்தில்
சுவை மாறாமல் சூடு ஆறாமல்
சுவாரசியம் குன்றாமல்
தொடர்ந்து வலம் வர
வாழ்த்துக்கள்.

மணிவேல் ருத்ரா, செல்வகந்த.

வேறெந்தப் பத்திரிகையும் வெளியிடாத தகவல், வாசகர் எண்ணம் அறிந்து செய்திகளைத் திரட்டித் தருவதில் முரசு முன்னோடிப் பத்திரிகை. இந்த வகையில் இடி அமீனின் சுயசரிதையை சுவைபட தொகுத்து வழங்கி வாசகர் வரவேற்பைப் பெற்ற முரசு, இடி அமீனின் இறுதி மூச்சுத் தகவல்களையும் 521வது முரசில் வெளியிட்டு அதில் ஓர் வியப்பான விடயத்தையும் தந்தது. அதுதான் உகண்டாவின் கொடுங்கோல் ஆட்சியாளன் இடிஅமீனின் அமைதியான மரணத்திற்கு பிரார்த்திக்கும் மூதாட்டியின் நல்லாசி. இது வேறெந்தப் பத்திரிகையும் வெளியிடாத் தகவல்.

எம்.சி.கலீல், கல்முனை - 05.

முரசு ஆசிரியருக்கு
முதலில் வணக்கம்!
வெலிக்கடைச் சிறையில்
பலியிடப்பட்ட
தமிழ்க் கைதிகளின்
பெயர்ப் பட்டியலுடன்
வெளிவந்த கட்டுரையை
படித்தவர்கள்
பதை பதைப்பார்கள்!
கறுப்பு ஜூலையின்
நினைவலைகள்
கண்ணீரை உகுத்து விடும்!
நெஞ்சம் மறக்காத
பஞ்சமா பாதகச் செயல்
படுபாதகக் கொலைகள்
அந்த நாள் ஞாபகம்
நெஞ்சில் நிழலாட
எழுதப்பட்ட சரிதம்
சிந்தையைத் தொட்டது!
'முரசு' என்றால் முரசம்தான்!
சும்மா சொல்லக்கூடாது
அலசல் அற்புதம்!
அற்புதனின் அடிதொட்டுவந்த
ஏடல்லவா?
வீறு நடையும்
சலிப்பில்லாத எழுத்தும்
தேடல்களில் ஊழல்களை
கண்டு பிடித்து
சாடி விடலும் பாராட்டத் தக்கது
மூதூர் எம். தயாபரனின்
உள்ளக்குமுறல்
உண்மையானால்
கவலைக்குரியதே

கவிக்குயிலன், சேனையூர்.

அன்பின் முரசிற்கு முதற் கண் வணக்கம். உனது வார வாசனைகள் அனைத்தும் வரவேற்கத் தக்கவை. வெளிநாடுகளில் வேலை செய்யவே நேரம் போதாமல் இருந்தாலும் உனக்காக தரும் வாசகன் நான். முரசே! நீ உலகமெல்லாம் முழங்குவதால் உண்மைகள் உலகமெங்கும் உணரப்படுகிறது. நீ மேலும் வளர்ந்து வளமான தமிழுக்காய் பாடுபட வேண்டும்.

எஸ்.மனோ, லண்டன்.

என்னருமைத் தினமுரசே!
ஏற்றமுடன் நீ வாழ்க
உன்னுடைய புகழ்பாட
என்னிடத்தில் வார்த்தையில்லை.

நீயோ அரசியலை அலசிவிட்டு
ஆழ்துயிலில் உறங்குகின்றாய்
நானோ
இருபத்து நான்கு பக்கங்களையும்
இன்பமுடன் வாசித்திடுவேன்

உன் சிறுகதைகள் என்
சிந்தனையைத் தூண்டிவிட
தேன் கிண்ணம் என்
தேகத்தை உசுப்பிவிட
இலக்கிய நயம் என்
இன்பத்தை கிளறிவிட
என் நேசமிகு தினமுரசே!
என் மனதால்
உன்னை நான் தினமும்
ஆராதிக்கின்றேன்.
நீ வளர என் வாழ்த்துக்கள்.

ந.வேணுகா, வவுனியா.





எம் அன்பின்
தினமுரசே,
எம் இதயத்தைக்
கொள்ளை கொண்ட
தினமுரசு வாரமலரே!
நீ சுமந்து வரும்
அனைத்து
அம்சங்களும் மிக மிக
நன்று. உன் சேவை
மென்மேலும் வளர்ந்து
"எதிர்காலத்தில் ஒரு
சரித்திரம் படைக்க
வேண்டும்" என்று எம்
குடும்ப சார்பில்
வாழ்த்துகிறோம்.

*கா. கலைச் செல்வி, சுபசித்தி நிலையம், கோளாவில்-03*

# நிலைமையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் புலிகளின் திருத்த யோசனை?

நோர்வே தனது மத்தியஸ்த முயற்சியில் மற்றொரு கட்டமாக அதன் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்காக அனுப்பி வைத்துள்ளபோதிலும் சமாதான முயற்சிகளில் அடுத்த கட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதில் பெரும் சிக்கல்கள் தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

அரசாங்கம் அனுப்பிய இடைக்கால நிர்வாக யோசனையை புலிகள் முற்றாக நிராகரிக்காதபோதும் புலிகளால் அதற்கு மாற்றீடாக தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் யோசனை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் எந்த வகையிலும் வழங்க முடியாத ஒன்று என புலிகளின் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. ஏற்கெனவே வன்னியில் தயாரித்து முடிக்கப்பட்ட ஆலோசனைகளையே பிரான்சில் புலிகளின் முக்கியஸ்தர்கள் சுமார் 20 பேர் வரை கூடி ஆராயவுள்ளனர்.

இந்த யோசனைகளை அரசாங்கத்திற்கு அனுப்புவதன் மூலம் அரசாங்கத்தை கடும் சங்கடத்துக்கு உள்ளாக்கும் திட்டத்தை புலிகள் கொண்டுள்ளனர்.

எவ்வாறெனினும் ஏதேனும் ஒரு அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் புலிகள் மீது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனை சமாளிக்கும் பொருட்டே இடைக்கால நிர்வாக திருத்த யோசனை ஒன்றை அரசுக்கு புலிகள் அனுப்பவுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

புலிகளின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாமல் போகலாம் என அரசாங்க வட்டாரங்களில் சந்தேகம் நிலவுகிறது. அரசாங்கம் தங்களுக்கு அனுப்பிய இடைக்கால நிர்வாக யோசனையில் ஏராளமான குறைபாடுகள் இருப்பதாக கடந்த வாரம் பளையில் உரையாற்றிய தமிழ்ச்செல்வன் கூறியிருந்தமை குறிப்பிடத் தக்கது. ■

## ஒலிபரப்புச் சேவையை குழப்ப சதி
## T.B.C. பணிப்பாளர் குற்றச்சாட்டு

லண்டனில் இருந்து இயங்கி வரும் T.B.C. ஒலிபரப்புச் சேவையைக் குழப்ப புலிகள் முயற்சி செய்து வருவதாக இந்த ஒலிபரப்புச் சேவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராமராஜா தெரிவித்தார்.

T.B.C. சேவையில் பணியாற்றிய நான்கு ஊழியர்கள் சமீபத்தில் புலிகளின் நிர்ப்பந்தத்தின் பேரில் வேலையை விட்டு விலகிச் சென்றதோடு T.B.C. யின் நடுநிலையற்ற போக்குக் காரணமாகவே தாங்கள் பணியிலிருந்து விலகியதாகவும் கூறி வருகின்றனர்.

லண்டனில் செயற்படும் புலிகளின் வானொலிச் சேவைகள் வெறுமனே புலிப் பிரசாரத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுவதால் மக்கள் அவற்றிலிருந்து தூரமாகி சுதந்திர ஊடகங்களைத் தேடிச் செல்லும் நிலை இயல்பாகவே ஏற்பட்டு வருகிறது. இந்தப் பின்னணியில் T.B.C. யுடன் போட்டியிட முடியாத புலிகள் சார்பு ஒலிபரப்புச் சேவையாளர்கள் T.B.C. நிறுவனத்தின் பணியாளர்களை விலைக்கு வாங்கி அல்லது நிர்ப்பந்தித்து தமது ஊடகத்தின் மீது சேறு பூச முயற்சிப்பதாக ராமராஜா தெரிவித்தார்.

அண்மையில் தான் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு லண்டன் திரும்புவதற்கிடையில் குறிப்பிட்ட நான்கு ஊழியர்களும் விலகிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார். ■

## பழைய மரங்கள், கல்லறைகள் நடப்பட்டு குரங்குபாஞ்சான் முகாம் தோற்றத்தில் மாற்றம்

குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுவதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கும் புலிகள் தற்போது முகாமைச் சுற்றி பழைய மரங்களை நட்டு வருவதுடன் அண்மித்த பகுதிகளில் கல்லறைகளையும் நிர்மாணித்துள்ளனர்.

தற்போது இது புதிய முகாம் போன்று அல்லாமல் பல காலம் செயற்பட்டு வந்த முகாம் போல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வளர்ந்த மரங்களை வேரோடு பிடுங்கி வந்து நாட்டியிருக்கிறார்கள். தமது இறந்து போன போராளிகளின் கல்லறைகள் எனக் கூறி கல்லறைகளும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே குரங்குபாஞ்சான் முகாம் குறித்து பதிலளிப்பதற்கு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கால அவகாசம் கோரியிருந்ததாகவும் அறியமுடிகிறது.

இந் நிலையில் தற்போது இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் இந்த முகாம் குறித்துப் பேச்சு நடத்தப்போவதில்லை என்று புலிகள் கூறியுள்ளனர். ■

## ஹக்கீமுடன் இணைகிறார் நூர்தீன் மசூர்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழுவில் இருந்து விலகிச் சென்று அத்தாவுல்லா குழுவினருடன் செயற்பட்டு வந்த வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மீண்டும் ரவூப் ஹக்கீம் குழுவுடன் இணைந்து கொண்டிருக்கிறார். கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின்போது மசூர், ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒரே மேடையில் உரையாற்றினார்கள்.

அரசு புலிகளுக்கு வழங்கப் போகும் இடைக்கால நிர்வாக யோசனையில் முஸ்லிம்களின் நிலை குறித்து வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் முஸ்லிம் அமைச்சர்கள் கருத்தொருமிப்புக்கு வந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கும் நிலையில் எதிர் எதிர் அணியிலிருந்த இரண்டு அமைச்சர்களும் இவ்வாறு ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ■

## நைஜீரிய யுவதிகள் மன்னாரில் கைது

இரண்டு நைஜீரிய நாட்டு யுவதிகள் மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதன் பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒசேய் எவிலின் (வயது 21) டயோனா ஒமிஜி (வயது 22) இந்த இருவரும் மன்னார் நகரில் சந்தேகத்துக்கு இடமான விதத்தில் நடமாடிய போது கைது செய்யப்பட்டார்கள்.

சில காலத்துக்கு முன்னர் இலங்கையில் அகதியாகத் தஞ்சம் புகுந்த இவர்கள் இருவரும் தென்னிலங்கையில் வைத்துக் கைது செய்யப்பட்டு மிரிகான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அங்கிருந்து தப்பித்துச் சென்று மன்னாரில் நடமாடியபோது கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. ■

## இரணைமடு காட்டுப் பகுதியில் புதிய புலி உறுப்பினர்கள் பயிற்சி

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இரணைமடுக் காட்டுப் பகுதிக்குள் மீண்டும் அதிகளவில் தமது போர்ப் பயிற்சிகளை புலிகள் மேற்கொண்டு வருவதனால் அப் பகுதி பெரும் பதற்றமடைந்துள்ளதாக வன்னியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாரிய அளவில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட போர்ப் பயிற்சிகளின் பின்னர் மீண்டும் கடந்த வார இறுதியில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. இரணைமடுப் பகுதிக்குள் புலிகளின் பாரிய படைப்பயிற்சி முகாம் ஒன்று பல வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றமை தெரிந்ததே. இந்தப் பயிற்சி முகாமில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் சமாதான காலத்தில் புலிகளால் குடாநாட்டிலிருந்து படைக்குச் சேர்க்கப்பட்ட இளைஞர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சுமார் மூன்று மாதங்கள் தொடக்கம் 5 மாதங்கள் வரை இவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் கடந்த மாதம் 28, 29, 30, 31 ஆகிய திகதிகளில் இவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் பரீட்சைகள் நடைபெற்றதாகவும் இதனாலேயே அதிகளவில் இரணைமடுப் பகுதியில் வேட்டொலிகள் கேட்டதாகவும் அறிய முடிகிறது.

## இயக்கத்தை விட்டு விலக பெருமளவு விண்ணப்பங்கள்

புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி இயல்பான குடும்ப வாழ்வை மேற்கொள்ளும் பொருட்டு தங்களுக்கு விடுவிப்பு வழங்குமாறு கோரி புலிகளின் தலைமைக்கு, கீழ் மட்ட உறுப்பினர்களிடம் இருந்து பெருமளவிலான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தற்போதைய போர் நிறுத்த சூழலில் இயல்பு வாழ்க்கைக்குப் படிப்படியாக பழக்கப்பட்டுள்ள, தமது குடும்பங்களுடன் இணைந்து வாழ விரும்பும் சாதாரண புலி உறுப்பினர்களே இவ்வாறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இயக்கத்தை விட்டு விலகிச் செல்ல அதிக அளவிலான விண்ணப்பங்கள் கிடைத்ததை அடுத்து விடுவிப்பு வழங்கும் திட்டத்தைப் புலிகள் இடைநிறுத்தி இருப்பதாகவும் தெரியவருகிறது. ■

## ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சி

மட்டக்களப்பிற்கான ரயில் சேவை தடுக்கப்பட்டு சிலிப்பர் கட்டைகள் கழற்றிச் செல்லப்பட்ட விவகாரத்தில், ரயில் பாதை புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டவர்கள் மீது குற்றஞ் சுமத்தி இந்த விடயத்தைத் திசை திருப்ப எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டுள்ளது.

ரயில் பாதைகள் முறையாகப் புனரமைப்புச் செய்யப்படாமையினாலேயே மட்டக்களப்பிற்கான ரயில் சேவை நிறுத்தப்பட்டதாகக் கூறி, இதற்காக பொது மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்த கடந்த சில வாரங்களாகப் புலிகள் முயற்சி செய்தனர். ஆனால் இதற்காக மக்களைத் திரட்டுவதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக இந்த முயற்சி கைவிடப் பட்டதாகத் தெரியவருகிறது. ■

## சண்டை நின்றாலும் தொடரும் கொலைகளால் அச்சுறுத்தல்
## புலிகளின் நடவடிக்கையை கடுமையாக கண்டிக்கிறது மன்னிப்புச் சபை

“போர் நிறுத்த ஒப்பந்தத்தை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் எதிராளிகளை புலிகள் இயக்கம் தொடர்ச்சியாகக் கொலை செய்து வருவதற்கான தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றது” என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. “இலங்கையில் சண்டை நின்றுவிட்டது என்பதன் அர்த்தம் கொலைகள் முடிந்துவிட்டன என்பதல்ல” என Human Rights Watch அமைப்பின் ஆசியப் பிராந்தியத்திற்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரேட் எடம்ஸ் கூறினார். தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைச் சுட்டுக் கொல்வது புலிகள்தான் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்பு கடந்த 12ம் திகதி செவ்வாய்க்கிழமை பகிரங்கக் கடிதம் ஒன்றை வெளியிட இருந்தது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்தக் கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை, புலிகள், இலங்கை அரசு, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பவற்றுடன் இணைந்து வேண்டுகோள் விடுக்க இருந்தது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் இந்தக் கொலைகள் மிகுந்த அச்சுறுத்தலான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது.

தனது மத்தியஸ்த செயற்பாட்டிற்குக் குந்தகம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தில் இந்தக் கொலைகளை விசாரிப்பதில் இருந்து நோர்வே பின்வாங்கியிருப்பது குறித்தும் மன்னிப்புச் சபை தனது கவலையை வெளியிட்டிருக்கிறது. ■

## பிரதமருக்கு புலிகளிடம் இருந்து முக்கிய செய்தி?

வன்னியில் சில தினங்கள் தங்கியிருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன ஊடாக புலிகளின் தலைமை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முக்கிய செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதாக அறியக்கிடக்கிறது.

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளில் புலிகள் அதிருப்தி கொண்டிருப்பது தொடர்பிலும் அதிக அளவிலான சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டால் பாரதூரமான விளைவுகளை அரசு சந்திக்க வேண்டி வரும் என்ற தொனியிலும் எச்சரிக்கை கலந்த செய்தி ஒன்று புலிகளின் தலைமையால் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. ■

## "எனது யாழ் விஜயத்தைக் குழப்பியது அமைச்சரவை சகா ஒருவர்தான்"

— ஜோன் அமரதுங்க

தனது யாழ் விஜயத்தின்போது சில இடங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமைக்கு தன்னுடைய அமைச்சரவை சகா ஒருவரே பின்னணியில் இருப்பதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

“யாழ்ப்பாணத்திற்குச் சென்று எதிர்ப்புக் காரணமாகத் திரும்பி வந்த எம்மவர்கள்தான் எனது விஜயத்தின்போதும் எதிர்ப்புத் தெரிவிக்கும்படி துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு பின்னணியில் நின்று செயற்பட்டார்கள்” எனக் கூறியிருக்கிறார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க, ஜயலத் ஜயவர்த்தனவின் பெயரைக் குறிப்பிடாதபோதும் ஜயலத் இந்தக் குற்றச்சாட்டை தானாகவே மறுத்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது விஜயத்தை இறுதி நேரத்தில் இரத்துச் செய்துள்ளார்.

# முரசம்

## பத்திரிகைச் சுதந்திரமும் பலாத்காரமும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சென்ற வியாழன் அதிகாலை 'தினமுரசு' பத்திரிகை மட்டக்களப்புக்கு விநியோகத்துக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் வாழைச்சேனைக்கு அண்மையில் வழிமறிக்கப்பட்டு பலாத்காரமாக அபகரிக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இது போன்று 'தினமுரசு' பத்திரிகையின் விநியோகத்தைத் தடுக்கும் முயற்சி இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் நிகழ்ந்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதி 21 இன் பிரகாரம் இவ்வாறான செயற்பாடுகள் யுத்த நிறுத்த மீறலாகும். கடந்த தடவைகளிலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இத்தகைய முயற்சிகளை யுத்த நிறுத்த மீறலெனவே தீர்ப்பளித்துள்ளது. அத் தீர்ப்பினையும் மீறிப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பலாத்காரத்தால் முறியடிக்க முனையும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தபடி இருக்கின்றன. யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் நாட்டில் வன்முறைகளை நிறுத்தி ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் என்று எண்ணப்பட்ட பொதுவான எதிர்பார்ப்பு பொய்த்துப் போன நிலைமையைப் பிரதிபலித்துவரும் தொடரான பல நிகழ்ச்சிப் போக்குகளில் பத்திரிகைச் சுதந்திர மீறலும் இப்போது ஒரு பிரதான இடத்தைப் பிடித்துக்கொண்டது. இது தினமுரசுக்கு மட்டும் நிகழவில்லை. மட்டுநகரிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'தினக்கதிர்' பத்திரிகை கூட பலாத்காரமாக நிறுத்தப் பட்டிருந்தது. பத்திரிகைச் சுதந்திரமென்பது பத்திரிகைகள் சரியென எண்ணுபவற்றை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்துடன் மட்டும் முடிந்துவிடவில்லை.

பொதுமக்கள் விடயங்களை அறிந்துகொள்ளும் சுதந்திரத்தையும் ஒருங்கே கொண்டது.

எனவே பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றுவது வாசகர்களாகிய உங்கள் பொறுப்பும் கூட.

■ ■


மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# புலிகளின் மீது அதிகரிக்கும் அழுத்தங்கள்!

பேச்சுவார்த்தைக்கு முன் வந்தபோது புலிகள் பிரதானமாக எதிர்பார்த்த ஒரு விடயம் சர்வதேச அங்கீகாரமாகும்.

ஏனெனில், புலிகளுக்கு அரசியல் ரீதியிலான பாரிய பின்னடைவாக இருந்த விடயம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புலிகள் மீதான தடையாகும். இதனை நீக்கிக் கொள்ளும் மார்க்கமாக இப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு புலிகள் முயற்சி செய்தனர்.

பாலசிங்கத்தின் பேச்சுக்கள் பலவற்றில் இவ்வகையான அங்கீகாரம் பற்றிய எதிர்ப்பார்ப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாடுகள் பலவும் தம்மைத் தமது நாட்டுக்கு வரும்படி அழைப்பதாகப் பெருமிதத்தோடு தெரிவித்த அவர், ஏனைய நாடுகள் மத்தியில் தமது இயக்கத்தையும் சமதையாக அங்கீகரித்து பேச்சுவார்த்தை நடத்தப்பெற்ற முதலாவது டோக்கியோ மாநாடு போன்றவற்றால் புலிகளுக்குச் சர்வதேச அங்கீகாரம் ஏற்பட்டு வருவதாக அவர் வியாக்கியானம் வழங்கியிருந்தார்.



புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத்தண்டனை இலங்கை நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையிலும், பாலசிங்கம் அப்போது ஒஸ்லோவில் நிகழ்ந்துகொண்டிருந்த பேச்சுவார்த்தையை முறித்துக்கொள்ளாதபடி முன்னெடுத்துச் சென்றது எவ்விதத்திலேனும் இச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில்தான்.

ஆனாலும் இந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னரும் கூட பாலசிங்கத்தால் எந்தவொரு தடைசெய்த மேலைத்தேச நாட்டிலிருந்தும் புலிகள் மீதான தடையை நீக்கவைக்க முடியவில்லை.

மாறாக, புலிகள் கலந்துகொண்ட முதலாவது டோக்கியோ மாநாட்டிலேயே அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆமிடேஜ், புலிகள் வன்முறையையும் பிரிவினையையும் கைவிட வேண்டுமென எச்சரித்திருந்தார்.

இதற்கு முன்னரும் இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் ஆர்ஷ்லி வில்ஸ், புலிகள் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்கிறார்களென்றும், சிறுவர்களை படைகளில் சேர்ப்பது, கப்பம் வரி அறவிடுவது போன்ற யுத்த நிறுத்த மீறல்களைச் செய்கிறார்களென்றும் குற்றம்சாட்டியிருந்தார்.

இவ்வாறு அமெரிக்காவால் ஆரம்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன், புலிகள் இரண்டாவது டோக்கியோ மாநாட்டைப் பகிஷ்கரித்து, பேச்சுவார்த்தையை இடைநிறுத்திக்கொண்ட நிலையில் ஏனைய தரப்புக்களும் இணைந்துகொண்டு புலிகள் மீதான மிகுந்த அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நிலைமை தற்போது தோன்றியுள்ளது.

கனேடிய புலனாய்வுத்துறை புலிகளைக் கனடாவில் தடைசெய்ய வேண்டுமெனச் சிபாரிசு செய்துள்ளது. ஆயினும் பேச்சுவார்த்தைகளில் பாதிப்பு ஏற்படலாமென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சின் கரிசனையின் நிமித்தம் இதனை ஆறு மாதங்களுக்கு ஒத்திப்போடுவதாக அந்நாடு தீர்மானித்துள்ளது. அத்தோடு புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வராவிட்டால் கனடாவில் அடைக்கலம் புகுந்துள்ள இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பப்போவதாக கனடா எச்சரித்துள்ளதென இந்துஸ்தான் டைம்ஸ் இந்தியப் பத்திரிகை தெரிவித்தது. இதில் பத்தாயிரம் பயிற்றப்பட்ட புலிகள் கனடாவில் உள்ளதாக கனேடிய உளவுத் துறையால் மதிப்பிடப்பட்டுள்ளது. அடைக்கலமடைந்த இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பும் சாத்தியமில்லாவிட்டாலும், இவ்வாறு புலிகளாக அடையாளம் காணப்பட்டவர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுப்பதன் மூலம் புலிகளுக்கு வெளிவாரியான நிர்ப்பந்தமொன்றை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ளலாமென அவதானிகள் கருதுகின்றனர். கனடாவை நிர்ப்பந்தம் வழங்கும் மையமாகப் பயன்படுத்த அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ராஜதந்திர வட்டாரங்கள் ஆலோசித்திருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

இதேவேளை புலிகளின் மாற்று இயக்கப் படுகொலைகளுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் அண்மையில் கனடாவிலும், லண்டனிலும் நிகழ்ந்தன. கடந்த தசாப்தத்தில் மாற்றுத் தமிழ்த் தரப்பினரின் இவ்வாறான பகிரங்க புலியெதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்தது இதுவே முதற் தடவை.

இது இவ்வாறிருக்க, இது வரை சமாதானத்துக்கு ஊறு நேர்ந்துவிடக் கூடாதென்ற கருத்தில் யுத்த நிறுத்த மீறல்களின்போது புலிகளைச் சாடாதவாறு அவதானமாக நடந்துகொண்டு வந்த கண்காணிப்புக் குழுவினர் அண்மைய சம்பவங்களில் புலிகளுக்கு எதிரான தீர்ப்புக்களையும் வழங்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

கடைசியாக முல்லைத்தீவுக் கடலருகில் நிகழ்ந்த கப்பல் தாக்குதலில் புலிகள் அரசாங்கத்தின் மீது சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்களை கண்காணிப்புக் குழுவினர் நிராகரித்து, அரசாங்கத்திற்கு இத் தாக்குதலை நடத்த உரிமை உள்ளதெனத் தீர்ப்பளித்திருந்தனர்.

இதை விட, தற்போது திருகோணமலையில் கிண்ணியாப் பகுதியில் குரங்குபாஞ்சான் எனுமிடத்தில் புலிகள் முகாமமைத்திருந்ததை யுத்த நிறுத்த மீறலெனவும், புலிகள் அம் முகாமை அகற்ற வேண்டுமெனவும் தீர்ப்பளித்திருந்தனர்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இந் நிலையில்தான் தற்போது அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் புலிகள் மாற்று தமிழ்க் கட்சி உறுப்பினர்களைக்கொன்று வருவதாகவும், குரங்குபாஞ்சானில் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு மாறாக முகாம் அமைத்துள்ளனரெனவும் கடுமையாகச் சாடியிருந்தது.

**ஏற்க முடியாத விடயங்களைக் கொண்டுள்ளதாகக் கூறியபோதும் இம் முறை அவற்றை நிராகரிக்காமல், தமது மாற்று யோசனைகளைத் தெரிவிப்பதற்குப் புலிகள் தீர்மானித்ததற்கான பிரதான காரணம், இவ்வாறான சர்வதேச அழுத்தங்களை மாற்றுவதற்காகவே.**

சர்வதேச மன்னிப்புச் சபையும், ஹியூமன் ரைட்ஸ் வோச் அமைப்பும் புலிகள் மாற்றுக் கட்சியினரைக் கொலை செய்வது யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டியுள்ளன. இவ்விரு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் ஒருசேர இவ்வாறான குற்றச்சாட்டொன்றை மேற்கொண்டிருப்பதானது பாரதூரமானவிடயமாகவே கணிக்கப்படும்.

புலிகள் சர்வதேச நாடுகளிடமிருந்து அங்கீகாரத்தை எதிர்பார்த்த நிலை மாறி தற்போது சர்வதேச அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய ஒரு நிலைக்கு வரும் தலைகீழாகியுள்ளது.

பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்ட பின்னர் இடைக்கால அரசாங்கம் வழங்கி வந்த அடுத்த இரு இடைக்கால நிர்வாக யோசனைகளை புலிகள் நிராகரித்துவிட்டதிலும் தற்போது வழங்கப்பட்டிருக்கும் யோசனைகளை நிராகரிக்காது, அதற்கு மாற்று யோசனைகள் தெரிவிக்க முடிவு செய்துள்ளார்கள்.

ஏற்க முடியாத விடயங்களைக் கொண்டுள்ளதாகக் கூறியபோதும் இம் முறை அவற்றை நிராகரிக்காமல், தமது மாற்று யோசனைகளைத் தெரிவிப்பதற்குப் புலிகள் தீர்மானித்ததற்கான பிரதான காரணம், இவ்வாறான சர்வதேச அழுத்தங்களை மாற்றுவதற்காகவே.

தமது கோரிக்கைகளை வலுவான ஆதாரத் தளத்துடன் முன்வைத்து, அரசாங்கம் அதற்கு இணங்க முன்வராத நிலையில் அதனை அம்பலப் படுத்துவதனூடாகவே சர்வதேச சமூகம் தமது போராட்டத்தின் நியாயப்பாட்டை ஏற்க வேண்டுமென எடுத்துக் கூறுவதுமே இதன் நோக்கம்.

எனினும் இவை தற்போதைய முட்டுக்கட்டை நிலையைத் தாண்டிப் பேச்சுவார்த்தை தொடர வழி வகுக்குமா என்பது சந்தேகமே.

பேச்சுவார்த்தைக்குப் புலிகள் செல்லாத வகையில் அவர்கள் முன்வைக்கும் காரணங்களை சர்வதேச சமூகம் எந்தளவுக்கு ஏற்குமென்பதும் சந்தேகமே.

சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்கள் வேறு பாதையைப் பேசுவதாகவும், புலிகள் முன்வைக்கவுள்ள இடைக்கால நிர்வாகத்துக்கான திருத்தங்கள் வேறு விடயத்தைப் பேசுவனவாகவும் இருக்கும் நிலையில் சர்வதேச சமூகத்தின் மனோநிலை மாறுமெனவும் எதிர்பார்ப்பதற்கில்லை. ■

நரன்

அதிகரித்து வரும் சட்டவிரோதச் செயல்கள் மக்களின் இயல்பு வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. பன்மைத்துவம், ஜனநாயகம் என்று பேசக் கூடிய தமிழ் அரசியல் கட்சித் தொண்டர்கள் உட்பட உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்குப் பின்னால் இனந் தெரியாத நபர்களே இருந்துள்ளனர் என்பதையும் அந்த இனந் தெரியாத நபர்களாக புலிகளே இருந்துள்ளனர் என்பதையும் அண்மையில் மனித உரிமைகளுக்கான சர்வதேச அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் சாராம்சம் உணர்த்துகிறது. அமெரிக்காவும் கூட புலிகள் வன்முறைப் போக்கையும், படுகொலைகளையும் கைவிட்டு சமாதானப் பேச்சுக்களில் அர்ப் பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

இடம்பெறக் கூடிய படுகொலைச் சம்பவங்கள் ஒரே பாணியில் இடம் பெறுவதாலும், கொல்லப்பட்டவர்கள் புலிகளின் போக்கிற்கு மாறுபட்டவர்களாகவும் இருப்பதால் புலிகளையே நேரடியாக சந்தேகம் கொள்ள வைப்பதாக பி.பி.சி. செய்திச் சேவை கூட கேள்வி எழுப்பியதும் பலர் அறிந்த விடயம். ஆனால் இனந் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட எந்தவொரு கொலைக்கும் வேறு எந்த விதமான விரும்பத் தகாத விடயங்கள் தொடர்பில் புலிகளிடம் கேட்கப்பட்டபோதெல்லாம் அவற்றை முற்றாக நிராகரித்து வருகின்றமையும் யாவரும் அறிந்ததே.

நிராகரிப்பது மட்டுமில்லாது சமாதானத்தை விரும்பாத சில தீய சக்திகளே இவ்வாறான செயல்களைச் செய்து எமக்கு அபகீர்த்தியை விளைவிப்பதாகவும் அவ்வப்போது புலிகள் கூறுகின்றனர்.

அப்படியானால் யார் அந்த இனந் தெரியாத நபர்கள் அல்லது சமாதானத்தை விரும்பாத விஷமிகள் என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

இனந் தெரியாத நபர்கள் என்ற போர்வையில் கொலைகள், மிரட்டல்கள், கொள்ளைகள் தொடர்கின்றன. குறிப்பாக வவுனியாவில் தொடரும் கொள்ளைகள் மக்களைக் கலவரமடையச் செய்துள்ளது. அண்மையில் வவுனியா பூந்தோட்டம் அண்ணா நகர் பகுதியில் கோழிப்பண்ணை ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் வீடு உடைக்கப்பட்டு மூன்று இலட்சம் ரூபா பணம், ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான டிஜிட்டல் கமரா என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. மற்றுமொரு சம்பவமாக வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீட்டுக் கதவை அதிகாலை மூன்று மணிக்கு உடைத்து உட்சென்றவர்கள் வீட்டில் இருந்தவர்களை மிரட்டி 35 பவுண் தங்க ஆபரணங்களைச் சூறையாடியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஒருவரின் கையில்

# இனந்தெரியாதவர்கள் எப்போது இனங்காணப்படுவார்கள்?

ஆயுதம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இதே போல மட்டக்களப்பில் முஸ்லிம் மீனவர்களின் மீன்பிடி வள்ளங்கள், வலைகள், சிலிண்டர்கள், வெளி இணைப்பு இயந்திரங்கள் என 13 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் ஆயுதம் தாங்கிய நபர்களினால் கொள்ளையிடப்பட் டுள்ளன. தவிரவும் வவுனியா பண்டாரிக்குளம் தட்சணாக்குளம் பகுதியில் சுமார் 30 வயது மதிக்கத் தக்க இளைஞர் ஒருவர் ஒரு கை துண்டிக்கப்பட்டு சுடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களுக்கு யாரைக் குற்றவாளியாக இனங் காண்பது? இலங்கை பாதுகாப்புப் பிரிவினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே இவ்வாறான சம்பவங்கள் நடந்து முடிகின்றன அல்லது நடந்துகொண்டிருக்கின்றன. இனந் தெரியாத நபர்கள் பற்றிய தெளிவில்லாமலே நடக்கக் கூடிய எல்லாச் செயல்களுக்கும் இனந் தெரியாத நபர்கள் அல்லது ஆயுதம் தாங்கியவர்கள், அல்லது இளைஞர் குழு எனக் கூறிவிட்டுத் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறோம். எவரேனும் இது குறித்து ஆழமாக வியாக்கியானம் செய்ய விரும்புவதில்லை. காரணம் தனக்கும் மேல் குறிப்பிட்ட அடையாளம் காணப்படாதவர்களால் ஆபத்து ஏற்பட்டுவிடலாம் என்ற பயம். மக்களை அச்சுறுத்துகின்ற பயப் பீதிக்குள்ளாக்குகின்ற நபர்கள் குறித்து ஊடகங்கள் கூட போதியளவு பிரஸ்தாபிக்காது விடுவதானது குற்றச் செயல்களை நியாயப்படுத்தும் ஒரு மறைமுகப் போக்காகவே அமையும்.

வடகிழக்கைப் பொறுத்த வரையில் எவர் ஒருவர் கொல்லப்பட்டாலும் அவரின் கொலைக்கான காரணமாக அல்லது நியாயமாக அவருக்கு துரோகப் பெயர் சூட்டப்படுவதே வழக்கமாகும். அதாவது புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்போடு தொடர்புடைய நபர் என்பதாலேயே கொலை செய்யப்படுகிறார்.

இந்த நிலைமையை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்ளும் சில கிராமப்புற இளைஞர்கள் மிரட்டல், கொள்ளை என தங்கள் கைவரிசையைக் காட்டிவிட்டு இனந் தெரியாத நபர்கள் என்ற போர்வைக்குள் மறைந்துவிடுகிறார்கள்.

ஆக இலங்கை பொலிஸாரிடம் மாட்டிக்கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளும் இவர்கள் அதிக ஊடுருவல் தன்மையைக் கொண்டிருக்கும் புலிகளிடமும் பிடிபடாமல் தப்பித்துக் கொள்கிறார்களா? என்ற கேள்வி பலரையும் சிந்திக்க வைக்கிறது.

மாற்றுக் கட்சித் தமிழ் உறுப்பினர்கள் பாதுகாப்புக் கருதி தங்கள் அலுவலகங்களிலிருந்து வெளியேறவே முடியாமல் இருக்கும் இந்தச் சூழலில் பொலிஸாரின் கண்ணிலும், புலிகளின் கண்ணிலும் மண்ணைத் தூவிவிட்டு இவ்வாறு விஷமத்தனமான செயல்களைச் செய்யக் கூடிய வல்லமையுடையவர்கள் யார்? அல்லது பின்புலத்தில் இயக்குவது யார்? என்பன போன்ற கேள்விகள் சட்டம், ஒழுங்கை மதித்து நடக்கும் எவருக்கும் குழப்பமாகவே இருக்கும்.

புலிகளால் விஷமிகள் என்றும் சமாதானத்தைக் குழப்புவதற்காகவே செயற்படுகிறார்கள் என்றும் சொல்லக் கூடிய மர்ம நபர்கள் ஏன் இது வரை இனங் காணப்படவில்லை. இவர்கள் இலங்கை காவல் துறையினரிடம் பிடிபடாதவாறு கட்டுப்பாட்டுக்கு அப்பால் பதுங்கிக்கொள்கிறார்களா? அல்லது பிடிக்கக் கூடிய சந்தேக நபர்களாகத் தெரிகின்றபோதும் வேறு ஏதாவது அரசியல் அழுத்தங்கள் காரணமாக நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுகின்றார்களா? உண்மையில் குற்றங்களைக் குறைக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

சுற்றிவளைப்புகளும், கைதுகளும் மட்டும் நாட்டில் குற்றச் செயல்கள் நடைபெறுவதை நிறுத்திவிடுமா? உண்மையான குற்றவாளிகள் வெவ்வேறு வகையான அழுத்தங்கள் காரணமாக விடுவிக்கப்படுவதும், சில நாட்கள் தடுத்து வைக்கப்படுவதும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவதும், குற்றவாளியாக்கப்படுவதும் பாதுகாப்பு குறித்த மக்களின் பார்வையில் பதற்றத்தைத் தணிப்பதாக இருக்காது. மேலும் அதிகரிப்பதாகவே இருக்கும். எனவே மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது வெறுமனே யுத்தமில்லாத சூழல் மட்டும் அல்ல. மனித உரிமைகள் மதிக்கப்பட்டு, பொதுச் சொத்துக்கள் மட்டுமல்லாது தனியார் சொத்துக்களும் பாதுகாக்கப்பட்டுத் தங்கள் கருத்தை எதுவித அச்சமும் இன்றிய சூழலில் வெளிப்படுத்தக் கூடிய கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுகின்றமையும், இந்த நாட்டின் பிரஜை ஒருவர் தான் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்துக்கு யாருடைய தலையீடும் இல்லாமல் சென்று வரக்கூடிய சூழலும்தான் இயல்பு நிலை எனக் கருதலாம்.

துப்பாக்கிகளால் சுடுவது மட்டுமல்ல, அல்லது இடம் பெயர்வு மட்டுமல்ல நாளாந்த கொலைச் செய்தியும், நேரடியாகக் கொடுக்கப்படும் மிரட்டல்களும், அடையாளந் தெரியாமல் நடத்தப்படும் பொதுமக்களின் உடைமைகள் மீதான கொள்ளைகளும் தொடருவதானது எந்த வகையிலும் நாம் எதிர்பார்க்கக் கூடிய இயல்பு நிலையைத் தோற்றுவிக்காது. "திருடனாய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற பாடல் வரி போல இனந் தெரியாத நபர்கள் என்ற கவசத்துக்குள்ளிருந்து புரியப்படும் எந்தவொரு குற்றச் செயலும் தானே நின்றுவிடப் போவதில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாதவிடத்து சர்வதேச அழுத்தம் உட்பட சொந்த மக்களின் எரிச்சலுக்கும் ஆளாக நேரிடும் என்பதைக் காலம் உணர்த்தும். இறுதியாக, இனந் தெரியாத நபர்களை அல்லது ஆயுதம் தாங்கிய குழுவினரை அல்லது மர்ம நபர்களை இனங்கண்டு மக்களின் முன்னால் அம்பலப்படுத்த பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் இலங்கைக் காவல் படையினர் அதிக அக்கறையோடு செயலாற்ற வேண்டும் என மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

நாட்டில் யுத்தம் தொடங்கி இன்றைக்கு வரைக்கும் தொடரும் இவ்வாறான இனந் தெரியாதவர்களின் செயற்பாடுகளை மக்கள் சடுதியாக இணங்கண்டு கொள்கிறார்கள் அல்லது அனுமானித்துக்கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். ஆனால் ஊடகங்கள் வெளிப்படையாக மேற்படி சம்பவங்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை இனங்காட்ட மறுப்பதானது வியப்பளிக்கிறது. ■



## அதிரடி அய்யாத்துரை

**சங்கரியாரை** மத்திய கமிட்டிக் கூட்டத்தில அசைக்க ஏலாமல் போன பிறகு, திருமலைக் கமிட்டியால அவருக்கெதிரா அறிக்கையொண்டு வெளிக்கிட்டதெல்லே. சம்பந்தமானவர்தான் வரி வரியாச் சொல்லி எழுதிவிச்சவராம். கமிட்டியில யாரும் இடக்காப் பேசாமலிருக்க ரெண்டெழுத்தாரில் ரெண்டு பேரையும் கூட்டத்துக்குக் கூட்டிக்கொண்டு போய் பக்கத்தில வைச்சிருந்து விஷயத்தை ஒப்பேத்தினவராம். குழிபறிப்பு கூட்டணிக்காறருக்குப் பாரம்பரியக் கலையெண்டது நிசம்தான் பாருங்கோ.

**வவுனியாப்** பொலிஸார் ஒரு போதைவஸ்துக் கிளிக்கை மடக்கிப் பிடிச்சிருக்குங்கோ. யாரப்பா உந்தப் புலிக் கோட்டுக்குள்ளேயும் வாலாட்டுறதெண்டு பிடிபட்ட ஆக்கள விசாரிச்சுப் பாத்தால் தூக்கி வாரிப் போட்டுதுங்கோ. கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிக் குழுத் தலைவர் ஒருவற்ற முன்னாள் பாதுகாப்பாளர் ரெண்டு பேர், முன்னாள் சாரதி ஒருத்தர், இன்னாள் உறுப்பினர் ஒருத்தரெண்டு பிடிபட்டிருக்கினமாம். "ஏதாச்சும் போதையொண்ணு எப்போதும் தேவையப்பா, இல்லாட்டி மனிஷனுக்கு சக்தியில்லை" எண்ட 'அன்பே சிவம்' படப்பாட்டை வேதவாக்கா எடுத்திட்டினம் போல. ம்...கட்சிப் பெயரில 'லோ' ஒட்டிக் கிடக்குது. வெளியால 'லோ' தாண்டி ஓட்டம் நடக்குது. உருப்பட்டாப் போலதான்!

**கிரிக்கற்** டீம் வளிய பழைய ஜாம்பவான்கள் ரிட்டயர் பண்ணிற மாதிரி எங்கட பேச்சுவார்த்தைகளிலயும் பெரும் தலைகள் ஒதுங்கிக்கொள்ளப் போறதா கதைகள் அடிபடுகுது. அங்கால, சுவிஸ் பேச்சுகளுக்கு பாலாண்ணை ஒதுங்கப் போறதா ரெண்டெழுத்தாருக்குச் சார்பான பத்திரிகையொண்டு சொல்லுது. இங்கால மொறகொடயார் ஒதுங்கக் கேட்டிருக்கிறார். ஏன், மாங்காய் புளிச்சுதோ, வாய் புளிச்சுதோ யாருக்குத் தெரியும்?

**கிட்டடியில** யாழ்ப்பாணம் போன அமைச்சர் ஜெயலத்துக்கு 'மக்கள்' குடுத்த மரியாதைய லைட்டா எடுத்துக்கொண்டு இப்ப உட்துறை அமைச்சர் ஜோன் யாழ்ப்பாணம் போய் அநுபவப்பட்டு வந்திருக்கிறார். கச்சேரிப் பக்கம் கால் வைக்கக் கூடாதெண்டு 'மக்கள்' மறிச்சுப் போட்டினமாம். அமைச்சர் வருவாரெண்டு நினைச்சு கச்சேரிக்குத் தலைகாட்டின ரவிராயருக்கும் 'மக்கள்' நல்ல 'மங்களமான' வார்த்தைகளால 'அபிஷேகம்' செய்து, பாராளுமன்றத்தை விட்டு விலகச் சொல்லி அன்புக் கட்டளையிட, ஆள் தலைக்கு மொட்டாக்குப் போட்டுக்கொண்டு ஓட்டம் கட்டிட்டாராம். உட்துறை அமைச்சருக்கு அபயம் குடுத்த மண்ணெண்ணையார் இப்ப முழுசாட்டத்தில இருக்கிறாராம். 'மக்கள்' எந்த நேரம் எதைச் செய்வினமெண்டத யார் கண்டது?

**அமெரிக்காக்காறரும்** அதட்டலுக்கு மேல அதட்டல் விட்டுப் பாக்கினம். அவைக்கு மேலால அமுனுஷ்டி இன்ரநேஷனல், கியூமன் ரைட்ஸ் வோச் எண்டெல்லாம் கண்டனம் வருகுது. கனடாக்காறர் நேர கார் எடுத்துக்கொண்டு வன்னிக்குப் போய் 'வோர்ன்' பண்ணிட்டு வந்ததாயும் கேள்வி. என்னதான் நடந்தாலும், எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேல்சென்றபடிதான் இருக்குது. இந்தா, அமெரிக்க அறிக்கைக்குப் பின்னமும் வன்னியில, மட்டக்களப்பிலயெண்டு மூண்டு நாலு 'பொடி' விழுந்திட்டுது. இது பனங்காட்டு நரி பாருங்கோ. அமெரிக்காவாம் கொக்காம்.

**சுவாரசியமான** சங்கதியொண்டு பாருங்கோ. ரெலோ எம்.பி சிவாஜிலிங்கத்தாரிட்ட, தான் இசக்கத்தை விட்டு விலகிப்போடுவனெண்டு எச்சரிக்கை விட்டிருக்கிறாராம் சீறிற காந்தர். எல்லாம் ஒரு வீட்டுப் பிரச்சினைதான் காரணமாம். சீறிற காந்தருக்கு நெருங்கின ஒருத்தற்ற வீட்டத்தான் லிங்கத்தார் அடாத்தாப் பிடிச்சு தன்ர பாரளுமன்ற அலுவலகமாக்கியிருக்கிறாராம். உரிமையாளர் சீறிற காந்தருக்குள்ளால கேட்டும் லிங்கத்தார் மறுத்திட்டாராம். இந்த மாசம் 23, 24ம் திகதிகளில மட்டக்களப்பில நடக்க இருக்கிற ரெலோ மத்திய கமிட்டிக் கூட்டத்தில வெடி கிளப்பிறனெண்டு நிக்கிறாராம் சீறிற காந்தர். ம்... வீட்டுக்கு வீடு வாசற்படி!

உங்கள் வியாபாரத்தின்
விருத்திக்கு
முரசில் விளம்பரம் செய்யுங்கள்

**விளம்பரப் பகுதி**


## வாழ்க்கையின் காலோட்டமும் பரிகாரமும்



**வாழ்வில் நீங்கள் வெற்றி பெற என்ன வழி?**
**கை ரேகை ஜோதிட நிபுணர், மனோவியல் தத்துவ ஆலோசகர் கே.கங்காதரன் அவர்கள்.**



கை ரேகை நிபுணத்துவம் பெற்றவர்களிடம் உங்கள் கைரேகையை கொடுத்தால் பிறப்பிலிருந்து இறப்பு வரை தெரிந்துகொள்ளலாம். வெளி நாட்டவருக்கு விஷேச சலுகை உண்டு.

இன்னும் மனங்கவர்ந்த வாழ்க்கை அமைய, கணவன் மனைவி பிணக்கு தீர, தெய்வீக மூலிகை வசியம் பெற, திருமணத் தடை நீங்க, புத்திர பாக்கியமின்மை, ஜாதகம் கை ரேகை மூலம் நிவர்த்தி பெற.

**K.Gangatharan**
MA.PHD (MKUSD), J.P.(AI)
162. Kotahena Street, Colombo - 13.
Dial - 0777- 388860, 01-344832, 342464.


# மன்னார் தொண்டர் ஆசிரியர் நியமனத்தின் குளறுபடிகள் தொடர்பிலான மறுப்பறிவிப்பு

1990ல் இடம் பெயர்ப்பிக்கப்பட்ட முஸ்லிம்களின் படித்தவர்கள் தொடர்பிலான பல்கலைக்கழக உள்ளிடுகை, ஏனைய கல்விகள் அனைத்துமே அகதிகள் என்ற கோதாவில் தடை செய்யப்பட்டன. அத்துடன் சிங்கள மொழி கலந்த தமிழில் 'அனாத கட்டி'யென்று அறிவையும் அனாதையாக்கியவர்கள் என்றே நினைத்துள்ளார்கள் பலர். இந் நிலையில் இடம் பெயர்க்கப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காகவே பல உரிமைகள், உடைமைகள், உள்ளக் குமுறல்கள் அனைத்தும் இழந்து உயிர் வாழ்வதற்கு வழி தெரியாத நிலையில் அரசு அல்லாத எல்லா நிறுவனங்களிலும் பலர் தமது ஜீவனோபாயத்திற்காக, வயிற்றுப் பிழைப்பிற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் இணைந்து அற்ப சொற்ப சம்பளங்களில் கடமையாற்றினர். அரசு எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு 2003-06-19ல் இடம் பெயர்விற்கு முன்பாக தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றியதைக் கருத்திற் கொண்டே இந் நியமனம் ஆசிரியர் தரம் 3-11க்கு நேரடியாக உள்ளீர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றைய நியமனங்களுக்குரியவர்கள் கடந்த காலங்களில் பயிலுநர் ஆசிரியர்களாகவே ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் கிராம அபிவி நிறுவனம் என்பதும் முழுதான அரச சார்பற்ற நிறுவனஇதில் கடமையாற்றியவர் தனது நலன் கருதி ஓய்வூதியத்துடிய தொழிலை நாடுவது அவருக்குகந்ததே.

இது தொடர்பில் குற்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட நியமன இணைப்பு உயிாசன் குளம். இதன் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பா சிபாரிசு செய்தல் என்பது எந்த வகையில் பொருத்தம். உதராசன் குளப் பாடசாலை எந்த வகையில் உரியவருக்கு கை வழங்கும் பாடசாலை என்பது யாருக்கும் புரியாத புதிர். நியமனம் வழங்குவது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதன் தீர்ப்பே இவழியில் வழங்கப்பட்ட நியமனம். இடம் பெயர்க்கப்பட்ட மும்களுக்கு வேலை வழங்குவது பிழையா? படித்தவர்கள் உதாகம் செய்வது தடையா? ஆரம்பத்தில் வேலைக்கு வருபவ எல்லாம் வேலையைப் பற்றித் தெரிந்துகொண்டா வருகின்?

குற்றம் சாட்டப்பட்டவ86 முதல் 1990 இடம் பெயரும் நாள்வரை கொண்டச்சி பலையில் தொண்டர் ஆசிரியராக எதுவித வேதனமுமின்றிப் பரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இப் பாடசாலை கு காலப்பகுதியில் அனர்த்தத்தினால் முழுதாக அழிக்கப்பட்டு இயமலுள்ள பாடசாலை என்பதைவிட தன்தரையாகவே உள்ள கள் நிறைந்த இடமாகவே உள்ளதால்தான் இவருக்கு உயிாசன்குளம் பாடசாலை வழங்கப்பட்டது.

எனவே இதில் குறித்துக்டப்பட்ட குற்றச்சாட்டு எள்ளளவும் உண்மையற்றது. இவ்வுத்திகம் வழங்கப்படாத நிலை பற்றி இதுவரையில் குறிப்பிடாத நடண்மைக்குப் புறம்பான தகவலைப் பத்திரிகைக்கு எழுதி அனுதானது வேதனைக்குரியதே.


## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,
Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)
நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 20.08.2003 முதல் 23.08.2003 வரை
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 0777-602513.



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.


**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



## ஓம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீக உச்சாடனங்கள்



நான் செய்விக்கும் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகமே. இதனால் என் மூலம் நன்மை பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ? இலி என்ன உங்கள் பிரச்சினை, என்னிடம் கெடுதல் வேலைக்கு இடமில்லை. வெளிநாட்டவர்கள் மட்டுமே 24 மணித்தியாலமும் குறை நிறைகளைப் பேசித் தீர்க்க வாய்ப்புண்டு. பிரிந்தவர்கள் என் மூலமாக ஒன்று கூட, காதல் கைகூட, ஓடிப்போனவர் தேடி வர, குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்க கடன் சுமை குறைய, குபேர சாந்தி வாழ்வு பெற, மனப்போக்கு நிலை தடுமாற்றத்தை கட்டுப்படுத்த, தீராத நோய் தீர, திடீர்திருமணம் கைகூட, வெளிநாட்டில் தங்கி வாழ, குடிபோதையை நிறுத்தி சுகமான வாழ்வு பெற, தலை முடி உதிர்வதைத் தடுத்து நீண்டு வளரச் செய்ய, குபேர வாழ்வு பெற்றுச் சிறப்புடன் வாழ, அக்கு வேறு ஆணி வேறாக கைரேகை பார்த்துக்கொள்ள, காண்ட அடிப்படையில் ஜாதகம் கணித்து இதுதான் உங்கள் வாழ்வு எனத் தெரிந்துகொள்ள. என்னை காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை நேரில் சந்திக்கலாம். கடிதத்தில் பதில் பெற நேர அவகாசம் இல்லை. இன்னும் எனக்கு வந்த கடிதங்களில் சில.
(இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை)



**முறக்கொட்டாஞ்சேனை வாசகி : செய்தது பலித்துவிட்டது.**
ஐயா! எனது மகள் திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் உண்டு. கணவர் 06 ஆண்டுகளாக பிரான்ஸில் உள்ளார். கணவன் ஜெனார்த்தனிடம் போக முடியாமல் ஆறு ஆண்டு காலமாக மிகுந்த மன வேதனையுடன் இருந்தபொழுது பத்திரிகையில் ஐயா அவர்களின் விளம்பரத்தைக் கண்டு அவரோடு தொடர்புகொண்டு கொழும்பு சென்று அவரின் ஆலயத்தில் பரிகார வேலைகளைச் செய்த பின் 2003ம் ஆண்டு 05ம் மாதம் 09ம் திகதி எனது மகள் தன் கணவன் இருக்கும் இடம் செல்லுவாள் என்று ஐயா கூறினார். ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன் 07ம் திகதியே பிரான்ஸ் போய்விட்டார் என்ற செய்தியை சந்தோசத்துடனும் பெருமையுடனும் அறியத் தருவதோடு ஐயா அவர்கள் ஆண்டாண்டு காலம் மக்களுக்கு நீண்ட நிலையான சேவையை செய்ய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**லண்டன் அன்பரின் மடல் : கடன் தொல்லை நீங்கி கையில் பணம் சேர்ந்து, மனைவியுடன் ஒன்று சேர்ந்தது.**
வணக்கத்துக்குரிய ஐயா அவர்களுக்கு!
துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கும் எனது குடும்பத்திற்கும் வாழ்க்கையில் வெளிச்சத்தைக் காட்டியமைக்கு எனது முதற்கண் நன்றி ஐயா! எனது வாழ் நாளில் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். தற்போது வெகு விரைவில் கனடாவிற்கு எனது மனைவியுடன் போகவுள்ளேன். நிம்மதியாகவும், சந்தோசமாகவும், கடன் தொல்லைகள் இல்லாமலும் கை நிறையச் சம்பாதித்து வாழ்க்கையில் சகல செல்வங்களும் (குழந்தைச் செல்வம் உட்பட) பெற்று எல்லோருக்கும் உதவி செய்து அவர்கள் சந்தோசத்தில் நான் சந்தோசத்தைக் காண எல்லாம் வல்ல துர்க்கை அம்மனின் அருள் மூலமாக எனக்கு வெற்றியளிக்கச் செய்து தந்த உங்களை மனித தெய்வமாகவே நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை உலகில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் சாமி....

**ஜேர்மன் அன்பரின் மடல் : மகளின் திக்குவாய் குணமாகியது.**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு பிறவியில் இருந்து திக்குவாயாக இருந்த எனது 09 வயது மகளை திக்குவாயில் இருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகின்றோம்.

**லண்டன் அன்பரின் மடல் : எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு! என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்து என்னைச் சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் : 39 வயதில் அதிசயத் திருணம்.**
பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரில் இருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்குக் கோடானு கோடி நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்: குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி.**
அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஐயா! வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத் தடை நீக்கிப் பரிகாரம செய்து, குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்ஸில் இருந்து இக் கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

**ஹற்றன் அன்பரின் மடல் : தீராத தலைவலி தீர்ந்துவிட்டது.**
மதிப்புக்குரிய ஐயாவுக்கு! நெடு நாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

**இத்தாலி அன்பரின் மடல் : சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி.**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா! வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோசமாகச் சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்: போதை அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டவர்.**
அன்புக்குரிய ஐயாவுக்கு! எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு எமது குடும்பத்துக்குப் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் : ஜாதகத்தில் கூறியது பலிதம்.**
மரியாதைக்குரிய ஐயா! உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றி அறியாமல் இருந்த எனக்கு இத்தனையாம் ஆண்டு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**நீர் கொழும்பு அன்பரின் மடல்: புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்.**
மாட்சிமை பொருந்திய ஐயா! சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்தி பேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னைப் பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்குக் கண்ணீரால் நன்றி கூறுகிறேன் ஐயா.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிசய குண்டல பூஜை.**
மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா! என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விஷேசமாக நடைபெறும் அக்கினி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மைத் துன்பத்தில் இருந்து காத்து வந்ததிற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**சுவிஸ் அன்பரின் மடல்: குழந்தைப் பாக்கியம் கிடைத்தது.**
துர்க்கை சித்தர் அவர்களுக்கு! திருமணம் நடந்து நீண்ட காலமாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்த எனக்கு தங்களின் பரிகாரத்தின் பின் குழந்தை கிடைக்கும் திகதியைக் கூறினீர்கள் ஐயா! நீங்கள் குறிப்பிட்டபடியே எனக்குத் தங்களின் ஞான சக்தியின் மூலம் குழந்தை கிடைத்தது. நானும் எனது குடும்பமும் மகிழ்ச்சியாய் உள்ளோம். எனது நன்றிகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஸ்ரீ துர்க்கை அம்மனின் சக்தியால் பேசும் மழலை.**
மனித தெய்வமே! உங்கள் தெய்வ சக்தியால் பேசாத எம் 03 வயது மழலையைப் பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நன்மைகள்.

**சுவிஸ் அன்பரின் மடல்: கணவன் – மனைவி பிணக்கு தீரல்.**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு! சின்னா பின்னமா இருந்த எமது குடும்பத்தை 7000 மைலுக்கு அப்பால் இருந்த வண்ணம், ஸ்ரீ துர்க்கை கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல்: ஔடத மூலிகையால் நீண்டு வளர்ந்த கூந்தல்.**
ஐயா அவர்களுக்கு! நீண்ட காலமாக எனது முடி உதிர்ந்து வெளியில் செல்வதற்கு வெட்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே இருந்தேன். ஐயா அவர்களின் ஔடத மூலிகையால் எனது கூந்தல் வளர்ந்து, கறுப்பாய், அடர்த்தியாய் உள்ளது. ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் : திருமணத் தடை நீங்கியது.**
கருணை உள்ளம்கொண்ட சுவாமிஜீக்கு! எனது அக்காவுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று முடிவு செய்திருந்தோம். ஆனால் ஐயா அவர்களிடம் வந்து சாந்திப் பரிகாரம் செய்த பின் அக்காவுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்து சந்தோசமாக உள்ளார். ஐயா அவர்களுக்கு எமது நன்றிகள்.

**மட்டக்களப்பு அன்பரின் மடல் : பிரிந்த காதலி ஒன்று சேர்ந்தது.**
என்னை வாழ வைத்த எனது தெய்வம் ஐயா அவர்களுக்கு!
எனது வாழ்க்கை திசைமாறி என்ன செய்வது என்று தடுமாறிய வேளையில் எனது நண்பனின் மூலமாக தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன். தங்களின் மாந்திரீக பூஜையின் பலனாக என்னைப் பிரிந்து சென்ற என் காதலி என்னிடம் மீண்டும் வந்தாள். எங்களுடைய இரு வீட்டாரின் முழுச் சம்மதத்தோடு எங்கள் இருவருக்கும் நல்லபடியாகத் திருமணம் நடைபெற்றது. ஐயா அவர்கள் கூறியது போல் எனது திருமணத்தின் பின்பு எனக்கு ஒரு நல்ல அந்தஸ்தோடு சந்தோசமாக நலமாக வாழ்கிறேன். எனது இந்த வாழ்க்கை ஐயா அவர்கள் எனக்களித்த அருள் காணிக்கையே! ஐயாவுக்கு எனது பல கோடி நன்றி கலந்த வணக்கம்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்: அதிர்ஷ்ட வீடு அமையப் பெற்று நோய் நொடி இன்றி வாழ்கின்றோம்.**
எனது வாழ்வுக்கு ஒளி ஏந்திய எங்கள் குல தெய்வமாகிய ஐயா அவர்களுக்கு!
தங்களின் அருள் ஞான சக்தியால் தங்களிடம் எனது ஜாதகத்தைக் கணித்து பரிகாரங்கள், பூஜைகள் செய்த பின் எனது வீட்டை முழுமையாக கட்டி முடித்தேன். வீட்டில் உள்ளவர்கள் நோய் நொடியின்றிச் சந்தோசமாக இருக்கின்றார்கள். கையில் பணம் தங்குகிறது, பொருளாதார நிலையில் ஐயாவின் அருளால் திருப்தியாக உள்ளோம். எனது குடும்பத்தாருக்கு மதிப்பும், மரியாதையும் எமது சமூகத்தில் கிடைப்பதற்கு வழியமைத்துக் கொடுத்த ஐயா அவர்களுக்கு நாம் விசுவாசத்துடனும், நன்றிக்கடன் பட்டவர்களாகவும் இருப்போம்.

**மன்னார் அன்பரின் மடல் :**
ஐயா! உங்களிடம் தெய்வீக ஞான ஒளிச் சக்தி இருப்பதை மனதார உணர்கிறேன். நன்றி.
மன்னார் கனகசபை.


**உலக மாந்திரீக சக்கரவர்த்தி**
**பேராசிரியா டாக்டர் பி.கே.சாமி (J.D G.AN) J.P**

HOT LINE: 01- 344832, 01- 470615

PROF. DR. P.K. SAMY (J.D.G.AN) J.P
SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM, 162. KOTAHENA STREET. COLOMBO-13.
T.P.: 342464, 342463, 431137. FAX: 0094-1-344831. E.MAIL: drpksamy@sttnet.lk.


## நான்காம் ஆண் நினைவஞ்சலி

தோற்றம் : 1926.01.01 மறைவு : 1999.08.13



திரு. முத்து சின்னறை


ஆண்டுகள் நான்கு
மறைந்தாலும்
அணையாத தீபமாய்
எங்கள்
உள்ளத்தில்
ஒளிர்விட்டுப்
பிரகாசிக்கும் எங்கள்
அன்புத்
தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய

*இறைவனைப் பிரார்த்தும் மனைவி, பிள்ளைகள்.*

தகவல்: எஸ்.சாந்தி, இல.C, 6, 1சாய்சாபுர தொடர்மாடி, மொறட்டுவ.
தொ.பே :- 025, 070-212417.

## 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில
07 - 11 - 1947



ஆண்டவன் அடியில்
15 - 07 - 2003

### அமரர் திரு.ணகுலசிங்கம் திருச்செல்ம கிருபாநிதி

**உயிர்த்தராசதளம், முருங்கன்.**

பண்பின் உறைவிடமாய், த்தின் இருப்பிடமாய் விளங்கிய ஐயா! நீங்கள் மண்ணுலகிலிு விண்ணுலகு சென்று மாதம் ஒன்றாகினாலும் எம் விழிகளின் நுளிகள் காயவில்லை. உங்களின் நினைவலைகள் எம் மனக்கமுன் என்றுமே நீங்காதுள்ளது. ''உம் வழியில் நாம் இறை செல்வோம்'' அன்பு மனைவி ஜசிந்தா மேரி, அன்புப் பிள்ளைகாஜி (சுவிஸ்), அனுரா (இந்தியா), சேம்சன், சூட்டி, செல்வி, ஜிம்சருமக்கள் செபமாலை (சுவிஸ்), செல்வராஜ் (இந்தியா), அன் சகோதரர்கள், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிகள்.

**இன்னொருவர் பார்வையில்**

# இடைக்கால நிர்வாகம் குறித்து யாழ்ப்பாண மக்களின் கவலை

**தேசிய சமாதானப் பேரவையின் முன்னணி உறுப்பினரான ஜெகான் பெரேரா அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பின்னர் Daily Mirror (5 ஆகஸ்ட் 2003) இதழுக்காக எழுதியுள்ள கட்டுரையின் மொழியாக்கம்.**

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக சமாதான முயற்சிகளில் ஒரு தேக்கம் காணப்படுவது குறித்து கொழும்பிலும், தென்பகுதியிலும் ஒரு வித கவலை தோன்றியுள்ளது. இந்த தேக்க நிலை மேலும் பல காலம் நீடிக்கக் கூடாது. புலிகளின் கப்பல்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டமை, டோக்கியோ மாநாட்டில் பங்கேற்கப் புலிகள் மறுத்தமை, குரங்குபாஞ்சான் பகுதியில் அமைத்த புதிய முகாமை அகற்றுப்படி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்த வேண்டுகோளை ஏற்கப் புலிகள் மறுத்து வருகின்றமை என்பன உட்பட பல சம்பவங்கள் இடம் பெற்று தென்பகுதி மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் பயமுறுத்தல்களைத் தோற்றுவித்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக தென்பகுதியில் எதிர்க் கட்சிகள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் மேலும் பலம் பெற்று வருகின்றன.

ஆனால் வடபகுதியில், அது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியிலும் சரி, படையினர் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்திலும் சரி மீண்டும் போர் ஆரம்பித்துவிடலாம் என்ற எண்ணத்தைப் பரவலாக மக்கள் கொண்டிருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணத்தில் காணிகளின் விலைகள் கடந்த இரு வருடங்களுக்கு முன்பு இருந்ததை விடவும் ஐந்து முதல் பத்து மடங்கு அதிகரித்துள்ளது. கேந்திர முக்கியமான சில இடங்களில் புலம் பெயர்ந்துள்ளவர்கள் காணிகளைக் கொள்வனவு செய்ய முனைவதும், சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் காணிக் கொள்வனவுகளில் ஈடுபடுவதும் இந்த விலை அதிகரிப்புக்குக் காரணமாகி இருக்கலாம். வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஏ9 பிரதான வீதியின் அருகே புதிய கட்டடங்கள் அமைப்பது தீவிரமாகியுள்ளது. இப் பிரதான வீதியும் இப்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பி அவற்றைத் திருத்திப் புனரமைத்து வருகின்றனர். இவற்றில் முதலீடு செய்கின்றனர். எதிர்காலம் பாதுகாப்பானதாக இருக்கும் என்ற நம்பிக்கையும், கணிப்பீடும் தான் இதற்குக் காரணமாகும்.

ஏனைய எந்தச் சமூகத்தையும் விட வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் போர் தொடர்பாக அச்சத்தையும், அருவருப்பையும் தான் கொண்டுள்ளனர். ஏனெனில் அதுதான் இவர்களின் வீடுகளை உடைத்தது. வாழ்க்கையைச் சேதப்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவரும் சொல்லக்கூடிய துன்பக் கதைகள், துயர அநுபவங்கள் பலவற்றைக் கொண்டிருக்கின்றனர். காணாமற் போனவர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவரான பி.செல்வராஜா, ஜே.பி.யின் மகன் 1996ல் படையினரால் கைதாகிக் காணாமல் போயிருக்கிறார். தனது வயதான மகளுக்கு ஒரு வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளும் பெரும் விருப்பத்துடன் காணப்படும் அவரது மற்றுமொரு மகள் வீதியோரத்தில் அம்புலன்ஸ் வண்டியொன்றினால் மோதப்பட்டு 'கோமா' நிலையில் இருக்கிறார்.

புலிகள் மீண்டும் யுத்தத்துக்குச் செல்வதை எவரும் விரும்பவில்லை. எனினும் தமிழர்களின் பேரம் பேசும் சக்தியாகக் கருதப்படும் புலிகளின் இராணுவ பலம் பேணப்பட வேண்டுமென்பதை என்னுடன் பேசிய பலரும் எடுத்துக் கூறினார்கள். ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றவர்களை விட படைபலத்துடன் கூடிய பிரபாகரன் பேச்சுவார்த்தை மேசையில் பலம் பொருந்தியவராக இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

போர் நிறுத்த ஒப்பந்த காலத்தைப் புலிகள் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலப்படுத்துவதற்காகவே பயன்படுத்துகின்றனர் என்பதில் எதுவித சந்தேகமில்லை. ஆனால் புலிகள் இராணுவ ரீதியான தயாரிப்புகளில் ஈடுபட்டிருப்பது இப்போது மீண்டும் ஒரு யுத்தத்தைத் தொடங்குவதற்காகவா என்ற கவலை பெருமளவில் காணப்படவில்லை.

## புலிகளின் இலக்கு

சிங்கள தேசியவாதத்திடமிருந்தும், அரசாங்க ஆளுமைகளிலிருந்தும் விடுபட்டு தமிழர் உரிமைக்காகப் பேசுவது, சுயாட்சி பெறுவது என்பன போன்றவற்றைத் தமிழ்த் தேசியவாதம் புலிகளிடம் ஒப்படைத்து உள்ளது. ஆகையால் ஒரு சமூகம் என்ற வகையில் புலிகள் தமது இராணுவ பலத்தைப் பேணுவது மற்றும் கட்டி எழுப்புவதை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் தனிநபர்கள் என்ற வகையில் ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் பிள்ளைகள் புலிகளின் ஆட்சேர்ப்புக்குள் அகப்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாகவே உள்ளனர். இதனால் புலிகளின் ஜனநாயக மறுப்புப் போக்குகளுக்கு எதிராகச் செயற்படும் சக்திகள் வெளிப்படுத்தும் அச்சங்களுக்கு ஆதரவு காட்டுகின்றனர். இந்த சக்திகளைப் புலிகள் துரோகிகள் என்று எண்ணுவதையும் அவர்கள் நிராகரிக்கின்றனர்.

எத்தகைய போதாக்குறைகள் இருந்தபோதும் பலரிடமிருந்தும் நான் தெரிந்துகொண்ட செய்தி என்னவெனில், சமாதான முயற்சிகள் காரணமாக யாழ்ப்பாண மக்கள் இராணுவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பெரும் பயனைப் பெற்றுள்ளனர் என்பதே. புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் ஒரு சமூகம் என்ற வகையில் பலவீனப்பட்டுவிடக் கூடாது எனக் கருதினாலும் அதனை எதிர்மறையாகக் கருதாமல் சாதகமாகவே நோக்குகின்றனர். ஆனால் அண்மைய எதிர்காலம் தொடர்பான கவலை பரவலாகக் காணப்படுகிறது. அது மீண்டும் யுத்தம் தொடங்கக் கூடும் என்பதனால் அல்ல. மாறாக இடைக்கால நிர்வாகம் குறித்த பிரேரணைகளால் ஆகும்.

உதாரணமாக புலிகளின் இராணுவ நலன்களும், மக்களின் மனிதாபிமானத் தேவைகளும் தொடர்புபடுகின்ற அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்வு போன்ற விடயங்களில் மக்களின் குரல் பலமாக ஒலிக்கின்றது. ஆனால் புலிகளின் இராணுவ நலன்களும், மக்களின் மனிதாபிமான தேவைகளும் முரண்படுகின்ற விடயங்களான சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்தல், புலிகளின் நிதி அறவீடுகள் போன்றவற்றில் மக்களின் குரல் வாயடைத்து மௌனித்து நிற்கிறது.

எனவே மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்றால், தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தக்கூடிய ஜனநாயக சூழல், பொது நலன்களைப் பாதிக்கக்கூடியது எனக் கருதும் விடயங்களுக்கு எதிராக செயற்படும் சுதந்திரம் என்பவற்றுக்கு புலிகள் அங்கீகாரம் வழங்க வேண்டுமென்பதையே. புலிகள் இதற்கான சமிக்ஞைகளை வெளிப்படையாகத் தெரியப்படுத்தாத வரையில் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கவலை பரவலாகக் காணப்படுகிறது. தென்பகுதி மக்கள் அநுபவிக்கும் அதேயளவு ஜனநாயக சுதந்திரம் தமக்கும் வேண்டுமெனக் கருதுகின்றனர்.

இழந்த உரிமைகளைத் துரிதமாக மீளப் பெறுவதில் தாமதம் காணப்படுவது மக்களைப் பொறுமை இழந்தவர்களாகச் செய்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருபவர்கள் புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடைக்கால நிர்வாகம் குறித்துப் பெரும் கவலை கொண்டுள்ளனர். இத்தகைய இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் புலிகளும், அவர்களது ஆதரவாளர்களும் மட்டுமே பயன் பெறுவர் எனவும், அப்படியில்லாதவர்களுக்கு எந்த இடமும் கிடைக்காது எனவும் அவர்கள் கருதுகின்றனர். புலிகளின் ஆதரவாளர்கள் அல்லாதவர்கள் ஓரங்கட்டப்பட்டுவிடுவார்கள் எனவும், தமக்குரியவை வந்து சேராமல் போய்விடும் எனவும் அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். இவ்வாறு கவலை கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை ஒப்பிட்டளவில் சிறியதாயினும் படித்தவர்களான நாகரிகம் மிக்கவர்களான இத்தகையவர்களின் எண்ணம் கவனத்திற்குரியதாகும். இவ்வாறானவர்களை ஓரங்கட்டுவதற்குப் பதிலாக புலிகள் அவர்களுக்குரிய இடத்தை வழங்க முன்வர வேண்டும் என்பதே பொதுவான எதிர்பார்ப்பு ஆகும்.

பெரும்பாலான மக்கள் தத்தம் சொந்த வீடுகளில் வாழ்த்து தத்தம் தேவைகளுக்காக உழைக்கக் கூடிய, கௌரவமான சூழல் தேவை என்றே கவனம் கொண்டுள்ளனர். நான் சந்தித்த பலரும் அதயுயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் தமது வீடுகளுக்குச் செல்ல முடியாமல் இருப்பதாக விசனம் கொண்டுள்ளனர். ஒரு வீடு என்பது ஒரு வாழ்வு இடம் அல்லது ஒருவரது வாழ்நாள் உழைப்பு முழுவதற்குமான சேமிப்பு ஆகும். கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளாகப் பல்வேறு கட்டங்களிலும் சேதமாக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் வீடுகளைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கூடப் பலருக்குக் கிடைக்கவில்லை.

தமது வீடுகளை இழந்த பலரும் கசப்புணர்வுகளைக் கொண்டுள்ளனர். அல்லது தமது குடும்பத்தினரின் வாழ்நிலங்களை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுத் தருவதாக வாக்குறுதி வழங்கும் புலிகளுக்கு ஆதரவு காட்டுகின்றனர்.

**வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு படிக்கல்லாகவே அமைய வேண்டும் எனக் கருதுகின்றேன். இந்தப் படிக்கல்லில் இருந்து சமஷ்டி முறையாட்சி, ஜனநாயகம், பேச்சுச் சுதந்திரம், சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்படுவது வரையில் செல்ல வேண்டும். எனவே இடைக்கால நிர்வாகம் தொடர்பான இணக்கப்பாடு காணப்படும்போது அமைப்பு வடிவம், அதிகாரம், இடம்பெறும் சக்திகள் என்பன தொடர்பாக அதிக கவனத்துடன் ஆராயப்பட வேண்டியது தேவையாகும்.**

**–ஜெகான் பெரேரா**

## வளப் பற்றாக்குறை

தேவைகளின் அடிப்படையிலான வளங்களில் பெரும் பற்றாக்குறை காணப்படுவது இடைக்கால நிர்வாகம் தொடர்பிலான மற்றுமொரு முக்கிய பிரச்சினை ஆகும். சொந்த இடங்களில் மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தில் இது முற்றிலும் உண்மை. பெரும்பாலான வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளதுடன் மீளமைப்பதற்கு ஒரு இலட்சம் முதல் மூன்று இலட்சம் ரூபா வரையில் தேவை என மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. இத்தகைய பெருமளவு நிதி ஒதுக்கீட்டை வழங்கக் கூடியளவுக்கு இடைக்கால நிர்வாகம் பணபலம் பெறுவது அசாத்தியம். பல்லாயிரக்கணக்கான மக்களின் பெருமளவிலான நிதித் தேவைகளை ஈடுசெய்து மாற்று வசிப்பிடங்களைக் கட்டி எழுப்ப வேண்டியுள்ளது. இதில் சர்வதேச கொடையாளி நாடுகள் மிக முக்கியமான பங்கை ஆற்ற முடியும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் வீடுகள் உள்ளடக்கப்படுவது என்பது மற்றுமொரு பிரச்சினையாகும். அதியுயர் பாதுகாப்பு வலயம் என்பது பலாலி விமானப் படைத்தளம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. பதிலுக்கு படையினர் எங்கெங்கு நிலைகொண்டுள்ளனரோ, அதை யதைச் சுற்றி எல்லாம் அதியுயர் பாதுகாப்பு வலயம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சொந்த வீடுகளுக்குத் திரும்புவதற்கு மக்கள் அனுமதிக்கப்படாத வரை போதுமான வளங்கள் பெற்றுக் கொடுக்கப்படாத வரை பதற்றத்தை உருவாக்கும் குவி முனையாக இப் பிரச்சினையே இருக்கும். எனவே அரசாங்கமும், புலிகளும் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமானத் தேவைகள் என்பவற்றுக்கு இடையில் சமநிலையைப் பேணுவதற்கான உடனடிப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும். இதனைத் தாமதப்படுத்துவது எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. இறுதியான அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கான பாதையில் அதியுயர் பாதுகாப்பு வலயத்தைப் பேணுவதற்கான தேவை குறைவு என்பதும் முன்னுரிமை கொடுக்க வேண்டிய ஒரு விடயம் ஆகும்.


புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு இல்லையாயின் புலிகளின் தலைமையில் உருவாக்கப்படக் கூடியதொரு இடைக்கால நிர்வாகத்தினால் கூட மக்களின் தேவைக்கேற்ற வேகத்தில் செயற்பட முடியாது போகும் என்பது வெளிப்படை. நெருக்கமான ஒத்துழைப்பு இல்லையேல் இடைக்கால நிர்வாகம் பொருளாதார வளங்களைப் பெறுவதோ, அமைப்பு ரீதியான அதிகாரத்தைப் பெறுவதோ கூடச் சாத்தியம் இல்லாதது ஆகும்.

இது ஒரு ஆபத்தான சூழலுக்கு இட்டுச் செல்லலாம். அரசாங்கமும் புலிகளும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்தும் நிலையைக் கொண்டு வரலாம். ஒரு சமூக அமைப்பு என்ற வகையில் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு படிக்கல்லாகவே அமைய வேண்டும் எனக் கருதுகின்றேன். இந்தப் படிக்கல்லில் இருந்து சமஷ்டி முறையாட்சி, ஜனநாயகம், பேச்சுச் சுதந்திரம், சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்படுவது வரையில் செல்ல வேண்டும். எனவே இடைக்கால நிர்வாகம் தொடர்பான இணக்கப்பாடு காணப்படும்போது அமைப்பு வடிவம், அதிகாரம், இடம் பெறும் சக்திகள் என்பன தொடர்பாக அதிக கவனத்துடன் சிந்திக்க வேண்டும்.

நன்றி : டெய்லி மிரர்
ஆக்கம் : ஜெகான் பெரேரா

# சுயமரியாதை - சமதர்மத்திற்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டு ஈ.வே.ரா. பெரியார்!

நமக்கு அதிகமாகத் தெரிந்த எம்.ஜி.ஆர்., கருணாநிதி, அண்ணா ஆகியோருக்கு வழிகாட்டியாகவும் வரலாற்றுத் தலைவனாகவும் இருந்தவர்தான் ஈ.வே.ரா. பெரியார். "10 வயதுக்கு மேல் எந்தப் பள்ளிக் கூடத்திலும் நான் படிக்கவில்லை" என்ற மாமேதைதான் அவர்.




தமிழகத்தை தொடர்ந்தும் ஆட்சி செய்து வரும் திராவிடக் கழகத்தை ஸ்தாபித்து அதிலிருந்து விலகி இருந்தவர். பெரியாரின் பெயரைச் சொல்லி ஆட்சிபீடமேறியவர்கள் பெரியாரின் போராட்டத்தைப் பெருமளவில் முன் னெடுக்கவில்லை. அப்படி என்னதான் பெரியார் போராடினார்?

60 வருடங்களாக, தனது இறுதி மூச்சு வரையும் சுயமரியாதையையும் சமதர்மத்தையும் அடைவதற்கான வாழ்க்கையாகவே அவரது எழுத்தும் பேச்சும் சிந்தனையும் கழிந்தது. தீண்டாமைக்கு எதிராகவும், பெண் உரிமைக்காகவும் போராடியதில் இன்னுமே யாரும் பெரியாரை மிஞ்சிவிடவில்லை. ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இழிவையும் கொடுமையையும் நீக்குதல்தான் தீண்டாமை விலக்கின் தத்துவம் என்கிறார் பெரியார். இதனை அவர் எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள்.

"தீண்டாமை, பார்க்காமை, பேசாமை, கிட்ட வராமை ஆகிய இவை ஒருவரையாவது விட்டவை அல்ல. ஒருவர் தனக்குக் கீழ் இருப்பவரை தீண்டாதவர், பார்க்காதவராக நடத்துவது, அப்படி நடத்துபவர் தனக்கு மேல் உள்ள நபர்களுக்கு தீண்டத் தகாதவராகவும் பார்க்கக் கூடாதவராகவும் இருப்பது, இவர்கள் அனைவரையும் சேர்த்து நம்மை ஆளுகின்ற சாதியாய் இருக்கின்ற ஐரோப்பியர்களுக்கு நாம் தீண்டத் தகாதவராக இருப்பது என்கிறார். யோசித்துப் பார்த்தால் ஒவ்வொருவருக்குள்ளும் இத் தீண்டாமை, பார்க்காமை, பேசாமை புரையோடிப்போயிருப்பது தெரிகிறது.

மனிதர்களுக்குள் இருக்கும் ஏற்றத்தாழ்வை ஒழித்து மானிடத்தின் உன்னத உயிரைத் தக்க வைப்பதற்குத் தனது வாழ்க்கையைப் பூரணமாக அர்ப்பணித்த ஒரு மகான் - சிந்தனைவாதிதான் பெரியார். இவருடைய இயற்பெயர் ராமசாமி. இவரை எல்லோரும் பெரியார் என்றே அழைத்தனர். அழைக்கின்றனர். மரணித்தும் மீள மீள உயிர்த்து நிற்கும் மனிதர்களில் இவரும் ஒருவர்.

# நீங்களும் பழகலாம்! மாற்றுக்குரல்கள்



தரு - ஆச்சர்யா

# மனசும் வயிறும்



வளர்முக நாடுகளில் அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சி ஒன்றில் பெண்கள் தங்களுக்குத் தேவையான உணவை உண்பதில் பெரும் சவாலை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் தங்களுக்குத் தேவையான உணவை உண்பதில் உள்ள தடைதான் என்ன? வறுமைதான் இதற்குப் பிரதான காரணம் என யாராவது சொல்ல முற்பட்டால் அதனை விட மகா தப்பு இருக்கவே முடியாது என்கிறது இவ் ஆராய்ச்சி முடிவு.

எத்தனை பெண்கள் நேரம் தவறாமல் சாப்பிடுகிறார்கள்? அப்படியே சாப்பிட்டாலும் எத்தனை பெண்களுக்கு ஆண்கள் சாப்பிடுகின்ற அளவுக்கு சத்துள்ள நிறை உணவு கிடைக்கின்றது. வீட்டில் இருக்கும் பெண்களுக்கு மட்டுமல்ல, வெளியில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் இதே நிலைதான். பெருமளவிலான பெண்களிடம் கேட்டுப் பாருங்கள். நிம்மதியாக இருந்து சாப்பிட நேரம் இல்லை என்பதே பதிலாக இருக்கிறது.

கடமை, தியாகம், அர்ப்பணம் என்ற பட்டங்களைச் சூட்டிச் சூட்டியே நமது பெண்களை நாம் பட்டினி போட்டு, சித்திரவதை செய்து வந்திருக்கிறோம் என்று நிறுவுகிறது இவ் ஆய்வு. இது உங்களுக்கு ஆச்சரியம் தருவதாக இல்லையா?

பெருமளவிலான வீடுகளில் பெண்கள் அதிக வேலையில் ஈடுபடுத்தப்படுவதால் அவர்களுக்கு சாப்பிடுவதற்கு நேரமோ, சமையலின் காரணமாக விருப்பமோ வருவதில்லை. ஆண்கள் சாப்பிட்ட தன் பின் அநேக பெண்கள் சாப்பிடுவதால் உணவுப் பற்றாக்குறை வேறு.

பெண்களின் இந்த நிலைக்கு ஆண்கள் மட்டும் காரணமல்ல என்கிறது அந்த ஆய்வு. பெண்களும் தான் பிரதான காரணம் என்கிறது. மற்றவர்கள் மேல் அன்பும், பரிவும் இருக்க வேண்டும்தான். ஆனால் அந்தப் பரிவும், அன்பும் நம் மீதும் இருக்க வேண்டும் என்கிறது.

பெண்களுக்கு சத்துள்ள நிறை உணவுகள் கிடைக்காததற்குப் பிரதான காரணம் பெண்களே தங்கள் மீது அக்கறை கொள்ளாததுதான். நம் உடல் பற்றி, பசி பற்றி நமக்கே நம் மேல் அக்கறையும் கவலையும் ல்லாதபோது பிறருக்கு இருக்க வண்டுமென்று எதிர்பார்ப்பது மகா வறு. தன் பசியைக் கூடப் பொருட் டுத்த முடியாதபடி, தாய்மை ணர்வும் உள்ளமும் பெண்களின் யிற்றைக் காயப்போடுகிறது.

ஏழைப் பெண்களுக்கோ ாய்மை உள்ளமும், வறுமையும் யிற்றை வதைக்கிறது. படித்துச் ம்பாதிக்கும் வசதியான பெண் ளுக்கு தன் மீது இல்லாத அக் றை காரணமாக இந் நிலை தாடர்கிறது. தாய்மையான பெண் ளுக்கு உணவு இப்படியொரு பிரச் னை என்றால், இளம் பெண்களை ம் இப்போது ஊட்டச்சத்தில்லாத ரச்சினை வாட்டி வதைக்கிறது. ளர்முக நாடுகளில் உள்ள பெண் ரில் 80 சதவீதமானோர் அதிக நாயாளியாகி வருவதற்குப் பிர ன காரணம் இவ் உணவுப் பிரச் னைதான் என்கிறது அந்த ஆய்வு.

# பொழுதை எப்படிக் கழிப்பது?



பலர் அடிக்கடி தமக்குத் தெரிந்தவர்களைப் பார்த்துக் கேட்கும் கேள்வி "உனது பொழுது போக்கு என்ன?" இதற்கு அவர்கள் பல விதமான பதிலைக் கூறுவார்கள். நமது பொழுதை என்ன செய்வதென்று தீர்மானிக்க முடியாதவர்களின் நிலை மிகவும் மோசமானதுதான்.

அதுவும் ஆக்கபூர்வமான வழியில் தங்கள் பொழுதைக் கழிக்கத் தெரியாதவர்கள், பொழுதை எப்படிப் போக்கலாம் எனத் தலையைப் பிய்த்துக்கொண்டிருப்பவர்கள் இன்று நம் மத்தியில் அதிகம் பேர் உள்ளனர்.

ஒவ்வொரு நாளையும் எப்படிக் கழிப்பது என்பதை முதலிலேயே திட்டமிட்டுக் கொள்ளாததன் விளைவே இது. காலம் பொன் போன்றது, போனால் திரும்பி வராதது என்பார்கள். இது முற்றிலும் சரியானதே. காலத்தை வீணாகப் போக்கினால் வாழ்க்கையை வீணாகக் கழிக்கிறோம் என்றுதானே அர்த்தம். பயனற்ற விசயங்களில் பொழுதைக் கழிக்காமல் இனியாவது நாம் பயனுள்ள விசயங்களில் நமது பொழுதைச் செலவிட முன் வருவோமா? நமது பொழுது என்பது நமக்கு மட்டுமல்ல, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பயன் தரும் வகையில் செலவிடப்படுவதுதான் அர்த்தம் மிக்கதாக அமையும்.

# வன்முறையில் உருவாகும் பண்பாடு

உலகில் இன்று வன்முறையே பெரும் மோசமான பண்பாடாகி வருகிறது. மானிட சமூகம் எதிர்நோக்கும் முக்கிய சவால்களில் வன்முறை மீதான மக்களின் நாட்டம் முக்கிய இடத்தை வகிக்கிறது. வளர்ந்து வரும் இளந் தலைமுறை வன்முறை மீது அதிக நம்பிக்கை வைத்துச் செயலாற்ற இப்போதே தயார்ப்படுத்தப்பட்டு வருவது எதிர்கால உலகைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு அதிக அச்சத்தைத் தருகிறது.

பல ஆண்டுகளாக அரசுகளுக்கிடையே தோன்றிய இம் மோசமான வன்முறைக் கலாசாரம் உலக மக்களிடையேயும் அதிகம் பரவிவிட்டிருக்கிறது. ஒவ்வொரு குடிமகனும் தனக்குச் சொந்தமான ஒரு நடத்தை முறையைப் பின்பற்றுகிறான். மற்றவர்களின் பண்பாட்டையோ, நடத்தையையோ அவன் ஏற்கும் மனோநிலையில் இன்று இல்லை. பலம் வாய்ந்த நிலையில் வாழ முடியாவிட்டால் உயிர் வாழ்வது சாத்தியமில்லாமல் ஆகிவிட்டது. எல்லா நிலைகளிலும் இது நிகழ்கிறது. பாண் வாங்குவதற்காக வரிசையில் நிற்கும்போதும் இதுதான் நிகழ்கிறது.

இந்தப் போக்கினால் சட்டவிரோதமான செயற்பாடுகள்



திகரிக்கின்றன. சமூக ங்கீகாரம் பெற்ற விடயங்களாக வை இன்று மாறிவிட்டன. ட்கொலை, கடத்தல், ாதைப்பொருள் வியாபாரம், ன்முறை என உலகு இன்று திகம் ஆக்கிரமிக்கப்பட்டு கிறது.

சமாதானமான உலகை வு காண்பவர்களுக்கு டுமல்ல இவைகள் சவால்கள். ன்பாகவும் நேர்மையாகவும் ழக்கமாகவும் வாழ்வோம் என ழ்க்கையை அமைக்க ற்படுபவர்களுக்கும் இன்றைய லகம் பிரதான ாலாகத்தான் உள்ளது. ந்தியின் உலகம் லாவதியாகிவிட்டதா?

# தேர்தல் வருமா...?

இலங்கையின் அரசியல் சூழல் இன்னும் நிச்சயமற்ற ஒன்றாகவே இருக்கிறது. ஒருபுறம் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள சமாதான முயற்சி தற்போது கேள்விக் குறியில் உள்ளது. மறுபுறம் இலங்கையின் தற்போதைய அரசாங்கமே இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

சமாதான முயற்சியென்பது இரு வழிகளிலும் அடைபட்டு நிற்கிறது. சமாதானத்துக்கான ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம் என்பது யுத்த நிறுத்த மீறல்களால் ஆட்டங் காணப்பட்டு இறுதியாக திருகோணமலை, கிண்ணியாப் பகுதியில் குரங்குபாஞ்சான் எனும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் அமைத்துள்ள முகாம் தொடர்பான சர்ச்சையில் வந்து நிற்கின்றது. இம் முகாமை அமைத்தது யுத்த நிறுத்த மீறலென்றும், புலிகள் அதனை அகற்றிக்கொள்ள வேண்டுமென்றும் கண்காணிப்புக் குழு தீர்ப்புக் கூறியும், அப் பகுதி தமது கட்டுப்பாட்டுப் பகுதியெனவும் முகாமை அகற்ற முடியாதெனவும் புலிகள் மறுத்து வருகின்றனர். இதற்கிடையில் அம் முகாமைப் படைபலம் பயன்படுத்தி அகற்றும் திட்டங்களும் இராணுவத் தரப்பில் வகுக்கப்பட்டு அரசாங்கத்தின் தலையீட்டால் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதுவே தற்போது தத்தளித்துக்கொண்டிருக்கும் சமாதானச் சூழலின் இறுதி மூச்சாக அமைந்திருக்கும். குரங்குபாஞ்சான் விடயத்தில் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பை புலிகள் உதாசீனம் செய்த நிலையில், கண்காணிப்புக் குழு இவ் விடயத்தில் தொடந்து தம்மால் எதுவும் செய்ய இயலாதென்றும் அதனால் இதனை பேச்சுவார்த்தையின் மத்தியஸ்தர்களான நோர்வேத் தரப்பினரே கையாண்டு தீர்க்க வேண்டுமெனவும், பொறுப்பை நோர்வேக்கு மேல் சுமத்தி விட்டனர்.


இது தொடர்பாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கில் நோர்வே சார்பில் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்துள்ள போதும், குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தில் தமது நிலைப்பாட்டில் மாற்றமேதும் செய்வதற்கில்லையென்றும் சொல்ஹெய்முடன் இது தொடர்பாக எதுவும் பேசுவதில்லை யென்றும் வெறுமனே இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயங்களையே பேசவுள்ளதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது ஒருபுறம் யுத்த நிறுத்தத்தில் முட்டுக்கட்டை நிலையை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டு, இடைக்கால நிர்வாக சபை புலிகளால் கோரப்பட்டு, அது தொடர்பான அரசாங்கத்தின் அடுத்தடுத்த இரு ஆலோசனைகளும் புலிகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தற் போது மூன்றாவது ஆலோசனை பற்றிய கேள்விக்குறியில் விவகாரம் நிற்கிறது.

மூன்றாவது ஆலோசனையைப் பொறுத்தவரை புலிகள் அதனை உடனடியாக நிராகரிக்காது தமது நிலைப்பாடுகள் அடங்கிய திருத்தமொன்றை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். எனினும் இது குறித்து புலிகளின் தலைமையின் எண்ணத்தைப் பிரதிபலிக்கக்கூடிய தமிழ்ச்செல்வன், பாலகுமார் போன்ற முக்கிய உறுப்பினர்களின் பேச்சுக்கள் அவர்கள் இவ்வாறு திருத்தங்களை முன்வைக்க முடிவு செய்ததன் நோக்கம் வேறென்பதையே வெளிப்படுத்துகிறது. அரசாங்கத்தின் இரண்டு பக்க அறிக்கையை வைத்துக்கொண்டு நாம் தமிழ் மக்களின் இரண்டாயிரம் வருட வரலாற்றைப் புரட்டிக் காட்டப் போகிறோமென பாலகுமார் பேசியுள்ளார். இதே வேளை, "அரசாங்கத்தின் யோசனைகளில் பல குறைபாடுகள் உள்ளன, எனினும் முன்னவை போல இதையும் நிராகரித்தால் சர்வதேச சமூகத்தின் மத்தியில் புலிகள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்று அரசாங்கம் பிரசாரம் மேற்கொள்ள வாய்ப்பாகிவிடும், அதனால் சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் பிரச்சினையை எடுத்துக் காட்டும் வகையில் நாம் எமது நிலைப்பாடுகளை முன்வைக்கவுள்ளோம்" என்று தமிழ்ச் செல்வன் உரையாற்றியுள்ளார். ஆக, இத் திருத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்காக அன்றி சர்வதேச சமூகத்துக்காகவே புலிகள் முன் வைக்கிறார்கள் என்பது இங்கு தெளிவாகிறது. இந் நிலையில் இத் திருத்தங்கள் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியத்தைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்க முடியாது.

அத்தோடு, "இத் திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் தொடரும்" எனவும் தமிழ்ச்செல்வன் கூறுகிறார். அப்படியானால் புலிகளின் திருத்தத்தை யிட்டு ஆராயுமுகமான பேச்சுவார்த்தைகளுக்கும் புலிகள் தயாரில்லை என்பதையே சுட்டிக்காட்டுகிறார். இந் நிலையில் பேச்சுவார்த்தைக்கான எதிர் காலமும் கேள்விக்குறியிலேயே வந்து முடிந்துள்ளது.





இவை ஒருபுறமிருக்க, மறுபுறம், இலங்கையின் தற்போதைய அரசாங்கம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே சந்தேகமானதாக ஆகியுள்ளது.

அரசாங்கத்தை எந்நேரத்திலும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமுள்ளது. இவ் அதிகாரத்தைப் பறிக்க - ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டுதல் என்ற பெயரில் அமைச்சர் பீரிஸின் வாயிலாக ரணில் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் படுதோல்வியடைந்ததுடன், ஜனாதிபதியின் கரத்தை வலுப்படுத்தியும்விட்டது.

இத் தீர்ப்பு வெளியான கையோடு, அரசாங்கம் தானே அரசாங்கத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலுக்குச் செல்லும் மனோநிலையில் இருந்தது. ஆனால், அவ்வாறு அரசாங்கம் தானே அரசாங்கத்தைக் கலைக்க முடியாதென்றும், ஜனாதிபதியே அரசாங்கத்தைக் கலைக்க முடியுமென்றும், அதனால் அரசாங்கம் கலைக்க விரும்பினால் ஜனாதிபதி புதிய அரசாங்கமொன்றை அமைக்கலாமென்றும் தெரியவந்ததனால் அவ்வெண்ணத்தை அரசாங்கம் கைவிட்டது.

தற்போது மீண்டும் அரசாங்கத்தைக் கலைப்பது பற்றிய பேச்சுக்கள் முக்கிய அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்களே உள்ளன. அதற்குள் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை மாற்றியமைத்தால்தான் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குப் பயனுள்ளதாக இருக்குமென அவர்கள் கருதுகிறார்கள். ஜனாதிபதி தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்து மாற்று அரசாங்கமொன்றை அமைக்க முயற்சிக்கலாம். அவ்வாறானால் அதற்கான பெரும்பான்மை ஆசனங்களை அவர் உறுதி செய்ய வேண்டும். இதற்கு ஐ.தே.க. விலிருந்தும் சிறிதளவு உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டியிருக்கும். அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான முனைப்பான முயற்சிகள் நடந்தபடியுள்ளன.

இவ்வாறு புதிய அரசாங்கத்தை அமைத்தாலும், கட்சிக் கொள்கைக்கு விரோதமாகச் செயற்பட்டதாகக்கூறி ஐ.தே.க. விலிருந்து மாறிச் சென்றவர்களை கட்சியிலிருந்து நீக்க முடியும். அப்படிச் செய்தால் அவர்கள் பாராளுமன்ற ஆசனங்களையும் இழப்பர். இதனால் புதிய அரசாங்கம் பெரும்பான்மையை இழக்க நேரிடும். எனினும் இவ்வாறு கட்சி நீக்கம் செய்ய முடியாத வகையில் ஐ.தே.க.வின் கொள்கைக்கமைவாகவே இவ் உறுப்பினர்கள் இயங்கியதாகக் கூறும் வகையில் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளை வகுத்து நீதி மன்றத் தீர்ப்பை வெற்றி கொள்ளவும் பொ.ஐ.மு. முயற்சிக்கலாம்.

அண்மையில் பொ.ஐ.மு.வின் முன்னாள் அமைச்சரான எம்.எச்.எம். பௌசி பொ.ஐ.மு.விற்கு மாறாக, ஆளும் அராங்கத்துக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்தாகக் கூறி அவரைக் கட்சி நீக்கியபோது அவர் தான் பொ.ஐ.மு. கொள்கைப்படியே நடந்து கொண்டதாக வாதாடி வென்று, கட்சியில தொடர்ந்து செயற்படுகிறார்.

இது போன்ற முயற்சியை பொ.ஐ.மு.வும் புதிய அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் கையாள லாமென்றாலும், அதில் வெற்றி வாய்ப்பு அரிதே. எவ்வாறாயினும் அரசாங்கமமைத்து சிறிது காலத்தின் பின்னராவது தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் வரலாம். அவ்வாறானால் தேர்தலில் பொ.ஐ.மு. விற்கான வெற்றி வாய்ப்பு என்ன என்பதை அது மதிப்பீடு செய்யவும் வேண்டியுள்ளது.

இதற்கான பரீட்சார்த்த முயற்சியாக, மாகாண சபைத் தேர்தல்களை ஜனாதிபதி நடத்தப் பார்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அவ்வாறு உடனடி மாகாண சபைத் தேர்தல் எதையும் வைக்கப் போவதில்லையென்று ஜனாதிபதி வட்டாரங்கள் மறுத்துள்ளன.

தேர்தலொன்று அறிவிக்கப்பட்டால் அதன் பின் புதிய கட்சியோ, கூட்டமைப்பொன்றோ பதிவு செய்து அதற்கான சின்னத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. பொ.ஐ.மு. விற்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை இன்னும் முடிவடையவில்லை. எனவே இவ்வாறான ஒப்பந்தமொன்றை ஈட்டிய பின்னரே தேர்தலை நடத்திப் பார்க்க ஜனாதிபதியும் பொ.ஐ.மு.வும் விரும்புவர். அத்தகைய தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பை மதிப்பிட்ட பின்னரே அரசாங்கத்தை மாற்றியமைக்கும் முயற்சியை முன்னெடுப்பர். மாகாண சபைக்கான இப் பரீட்சார்த்த தேர்தல் முயற்சியில் ஒருவேளை எதிர்பாராத அளவு வெற்றி கிட்டினால், அரசாங்கத்தைக் கலைத்து நேரடியாகத் தேர்தலுக்குச் செல்லவும் சிந்திக்கலாம்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை ஒவ்வொன்றாக வைப்பது உசிதமல்லவென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். ஆனால், ஒன்றை நடத்திப் பார்த்து, அதன் பின் மற்றவற்றை நடத்துவதே தமக்கு ஆபத்தில்லாத அணுகு முறையென பொ.ஐ.மு. கருதினால் ஜனாதிபதி அதற்கும் உடன்படலாம். ■

---

# மாற்றுத் தமிழ்க் கட்சிகள் மீதான படுகொலைகள்!
## சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் விசனம்

அரசியல் எதிர்த் தரப்பினரைக் கொலைசெய்வதற்கு இலங்கை அரசாங்கத்துடனான யுத்த நிறுத்தத்தை புலிகள் சாதகமாகப் பயன்படுத்துகிறார்களென்பதற்கான நம்பத் தக்க சான்றுகள் உள்ளதாக மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பு(Human Rights Watch), சர்வதேச மன்னிப்புச் சபை ஆகிய மனித உரிமைகள் அமைப்புகள் இரண்டும் ஒருமித்துத் தெரிவித்துள்ளன.

"இலங்கையில் சண்டைகள் முடிவுற்றுள்ளதென்பது கொலைகள் முடிவுற்றுள்ளதென அர்த்தப்படவில்லை" என மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பின் ஆசியப் பிரிவுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிறான்ட் ஆதம்ஸ் தெரிவித்தார். ''தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு வருகிறார்கள், கிடைக்கக் கூடிய சாட்சியங்கள் புலிகளையே சுட்டி நிற்கின்றன" என அவர் மேலும் தெரிவித்தார்.

இது பற்றி சுருக்கமான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பு, இவ்வாறான அரசியல் வன்முறைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றித் தீவிரமான விசாரணைகளை நடத்தி அதன் கண்டுபிடிப்புகளை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துமாறு நோர்வே தலைமையில் இயங்கும் இலங்கைக் கண்காணிப்புக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை ஆகஸ்ட் 12ம் திகதி வெளியிடும் பகிரங்கக் கடிதத்தில் புலிகள், இலங்கைக் கண்காணிப்புக் குழு, இலங்கை பொலிஸ் ஆகிய தரப்புகளிடம் இவ்வாறான மனித உரிமை மீறல்களை நிறுத்தி, இக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்கும்படி கோரவுள்ளது.

இலங்கை அரசாங்கமும் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்றில் பெப்ரவரி 2002ல் கையொப்பமிட்டு இது வரை புலிகளுக்கு விரோதமான தமிழ் அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய குறைந்தது 22 பேர் அரசியல் நோக்கம் கொண்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளார்கள். கடத்திச் செல்லப்பட்ட மேலும் பலரின் கதி பற்றி இன்னும் தெரியாதிருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் சாட்சிகள், இவற்றின் சூத்திரதாரிகள் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களேயென அடையாளம் காட்டியுள்ளனர். கிடைக்கின்ற சகல சாட்சியங்களும் இப் படுகொலைகள் எதிர்த் தரப்புக் குரல்களை மௌனிக்கச் செய்வதற்கான புலிகளின் திட்டமிட்ட வேலைத்திட்டமெனவே சுட்டிக்காட்டுகின்றன.

''இவ்வாறான கொலைகளை சட்டை செய்யாதிருப்பதானது இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமையில் ஏற்படும் எந்த முன்னேற்றங்களையும் இப்போது ஆபத்திலாழ்த்தி விடுவதாக உள்ளது" என்று கூறுகின்றார் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் செயற்பாட்டுக்கான இடைக்காலப் பணிப்பாளர் இன்கிறிட் மாசேஜ். '' அரசியல் படுகொலைகள் மற்றும் வன்முறைகளின் பிரயோகமானது, இலங்கையின் சகல குடி மக்களுக்கும் சேவை செய்யக்கூடிய நீதியான அரசமைப்பு ஒன்றை ஸ்தாபிப்பதை நோக்கிய நகர்வுகளை மிகப் பாரதூரமாக அசட்டை செய்வதாக உள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

> 'இலங்கையில் சண்டைகள் முடிவுற்றுள்ளதென்பது கொலைகள் முடிவுற்றுள்ளதென அர்த்தப்படவில்லை' என மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பின் ஆசியப் பிரிவுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிறான்ட் ஆதம்ஸ் தெரிவித்தார். "தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வருகிறார்கள், கிடைக்கக் கூடிய சாட்சியங்கள் புலிகளையே சுட்டி நிற்கின்றன" என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக் கண்காணிப்புக் குழுவானது நோர்வே, பின்லாந்து, சுவீடன், டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 50 கண்காணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இன்று கண்காணிப்புக் குழு தனது பணியை மிகக் குறுகிய ஒன்றாகச் சுருக்கிக் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு எதிரான துர்ப்பிரயோகங்கள், குறிப்பாக ஆட்சேர்ப்புக்காகச் சிறுவர்கள் கடத்தப்படுதல் மற்றும் நிதி அறவீடுகள் போன்றன பற்றிய முறைப்படுகளை அது முன்னரிலும் கூடுதலான அளவில் செவிமடுக்கின்றபோதிலும் அரசியல் படுகொலைகள் தொடர்பாகப் போதுமான அளவு விசாரணைகளை மேற்கொள்வதில் அக்கறைகாட்டவில்லை.

''புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்கும் தனது பாத்திரத்துக்குப் பங்கமேற்படக் கூடாதென்ற சமரச மனப்பான்மையின் அச்சம் காரணமாக, நோர்வே இக் குற்றங்களை விசாரணை செய்வதில் தயக்கம் காட்டுகிறதென நாம் கவலைகொண்டுள்ளோம்" என ஆதம்ஸ் தெரிவித்தார். இத்தகைய விடயங்களில் ஆழமான விசாரணைகளை மேற்கொள்ளக்கூடிய வண்ணம் இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் கொள்ளளவை விருத்தி செய்துகொள்ளும்படி அதனிடம் மனித உரிமை அவதானிப்பு அமைப்பு கோரியுள்ளது.


"இலங்கைப் பொலிஸும் புலிகளும் கூட இக் கொலைகளை நிறுத்துவதற்காகச் செயற்பட வேண்டும். இத்தகைய குற்றங்களை விசாரிப்பதில் பொலிஸ"க்கு உள்ள சிரமங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், இதனையே இவற்றிற்குக் காரணமானவர்களை இதுவரை நீதியின் முன் நிறுத்துவதற்கு அவர்கள் தவறிவிட்டதற்கான சாட்டாகக் கூற முடியாது" என்று மாசேஜ் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில், "சாட்சியங்களின் கனதியை எடுத்து நோக்கும்போது, இக் கொலைகளை உடனடியாக நிறுத்தி, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் மனித உரிமைகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு தனது உறுப்பினர்கள் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டியது புலிகளின் பொறுப்பாகும். அத்துடன் அவர்கள் இலங்கைக் கண்காணிப்புக் குழுவினால் நடத்தப்படும் விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்கவும் வேண்டும்." என்றார்.

மேலதிக தகவலுக்கு தயவுசெய்து சர்வதேச மன்னிப்புச் சபையை 44 207 413 5566 என்ற தொலைபேசி இலக்கத்திலும் மனித உரிமைகள் அவதானிப்பு அமைப்பை 1 212 216 1841 என்ற தொலைபேசி இலக்கத்திலும் தொடர்பு கொள்ளவும். ◻



காலை இளவெயிலின் காட்சி – அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை இரவில் – சுடர்
நேமி யனைத்துமவள் ஆட்சி.

சுப்பிரமணிய பாரதியார் –



## பாப்பா முரசு சிறுகதை

# ஏமாற்றாதே ஏமாறாதே!

திருப்பாலைத்துறை என்ற கிராமத்தில் கங்கா பாட்டி என்ற ஒருவர் இருந்தார். பாட்டிக்கு உறவு என்று யாரும் இல்லை.

அதனால் தனியே குடிசை ஒன்றில் இட்லி சுட்டு வியாபாரம் செய்து வந்தார்.

அந்த ஊரில் கங்கா பாட்டி என்றால் எல்லாருக்குமே பிடிக்கும். யார் வந்து இட்லி கேட்டாலும், சுட்டு அடுக்கி வைத்திருக்கும் இட்லியை அவர் எடுத்துக் கொடுக்க மாட்டார்.

"உனக்கு எவ்வளவு வேணுமோ எடுத்தக்கப்பா" என்று சொல்லிவிடுவார்.

அது போலவே, வருபவர்கள் தேவையானதை எடுத்துச் சாப்பிட்டு விட்டு அதற்குரிய காசைக் கொடுத்து விட்டுப் போவார்கள்.


காலையில் வேலைக்குப் போகும் போது சில பேர் பாட்டியிடம் வாடிக்கையாகச் சாப்பிடுவார்கள். அவர்களில் வடிவேலுவும் ஒருவன்.

இவன் பாட்டியிடம் வாடிக்கையாகச் சாப்பிடுவதற்கு காரணம் உண்டு.

"என்ன பாட்டி இன்னைக்கு என்ன சட்னி?" என்றபடியே வந்தான் வடிவேலு.

"வாப்பா வடிவேலு ரோசாப்பூப் போல மொளவா தொவயல். தக்காளிச் சட்னி. சாப்பிடு" என்றார்.

வழக்கம் போலவே கூடையில்



இருந்து இலை ஒன்றை எடுத்து, அதில் இட்லியை வைத்து வேண்டுமளவு சட்னியையும், துவையலையும் வைத்துக் கொண்டு நன்றாகச் சாப்பிட்டு முடித்து,

"இந்தா பாட்டி எட்டு இட்லிக்கு எட்டு ரூபாய் போக மீதி ரெண்டு ரூபாய் கொடு" என்றான்.

அதன்படியே பாட்டியும் கொடுத்தார். மீதி வாங்கிய இரண்டு ரூபாயில் வழியில் உள்ள தேனீர்க்கடையில் ஒரு தேனீர் குடித்துவிட்டு வேலைக்குப் போனான்.

வடிவேலும், கலியனும் கும்ப கோணம் சந்தையில் கத்தரிக்காய் மூடைகளைக் கொண்டுபோய்க் கொடுத்தனர்.

கலியன் சொன்னான். "வடிவேலு, நீ பஸ்ஸிலே ஊருக்குப் போயிடு. நான் எப்போதும் போல வண்டியை ஓட்டிக் கிட்டு வந்துடுறேன்," என்று

"சரி" என்ற வடிவேலுவிடம், "இந்தா பணம் இரவெல்லாம் கண்ணுமுழிச்சி இருக்க பசியா இருப்பே. அந்த மூலைக் கடையிலே போய் சாப்பிட்டுப்போ..." என்று இருபது ரூபாயைக் கொடுத்தான்.

பணத்தை வாங்கிகொண்ட வடிவேலுக்குப் பசி வந்தது.

'இங்கே ஏன் நாம் சாப்பிடனும். கங்கா பாட்டியிடம் சாப்பிட்டுக்கொண்டால் என்ன' என்று நினைத்தான்.

மறு நிமிடமே, 'இன்று பரோட்டா தான் தின்னுப் பார்ப்போமே'ன்னு நினைத்தான்.

நேராகக் கடைக்குப் போனான். ஒரு டேபிள் முன்னே போய் அமர்ந்தான் வடிவேலு.

"சார் என்ன சாப்பிடுறீங்க?" என்றான் கடை ஆள்.

"ஒரு பரோட்டா என்ன விலை?"

"ரெண்டு ரூபாதான் சார்," என்றான்.

"அப்படியா. நாலு கொண்டு வா" என்றான் வடிவேலு.

வெளியில் வந்தவன் கல்லாவில் இருந்தவரிடம் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு நின்றான்.

அவன் நிற்பதைப் பார்த்து "கூட்ட நேரத்திலே ஏன் நிக்கிறே? இடத்தைக் காலி பண்ணு," என்றான் பரோட்டா வைத்தவன்.

"மீதி ரெண்டு ரூபாய் தரலியே?" என்றான் வடிவேலு.

"அஞ்சு பரோட்டா பத்து ரூபாய்தான். போப்பா," என்றான் அவன்.

"நான் நாலுதானே சாப்பிட்டேன்," என்றான் வடிவேலு.

"இல்ல, நான் அஞ்சிதான் வைச்சேன்," என்றான் அவன்.

"இல்ல, நான் நாலுதான் சாப்பிட்டேன்," என்றான் வடிவேலு.

"அஞ்சிதான் சாப்பிட்டே. என்ன தகராறு பண்ணுறீயா? பொலிஸைக் கூப்பிடுவேன்..." என்று ஒரு அதட்டல் போட்டான்.

அதற்கு மேல் அங்கு நின்றால் விபரீதம் நடந்துவிடும் என்று வெளியில் வந்தான் வடிவேலு.

அவன் மனம் நினைத்தது....

'இவன் இன்று ஒரு நாள் இரண்டு ரூபாயை நமக்கு ஏமாற்றியதற்கே இப்படி கோபம் வருகிறதே. தினம் தினம் பத்து இட்லியை எடுத்து வைத்துச் சாப்பிட்டு விட்டு எட்டு இட்லிதான் என்று சொல்லி பணத்தைக் கொடுத்துவிட்டு மீதி இரண்டு ரூபாயை எத்தனை நாள் கங்கா பாட்டியிடம் நாம் ஏமாற்றி இருக்கிறோம்?'

அவன் மனம் வேதனைப்பட்டது. 'பாவம் கங்கா பாட்டி!'

'இனி நாம் கங்கா பாட்டியை ஏமாற்றக் கூடாது. இதுவரை ஏமாற்றிய தற்காக அவருக்கு இட்லி சுட அடுப்பிற்கு விறகு வெட்டிக் கொடுத்துவிட வேண்டும்' என்று எண்ணியபடியே ஊர் செல்லும் பஸ்ஸை நோக்கி நடந்தான் வடிவேலு.

ஆம் பிள்ளைகளே நாம் ஒருவரை ஏமாற்றும்போது மற்றவர்கள் எம்மை ஏமாற்றிவிடுவார்கள். ஆகவே நல்லதை நினைத்து நல்லதையே செய்வோம். அப்போதுதான் சமூகத்தில் நல்ல பெயருடன் வாழ முடியும். புரிகிறதா குட்டீஸ்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.08.2003.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 509
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 506

பரிசுக்குரியவர்:
**சொரூபிகா ஸ்ரீஜீவா,**
யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **ஆத்மராசா ஜெயந்தி,**<br>212 காந்திநகர், அன்புவழிபுரம், திருகோணமலை. | **செல்வி.அவிநயா வாலசிங்கம்,**<br>20/08 பெயிலி, குறுக்கு வீதி, மட்டக்களப்பு. |
| **ரி.கவிப்பிரியா,**<br>டி3, பதுளுப்பிட்டிய வீதி, பதுளை. | புதல்வி. ஆர்.அருந்ததி ராமானுஜம்,<br>நோத் பூண்டுலோயா, பணிய கணக்கு, பூண்டுலோயா. |
| **சு.அபிராமி,**<br>1ஏ, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு4. | **எஸ்.கவிஷாலினி,**<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| **ஐ.நிஸ்தார்,**<br>அண்ணல் நகர், கிண்ணியா - 03. | **வி.உதயஸ்ரீசந்திரன்,**<br>149, சாயிபவனம், புப்புராஸ்ஸ வீதி, கலஹா. |
| **உஷ்வந்த் மனோகரன்,**<br>184/12 புத்தளம் வீதி, குருநாகல். | **தி.திருச்செல்வம் கவிராஜ்,**<br>50/1 அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். |


## விடுகதைகளும் விடைகளும்

1. ஊசி நுழையாத காட்டில் ஆள் போகுது அது என்ன?
2. வேகாத வெயிலிலே வெண்ணை பிசைந்து வைத்தேன், உருகும் என்று பார்த்தால் உலர்ந்துவிட்டது அது என்ன?
3. நீட்டிக்கொண்டு படுக்க உதவுவேன். பாதை அடைக்கும் என்றால் சுருண்டு மூலையிலும் கிடப்பேன் நான் யார்?
4. வெளிச்சத்தில் தொடர்பவன் இருட்டில் மறைந்து விடுவான் அவன் யார்?
5. குதிரை ஓட ஓட குறைகிறது வால் அது என்ன?
6. என் தலையை நானே விழுங்குவேன் நான் யார்?
7. தண்ணீரில் தள்ளாடினாலும் அக்கறையோடு அக்கரை போவேன் நான் யார்?
8. பறக்கும் தீப்பொறி ஆனாலும் அனல் இல்லை அது என்ன?
9. ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன் எடுக்க முடியலை அது என்ன?
10. கட்டி வைத்தால் நடந்து போவான் அவிழ்த்து விட்டால் சும்மா கிடப்பான். அவன் யார்?

### விடைகள்

1. பூனை 2. சுண்ணாம்பு
3. பாய் 4. நிழல்
5. ஊசி - நூல்
6. அணை 7. படகு
8. மின்மினிப்பூச்சி
9. கோலம் 10. சப்பாத்து

## அதிசய உலகம்!



**குட்டி குட்டி விஷயம் பேசுவோமா?**


டியர் சிட்டுஸ், மீன்களுக்கு காது இருக்கு, மூக்கு இருக்குன்னு தெரிஞ்சி கிட்டீங்க. அதே மாதிரி மீன்கள் உங்களை மாதிரி 'மம்மு' சாப்பிடுங்கிற விஷயமும் உங்களுக்கு தெரிஞ்சிருக்கும். ஆனா, மீன்கள் தூங்குமாங்கிற விஷயம் உங்களுக்குத் தெரியுமா?

மீன்கள் தூங்கும். ஆனா நம்மை மாதிரி கண்களை மூடி தூங்காது. கண்ணை திறந்து வச்சுக்கிட்டே தூங்கும். ஏன்னா, மனிதர்கள் மற்ற விலங்குகள் மாதிரி மீன்களுக்கு கண் இமைகள் கிடையாது. அதனால் மீன்களால் கண்களை மூட முடியாது.

பகலல்ல நீந்திகிட்டிருக்கிற மீன்கள் ராத்திரியானா அசையாம ஒரே இடத்துல இருந்து தூங்கும். இரவு நேரம் நீந்திட்டிருக்கிற மீன்கள் பகலல பாறை இடுக்குள், பாசிகள், நீர் தாவரங்கள், பளவத் திட்டுகள் மாதிரியான இடங்களில் தூங்கும். என்ன, மீன் தூங்குற விஷயத்தை இன்னிக்கு தெரிஞ்சுக்கிட்டீங்களா?

**சாலமேண்டர்**

படத்தில் இருக்கும் பிராணியின் பெயர் சாலமேண்டர். ஓணான் வகையைச் சேர்ந்தது. பெரும்பாலான சாலமேண்டர்கள் கறுப்பு நிறங்களில் இருப்பதால், தன்னைக் கொல்ல வரும் பிராணிகளின் கண்பார்வையில் படாமல் இலகுவாகத் தப்பித்துக்கொள்ளும். ஆனால் சில சாலமேண்டர்கள் அழகாக, கவர்ச்சியாக இருக்கும். எப்படித் தெரியுமா? இதன் கறுப்பு நிற உடம்பில்



மஞ்சள் கலரில் 'பாட்ச் ஒர்க்' பண்ணிய மாதிரி பெரிய...பெரிய.... வட்டங்கள் இருக்கும். அந்த மஞ்சள் வட்டத்திற்குள் குட்டி, குட்டி கறுப்பு புள்ளிகள் இருக்கும்.


இவ்வளவு அழகா இருந்தா.... ஆபத்து வராதா? இந்த சாலமேண்டர்கள் தன்னைக் கொல்ல வரும் மிருகங்களிடமிருந்து எப்படி தப்பிக்கும் தெரியுமா? பால் போன்ற நச்சுத் திரவத்தை கக்கி அந்த மிருகங்களைக் கொன்று விடும். சமத்து சாலமேண்டர்.

## உங்கள் பொதுஅறிவு எப்படி?

| | |
|---|---|
| 1. பஞ்சதந்திரக் கதைகளை எழுதியார்? | விஷ்ணுசர்மா |
| 2. பாலின் அடர்த்தியை அளக்க உதருவியின் பெயர் என்ன? | லக்டோ மீட்டர் |
| 3. சூரியனுக்கு வெகு தொலைவில் கிரகம்? | புளுட்டோ |
| 4. புனித மண் என்றழைக்கப்படும் நா? | பாலஸ்தீனம் |
| 5. பீகார் மாநிலத்தில் பேசப்படும் மெ? | இந்தி |
| 6. விஞ்ஞான ரீதியில் நச்சுத்தன்மை படிப்பதற்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்? | டாக்சிகோலஜி |
| 7. ஐ.நா.சபைக்கு அதிக அளவில் பநவி செய்யும் நாடு எது? | அமெரிக்கா. |
| 8. தாய்லாந்து நாட்டில் பேசப்படும் மு மொழி எது? | சியாமிஸ் |
| 9. ஜைன மதத்தை தோற்றுவித்தவர் | மகாவீரர் |
| 10. உலகின் மிகப் பழைமையான டெ போட்டி எது? | விம்பிள்டன் கோப்பை. |

## அறிவுத் தேடல்

இந்த வாரப் புதிர்



*சென்ற வாரப் புதிரின் விடை*
*28 முக்கோணங்கள்*

...ளமான தாள் நான்கு பகுதிகளாக மடிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு ...ளில் ஒரே ஒரு பகுதி மட்டும், மற்ற பகுதிகளைவிட மாறுபட்டு மடிக்கப் ...து. அந்தப் பகுதி எது? எப்படி அது ...பகுதிகளை விட மாறுபட்டு மடிக்கப் ...து? கண்டுபிடியுங்கள்.



## மரணத்தில் மகிழ்ச்சி

இந்தோனேசிய தலைநகரான ஜகார்த்தாவில் ஐந்து ந ஹோட்டல் ஒன்றிற்கு முன்பாக கடந்த வாரம் கார் குண்டு வெடித்ததில் 15 பேர் வரை கொல்ல ற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

முன்னதாக பாலி தீவுகளில் 200க்கும் மேற்பட்டோரை காண்ட குண்டுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான அம்ரூசி என்ற இஸ்லாமிய தீவிரவாதி மீழக்கு விசாரணையின் தீர்ப்பு வெளியாக இரு தினங்களுக்கு முன்பாகவே இந்தக் குண்டுத் தாக் டந்தது. எவ்வாறெனினும் பாலி குண்டு வெடிப்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட அம்ரூசிக்கு ம ண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. இவர் துப்பாக்கியால் சுடப்பட்டு மரண தண்டனை நிறைப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீதிமன்றத்தில் தன் மீதான தீர்ப்பு சொன்ன நேரத்தில் தறித்து எந்தக் கவலையும் இல்லாமல் பெருவிரலை உயர்த்தி "அல்லாஹு அக்பர்" என்று உ சொன்னார் அம்ரூசி.

## வயிறு நிரப்பி சாதனை



**வ**யிற்றை நிரப்பி சாதனை படைத்திருக்கிறார் இவர். ஹொட் டோக் அமெரிக்காவில் மட்டுமன்றி இலங்கையிலும் நகர்ப்புறங்களில் பிரபலமான இனஸ்டன்ட் ஃபூட். கடந்த வாரம் நியூயோர்க் நகரில் ஹொட் டோக் சாப்பிடும் போட்டி நடைபெற்றது. இங்கே படத்தில் கையுயர்த்தி வெற்றிக் களிப்பில் இருப்பவர் டக்கேறு கொப யாஷிர். இவர் 12 நிமிடங்களில் 44.5 ஹொட் டோக்குகளைச் சாப்பிட்டு சாதனை படைத்தார். மேலே உள்ள படத்தில் இருக்கும் எரிக் புக்கர் என்பவருக்கும் இவருக்குமிடையில் கடும் போட்டியே நிலவியது.





## போதை உடல்

**போ**தைப் பொருள் பாவிப்பவர்கள் மெலிந்த உடலோடு நடக்கவும் முடியாமல் இருப்பதைத்தான் பார்த்திருப்பீர்கள். இங்கே படத்தில் இருக்கும் இந்த 'பொடி பில்டரும்' ஒரு காலத்தில் போதைப்பொருள் பாவித்த வர்தான். தற்போது தாய்லாந்து சிறைச்சாலை ஒன்றில் புனர்வாழ்வு பெறும் இந்த நபர், திடகாத்திரமான உடலுடன் காணப்படுகிறார். கைதிகள் மத்தியில் நடத்திய ஆணழகன் போட்டியில் இவர் வெற்றி பெற்றார்.

தாய்லாந்தில் போதைப்பொருளால் பாதிக் கப்பட்டவர்களுக்கும் எயிட்ஸ் நோயா ளிகளுக்கும் மறுவாழ்வு அளிப்பதற்காக அந்த நாட்டு சிறைச்சாலைத் திணைக்களமும் சுகாதார அமைச்சும் பல வெற்றிகரமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

**தொ**டர் மாடி வீட்டில் வசிக்கும் பிரெஞ்சுக்கார ஜாயல் டெசியருக்கு தனது வீட்டு முற்றத்தில் அழகிய பூந்தோட்டம் இல்லை ஒரு மனக்குறை. அதற்கு இப்போது தீர்வு கண்டுபிடித்திருக்கிறார் அவர். பெரிய ஒன்றின் பின்பகுதியில் சிறிய வீட்டுத் தோட்டம், குழந்தைகளுக்கு ஊஞ்சல் கட்டி யாட இடம், கோல்ப் தடாகம் என்று சின்னச் சின்ன வசதிகளோடு நடமா வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைத்துக்கொண்டிருக்கிறார். ஜோயலுக்கு ஓய் வைப்படும் நேரத்தில் இந்த வீட்டுத் தோட்டம் அவரது வீட்டுக்கருகில் வந்து .

## நடமாடும் வீட்டுத்தோட்டம்



## த க வ ல் பெ ட் டி



## ஆகாயத்தை நோக்கி....

**ச**தாமின் மகன்மார் கொல்லப்பட்டதும் நிம்மதியடையலாம் என்ற அமெரிக்காவின் எதிர்பார்ப்பு முற்றிலுமாக பொய்யாகிக்கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கின்றன. இப்போது தாக்குதல் முறைகள் மாறுபட்டு வருவதால் இன்னும் குழப்பமடைந்திருக்கிறது அமெரிக்கா. கடந்த வாரம் பக்தாத்தில் உள்ள ஜோர்தான் தூதரகத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட கார் குண்டு வெடிப்பில் பலர் கொல்லப்பட்டார்கள். இந்த உயிரிழப்புகளை விட குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்ட விதம்தான் அமெரிக்காவைச் சிந்திக்க வைத்திருக்கிறது. தூதரகத்தின் முன்பாக வெடி மருந்து நிரப்பி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காருக்கு தூரத்தில் இருந்து குறி தவறாது ரொக்கெட் செலுத்தப்பட்டது. அப்போது ரொக்கெட்டுடன் சேர்ந்து காரும் வெடித்தது. எதிர்காலத்தில் ரொக்கெட், விமானத் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனால் பக்தாத் வீதிகளில் சாதாரண துப்பாக்கிகளுடன் திரிந்த படையினரின் கைகளில் இப்போது விமான எதிர்ப்பு ஆயுதங்கள் காணப்படுகின்றன. இங்கே படத்தில் இருப்பது விமான எதிர்ப்பு ஆயுதம் ஒன்றுடன் சதாம் ஹுசையினின் விமானத்திற்காக அமெரிக்கப் படை வீரர் ஒருவர் காத்திருக்கும் காட்சிதான்.

# சினி விசிட்

## 'த்ரீ ரோசஸ்' ரிலீஸ்?

பெரும் போராட்டத்துக்குப் பிறகு ரம்பாவின் தயாரிப்பில் ஜோதிகா, லைலா, ரம்பா நடித்த 'த்ரீ ரோசஸ்' படம் இந்த ஆண்டில் ரிலீஸ் என்று அறிவிப்பு வந்திருக்கிறது.

இந்த அறிவிப்பு வெளிவந்ததிலிருந்து ரம்பாவின் வீட்டைச் சுற்றி பெரிய கூட்டம் கூட ஆரம்பித்தது.

எல்லாரும் படத்தை போட்டிபோட்டு வாங்க வந்த விநியோகஸ்தர்கள் என்று நினைக்காதீர்கள். செட்டில்மெண்ட் வாங்க வந்த கடன்காரர்கள்.



விந்தியா
படம்: காஷ்மீர்

## 'ஜே.ஜே.'யில் ரீமா சென்

கடைசியாக நடித்த 'தூள்' படம் பெரிய ஹிட் என்றாலும் கூட ரீமா சென்னுக்கு தமிழில் அடுத்த வாய்ப்புகள் வரவில்லை.

இதற்குக் காரணம் படப்பிடிப்பு முடிந்த பிறகு சென்னையை விட்டு ஓடிவிடுவது தான் என்பதை சற்று தாமதமாகப் புரிந்துகொண்ட ரீமா, இப்போது சென்னையில் நிரந்தரமாகக் குடியேற ஒரு பங்களா தேடி வருகிறார்.

இந்த பங்களா தேடும் தகவல் கேள்விப்பட்டு, முதல் ஆறுதலாக தனது 'ஜேஜே' படத்தில் நடிக்க வாய்ப்புத் தந்திருக்கிறார் டைரக்டர் சரண்.

## ஹீரோ சேரன்

முதல் படம் ரிலீஸாவதற்கு முன்பே சிலருக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற படத்தை இயக்கியிருக்கும் சமுத்திரக்கனி அந்தப் படம் இன்னும் ரிலீஸாகாத நிலையிலேயே பஞ்சு அருணாசலத்தின் வெள்ளிவிழா தயாரிப்புப் படத்தை இயக்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டார். இந்தப் படத்தின் ஹீரோ சேரன்.

## மீண்டும் உயிர் பெறும் 'சவுண்ட் பார்ட்டி'

சத்யராஜ் நடித்து முதல் காப்பி ரெடியான நிலையில் ஒன்றிரண்டு படங்கள் ரிலீஸாகாமல் இருக்கின்றன. அந்த வரிசையில் சுமார் ஒரு வருட காலமாகவே ரிலீஸாகாமல் காத்திருக்கும் படம் 'சவுண்ட் பார்ட்டி'.

இந்த 'சவுண்ட் பார்ட்டி'க்கு இப்போது இலேசாக உயிர் வந்திருக்கிறது. புதுப் படங்களும் கமிட் ஆகவில்லை. சமீபத்தில் ரிலீஸ் ஆகக் கூடிய நிலையில் வேறு படங்களும் இல்லை. இப்படியே இருந்தால் இண்டஸ்ட்ரி நம்மை மறந்துவிடும் என்பதை உணர்ந்த சத்யராஜ் தனது நண்பர் ஒருவரை அழைத்து 'சவுண்ட் பார்ட்டி' படத்தின் இணை தயாரிப்பாளராக்கி மெல்ல மெல்ல சில செட்டில்மெண்டுகளை முடித்து வருகிறார்.

இவை அனைத்தையும் முடித்துவிட்டு படத்தை ஆகஸ்ட் இறுதியில் ரிலீஸ் செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார் சத்யராஜ்.

இந்தப் பாடுபடும் 'சவுண்ட் பார்ட்டி' தான் மறைந்த பிரதியுஷா நடித்த கடைசிப் படம் என்பது குறிப்பிடத் தக்கது.



## அடி வாங்கிய 'தித்திக்குதே'

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரியின் மகன் ஜீவா நடித்த இரண்டாவது படம் 'தித்திக்குதே'. முதல் படத்தைப் போலவே இந்தப் படமும் தோல்வியாக அமைந்துவிட்டது. இந்தப் படத்தின் மூலம் சௌத்ரிக்கு 2 கோடி நஷ்டம் வரும் என்கிறார்கள்.

ஆனாலும் இரத்த பாசம் விடுமா? சற்றும் சளைக்காமல் அடுத்த மாதமே ஜீவாவை வைத்து புதிய படத்துக்குப் பூஜை போடுகிறார் சௌத்ரி.

வழக்கம் போல் புதிய இயக்குநர்கள் கியூவில் நின்று ஜீவாவுக்காக சௌத்ரியிடம் கதை சொல்லிக்கொண்டிருக்க, மகனுக்குப் பொருத்தமாக தெலுங்கு, கன்னட ரீமேக் சப்ஜக்ட் ஏதாவது கிடைக்குமா என்றும் தேடி வருகிறாராம் சௌத்ரி. இந்த 'தித்திக்குதே' கூட தெலுங்கில் அமோக வெற்றி பெற்ற ரீமேக் படம்தான். ஆனாலும் தமிழில் ஓடவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள் அவரது நெருங்கிய வட்டாரத்தினர்.

## மொட்டையடிக்க மறுத்த ஸ்ரீகாந்த்

ஸ்ரீகாந்தின் பொல்லாத காலம் அவரை நான்ஸ்டாப்பாக விரட்டிக்கொண்டிருக்கிறது.

லிங்குசாமியின் படத்தில் நடிக்க முடியாமல் போய், சூர்யாவுக்குப் பதிலாக சசியின் 'டிஸ்யூம்' படத்தில் நடிக்க அவசர அவசரமாக ஒப்பந்தமானார் ஸ்ரீகாந்த்.

படத்தைத் தயாரிப்பது தன்னை அறிமுகப்படுத்திய ஆஸ்கார் பிலிம்ஸ் என்பதால் சம்பளத்தைக் கூட பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அதையும் மீறி ஒரு துரதிர்ஷ்டம் இருப்பது ஸ்ரீகாந்துக்கு கதை கேட்டபோதுதான் தெரிய வந்தது. 'டிஸ்யூம்' கதையின் ஹீரோ அவசியம் மொட்டை அடித்தாக வேண்டும்.

இப்போது ஒரே நேரத்தில் ஒரு தெலுங்குப் படம் அழகம்பெருமாள் இயக்கத்தில் 'ஜூட்' மற்றும் நகுலன் பொன்னுச்சாமி இயக்கத்தில் 'வர்ணஜாலம்' படங்களில் நடித்து வரும் ஸ்ரீகாந்துக்கு மொட்டை போட முடியாத நிலை.

எனவே சசி மற்றும் ஆஸ்கார் பிலிம்ஸுடன் 'டிஸ்யூம்' போட்டுவிட்டு வெளியேறிவிட்டார் ஸ்ரீ.

## ஜோதிகாவைபோடாததால் கோபப்பட்ட சூர்யா

இவ்வளவு நாளும் அப்பாவிப் பிள்ளையாக இருந்த சூர்யா ஜோதிகாவின் நெருக்கத்துக்குப் பிறகு விவகாரமானவராக மாறி வருகிறார்.

ஆஸ்கார் பிலிம்ஸ் சசி இயக்கும் 'டிஸ்யூம்' படத்தில் தன்னிடம் சொன்னபடி 'முன்னணி ஹீரோயினைப் (ஜோதிகா) போடவில்லை. கேமராமேனாக ஜீவாவைப் போடுவதாகச் சொன்னார்கள். அதையும் செய்யாமல் புதிய ஒளிப்பதிவாளரை அறிமுகப்படுத்துகிறோம் என்கிறார்கள். இதுக்கு நான்தான் கிடைத்தேன்' என்றபடி அட்வான்ஸை திருப்பித் தந்து 'டிஸ்யூம்' படத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

இன்னொரு பக்கம் ஒரு பிரபல வார இதழுடன் (குமுதம்) நேரடி மோதலில் துணிந்து இறங்கிய சூர்யா, இனி தன்னைப் பற்றியோ ஜோதிகாவைப் பற்றியோ பேர்சனலாக ஏதாவது எழுதினால் நடப்பதே வேறு என்றும் எச்சரித்துவிட்டு வந்தாராம்.

எல்லாம் வருங்கால மனைவி கொடுத்த தைரியம்.

## பிரசன்னாவசம் அரை டஜன் படங்கள்

'ஃபைவ் ஸ்டார்' படம் சுமாராகவே ஓடியது என்றாலும் அதன் ஹீரோ பிரசன்னாவின் கைவசம் சுமார் அரை டஜன் படங்கள்.

கதை கேட்பதில்லை. அப்படியே யாராவது கதை சொன்னாலும் அதில் மூக்கை நுழைத்து திருத்தங்கள் சொல்வதில்லை. சம்பளம் எவ்வளவு குறைவாகப் போனாலும் ஒத்துக்கொள்வது போன்ற பாலிசிகள்தான் பிரசன்னாவின் இந்த அரை டஜன் படங்களின் பின்னணி.

## முகப்பில்

விஜய்

சங்கவி

சூர்யா



ரஞ்சித் — தேவயானி
படம்: பீஷ்மர்



## இயக்குநரின் காதைத் திருகிய சரத்குமார்

வில்லனாக இருந்த சரத்குமாரை சுப்ரீம் ஸ்டாராக ஆக்கிய படம் 'சூரியன்'. இந்தப் படத்தின் இயக்குநர் பவித்ரன். அதன் பின் சரத்குமார் உச்சாணிக்கொம்பில் ஏறி உலகப் புகழ் நாட்டியது ஊரறிந்த விஷயம். இந்த அடிப்படை உரிமையை வைத்துக்கொண்டு சரத்குமாரிடம் கால்ஷீட் வாங்கிய பவித்ரன் 'புகழ்' என்ற படத்தை துவங்கினார். பிறகு என்.ஆர்.ஐ. தயாரிப்பாளர் என்று ஒருவரை அழைத்து வந்து சரத்தை ஏமாற்றிவிட்டாராம். ஒரு நாள் விசாரித்தபோது பவித்ரனால் தயாரிப்பாளர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட நபர் இருபது இலட்ச ரூபாய் பவித்ரனிடம் கொடுத்துவிட்டு நடிக்க வந்தவர் என்ற தகவல் தெரிய பவியை அழைத்து செவியைத் திருகிவிட்டாராம்.

அதன் பின் பவித்ரனுக்கு கால்ஷீட் கொடுக்கவே இல்லை. வாங்கிய கடனுக்கு தன் வீடு உட்பட பல சொத்துக்களை இழந்துவிட்டாராம் பவித்ரன். பல மாதங்கள் கழித்து சரத்தை நேரில் சந்தித்த பவித்ரன் உண்மையைக் கூறிக்கொண்டு மன்னிப்புக் கேட்க, ஐம்பது இலட்சத்திற்கும் அதிகமாக பணத்தைக் கொடுத்து சொத்துக்களை மீட்டுக் கொடுத்தாராம் சரத். "சொத்துக்களை கொடுத்தார் நன்றி. அப்படியே கால்ஷீட் கொடுத்தால் நன்றியோ நன்றி சொல்வேன்" என்று கண் கலங்க கூறி வருகிறார் பவித்ரன்.

## சுருதிராஜ் வீட்டுக்கு தண்ணீர் குடிக்கப்போன இயக்குநர்

'காதல் டொட் காம்' படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் ஸ்ருதிராஜ் ஏற்கெனவே மலையாளத்தில் சில படங்களும், தமிழில் சில படங்களும் நடித்தவர். நடிக்க வந்த புதிதில் மூன்றெழுத்து நிறுவனம் ஒன்றில் ஒப்பந்தம் ஆனாராம். அந் நிறுவனத்தின் மும்மூர்த்திகள் ஆன தயாரிப்பாளர்களில் ஒருவரான சுவாமியின் பெயர் கொண்டவர் ஒரு நாள் நள்ளிரவில் கதவை தட்டி "இந்தப் பக்கமாக போனேன். தண்ணி குடிக்கலாம்னு வந்தேன். ஹி—ஹி..." என்று வழிய தயாரிப்பாளர்கள் கொடுத்த அட்வான்ஸை மறுநாளே திருப்பி அனுப்பினார் நடிகை. அப்போதெல்லாம் தமிழ் சினிமாவின் நெளிவு சுழிவுகள் தெரியாத இவர் இப்போது ஓரளவு தெரிந்துகொண்டார் என்று அறிந்து மறுபடியும் 'அப்ரோச்' செய்திருக்கிறது இந்த மூன்றெழுத்து லட்சுமிகரமான கம்பெனி. மேற்படி தயாரிப்பாளரே அட்வான்ஸோடு நடிகையின் வீட்டுக் கதவைத் தட்டியிருக்கிறார். இந்த முறை பகலில்! அப்புறம் போவாரோ என்னவோ?!

## பாட்டியாக கிரணா...?

'திவான்' படத்தில் சரத்குமார் தாத்தா, பேரன் ஆகிய இரு வேடங்களில் நடிக்கிறார். இப்படத்திற்கான பிரஸ் மீட்டில் குறும்புக்கார நிருபர் ஒருவர், "தாத்தா சரத்துக்கு ஜோடி கிரணா" என்று கேட்டு வைக்க, சரத் உட்பட மொத்த கூட்டமும் 'கெக்கே பிக்கே' என்று சிரித்து வைத்தது. சோகம் என்னவென்றால் கிரணின் மெனேஜரும் அந்த இடத்தில் இருந்ததுதான்.

## ஜெனீபரின் தாராளமயம்

பாரதிராஜாவின் 'ஈரநிலம்' படத்தில் மனோஜுக்கு இரண்டு ஜோடிகள். ஜோடிகள் என்பதை விட சோடிகள் என்றால் பொருத்தம். இதில் மெயின் நாயகி ஜெனீபர், விலக்கச் சொன்னால் அவிழ்க்கிற ரகம். இன்னொரு நாயகியான தாரிகாவுக்கு புகழ்பெற்ற இன்னொரு நிஜம் உண்டு. இவரின் நிஜப் பெயர் நிஷா. சித்தி தொடரில் ராதிகாவின் மகளாக நடித்திருந்தாரே—அவரேதான் இவர். சின்னத்திரை புகழை வைத்துக்கொண்டு சீக்கிரம் செட்டிலாகிவிட வேண்டும் என்று முடிவு செய்தவர். இவரைப் போலவே இன்னும் சில இளசுகளை அழைத்துக் கொண்டு, கெட்ட காரியங்கள் செய்து வந்தார். ஒரு நாள் விபச்சார தடுப்பு பிரிவு பொலிஸாரின் அதிரடி ரெய்டில் சிக்கி— தன் சுயதொழில் (!) நிறுவனத்தை மூடினார்.

மறுபடியும் சின்னத்திரையில் தலைகாட்ட முடியாமல், நிஷா என்ற தன் பெயரை தாரிகாவாக்கிக் கொண்டு சினிமாவிற்கு வந்துவிட்டார். 'ஈரநிலம்' படத்தில் தாரிகா ஊறுகாயா அல்லது சர்க்கரையா என்பதைப் பொறுத்து அவரின் சினிமா எதிர்காலத்தைக் கணிப்போம்.



## ட்ரீம்ஸ் பந்தா

எதிர்பாராத வெற்றி வரும்போது சிலருக்கு புத்தி தாறுமாறாக வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது.

'காதல் கொண்டேனின் கன்னாபின்னா வெற்றியால் தனுஷின் தந்தை கஸ்தூரிராஜாவும் கன்னாபின்னாவென்றாகி விட்டார்.

தனுஷின் அடுத்த ரிலீஸான 'திருடா திருடியின்' பிஸினஸ் பரபரப்பாக நடப்பதைப் பார்த்த கஸ்தூரிராஜா, டிஸ்டிரிபியூட்டர்களைக் குழப்புவதற்காக தனுஷின் 'ட்ரீம்ஸ்' என்று ஒரு பட விளம்பரத்தை வெளியிட்டு இது செப்டெம்பர் வெளியீடு என்றும் அறிவிப்பு செய்தார். அந்தப் படத்தின் படப்பிடிப்பு மூன்று நாட்கள் கூட நடைபெறவில்லை. பிறகு ஏன் செப்டெம்பர் வெளியீடு என்று விளம்பரம் தரவேண்டும்?

வேறொன்றுமில்லை. டிஸ்டிரிபியூட்டர்கள் 'திருடா திருடியை' விட்டு 'டிரீம்ஸ்' படத்தை வேக வேகமாக வந்து வாங்க வேண்டுமென்பது கஸ்தூரிராஜாவின் கணக்கு.

இதைக் கண்டு கொதித்துப் போன 'திருடா திருடி' தயாரிப்பாளர் முருகானந்தம் நேரடியாக தயாரிப்பாளர் கவுன்சிலில் முறையிட்டு 'டிரீம்ஸ்' விளம்பரத்தை நிறுத்தினார்.

## பாக்கியராஜ் மீண்டும் ஹீரோவாகிறார்

'சொக்கத்தங்கம்' ரிலீஸுக்குப் பிறகு தமிழில் நடிக்க, இயக்க எந்த வாய்ப்புமின்றி நொந்து போயிருந்த பாக்கியராஜுக்கு இப்போது ஆந்திராவிலிருந்து ஆறுதல் செய்தி வந்திருக்கிறது.

தெலுங்கு இயக்குநர் உமாமகேஸ்வரராவ் இயக்கும் 'அவ்வுனா' என்ற தெலுங்குப் படத்தில் ஹீரோவாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் பாக்கியராஜ்.

"படத்தில் நடிக்க முப்பது இலட்சம் சம்பளம் அல்லது தமிழ் டப்பிங் உரிமை இரண்டில் எது வேண்டும்" என்று பாக்கியராஜைக் கேட்டபோது சற்றும் யோசிக்காமல் 'சம்பளம்' என்று பதில் சொல்லிய கையோடு அட்வான்ஸையும் வாங்கிக்கொண்டு திரும்பி விட்டார் பாக்கியராஜ்.

பாக்கியராஜுக்கு இருக்கும் கடன் தொல்லைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படி ஒரு கேள்வி கேட்டிருப்பாரா உமாமகேஸ்வரராவ்.



பிரசாந்த்—கிரண்
படம்: வின்னர்

படம்: ஜே.ஜே.

## என் ஷாஜகான் நீயே

வசந்தத்தின் வாசலில்
நின்ற எனை
வரட்சியின் எல்லைக்கு
இட்டுச் சென்றவனே!
பௌர்ணமியாய் திகழ்ந்த
என் மனதினை
அமாவாசை ஆக்கிச் சென்றவனே!
எனை ஏன் தினம்
வதைக்கிறாய்?...

ஈரமாக இருந்த என்னிதயம்
காய்ந்துவிட்டதே!....
அதில்...
பார்வை எனும் பனித்துளியை
சிந்துவாயா?....
புன்னகை பூத்த என்னிதழ்கள்
வாடிவிட்டதே?...
அதில்
வார்த்தை எனும் மழைத்துளியை
தெளிப்பாயா?...
எனை ஏன் காதல் தீயில்
வாட்டுகின்றாய்?...

அன்பே!...
நான் என்ன உனை
தாஜ்மஹாலா கட்டச் சொல்கிறேன்?
உன் இதயத்தில் ஓர்
இருப்பிடமே கேட்கின்றேன்...
தருவாயா?... தராவிட்டால்....

என் நினைவில் ஓர்
கல்லறையாவது கட்டிவிடு!
அப்போது கூட
நீயே என் ஷாஜகான்!!!

பா.சுபாஜினி, பொத்துவில்.

## வருத்தத்தின் அழுத்தம்

குன்றின் ஒளியில்
குறிஞ்சி மலர் சிரித்திருக்க...
குடிசைக்குள் இருப்பவன்
அழுகிறான்...
கடந்த கால வாழ்க்கை
நிகழ்காலுத்திலும்
நிதர்சனமாயிருக்கின்றது!.....
எதிர்கால வாழ்க்கை
எட்டாத தூரத்தில்
ஏடுகளால் பொறிக்கப்பட்டு
கொண்டிருக்கின்றது!...

வறுமை இவனது உலகம்....
உரிமை இவனது சொந்தக்காரன்...
மழை இவனது பகையாளி....
வெயில் இவனது உறவினர்....
இதுதான் மலையக உலகம்!...

எம்.ஆர்.கிருஸ்ணா, அக்கரைப்பத்தனை.

## பிரிவு

சுகமானது எது என்று
நிலவிடம் கேட்டேன்....
அது மேகத்துக்குள் மறைந்து
கொண்டது
தென்றலிடம் கேட்டேன்
மெல்ல வருடிச்சென்றது -
இறுதியில்
என் இதயத்திடம் கேட்டேன்
பிரிவு தான் என்றது - காரணம்
உன் நினைவு பிரிவால்...
மீட்கப்படும் என்பதால்.

எஸ்.ஜே.எம்., வத்தளை.




## புண்ணியம் கிடைக்கும்

எனக்கு வயது
எண்பது ஆனது
வைத்தியர் ஒருவர்
வரச் சொன்னதனால்
தனித்து நடக்கத்
துணிவு இன்றி
தடியது துணையாய்
பொடி நடையாக
பாதை சென்றேன்
வண்டிகள் வந்தன.
முண்டியடித்து
ஏறிக்கொண்டேன்.
என்பின்னாலோர்
எழிலுடை மங்கை
ஏறிப் பின்னால்
நின்று கொண்டாள்.
நிமிர்ந்து பார்த்த
நம்மவர் ஒருவர்
எழுந்தார் இருக்க
அழைத்தார் அவளை
அவளும் சென்று
அமர்ந்து கொண்டாள்.
பலபேரை யான்
பரிவுடன் நோக்கி
இருக்கை கேட்டேன்.
'தலையில் தொப்பி
தாடி மீசை
நின்று போமே'
நிற்க இயலேல்
இறங்கிப் போமே
என்றான் ஒருவன்
என்னிலை பாரீர்!
முதுமைக்கையோ
இதுதான் கதியோ!
என்று எண்ணி
நின்றேன், கேளீர்
இளைஞர் நீவிர் இதற்கோர்
காண்பீராயின்
கண்ணிய முடனே
புண்ணியம் கிடைக்கும்.

ஈ.எம்.றாசிக்,
கல்முனை – 07.

## உன்னை நினைத்து

உயிரோடு இருக்கும்
போது உன்னோடு
உரையாட நினைத்தேன்
முடியவில்லை.

கனவில் வந்த
உன்னை - என்
கண்களுக்குள் வைக்க
நினைத்தேன்
முடியவில்லை.

இறுதியாக
உன்னை இயன்றளவு
பார்க்க நினைத்தேன்
முடியவில்லை.

அத்தனையும்
ஏமாற்றம் என்றாலும்
கடைசிவரை - உன்னை
மறக்காமல்
இருக்கின்றேன் - உன்
நினைவோடு.....

ஆனால் இதை மட்டும்
முடியாது என்று
மறுக்காதே - என்
பிணத்தின் மீது
ஒரு பூவை வைக்க....

ரி.தர்ஷினி,
ஆரையம்பதி - 03.



## காதலித்தால்...

பிரியமானவர்களே!
காதலித்தால் கவிதை
வரும் என்றார்கள்
நான் காதலித்தேன்
கவிதையோடு கண்ணீரும்
வந்தது.

காதலித்தால்
சுகம் வரும் என்றார்கள்
நான் காதலித்தேன் -
சுகத்தோடு
சோகமும் வந்தது

இனிது இனிது காதல்
இனிது என்கிறார்கள் -
இல்லை
இனிது இனிது கண்ணீரும்
சோகமும் இனிது.

எஸ்.ரூபன், மன்னார்.



## ஆத்ம ராகம்

இருள் போர்வைகளால் எங்கள்
பசுமையான பக்கங்களின்
விலாசங்களும், வாசிப்புகளும்
துலங்காமல் தொலைதூரப்
பயணங்களில்
சிதைந்து சின்னாபின்னமானது.

அவ்வப்போது அடையாளம்
தொலைத்து
உரிமை இருப்புக்களால் பீடிக்கப்பட்டு
அசைந்த கால்களும் -
'டப்பி' வெடித்து கால் சிதறி வீசப்படும்
சாபக்கணிப்பீடுகள் நியமங்களின் பால்
நடந்தேறின.

ஆயிரம் இரவுகளை உசுப்பி
மூளையோடு முண்ணாணும்
முறுக்கேறி
இதயவடமறுத்துத் துடித்த
அவலங்களின்
அலைகளுக்குள் பதிவான கதை
சொல்லி மாளாது.

பூட்சுகளின் உரசல்...
தெருவோர நாயின் எல்லை கடந்த
கதறல்...
அர்த்த ராத்திரியை மொழி பெயர்க்க
அடிமரக்குற்றியும் ஆமிக்காரனை
நினைவுபடுத்தி ஈரல் குலைபிடுங்கும்.

ஆத்மாவின் குரல் மரணத்தையுரசிச்
செல்ல
பிணவாடையின் நுகர்வுக்காக
வெளவால்கள், ஆந்தைகள், கழுகுகள்
-
அலகு சீவி, விழிசிமிட்டி ஆராதிக்கும்.

வாய்கிழிந்து, காவிபடிந்த பானையோடு
புருவம் சுழித்து, கன்னம் சிவந்து
முகம் வீங்கி, புகையின்
நச்சரிப்புக்களோடு
வயிற்றுக்கான போர் நடக்க,
மூத்தவன் வரவுக்காக தாயவளின்
மார்பு கனத்து
மூச்சுக்கள் நீளும்.

கண்கள் சந்திவரை வந்து போகும்.
அடுப்பங் கரையோடு சுவாலிக்கும்
தீயாகவே மனசு பற்றியெரியும்!

வறுமைக்கான இலக்கணங்கள் மாறாத
போதும்.
களவுகளைப் புரவியேற்றி
விடிவுக்கான திசைவரை
பயணித்தோம்.
இரத்தக் குமிழ்களும், கறைகளும்,
சுவடுகளும்
தடயங்களாக முழாமிட்டிருந்தன.

மாறாத வடுக்கள் நெஞ்சோடு
புரையோடிப்போக -
புழுதி மண்ணோடு பிணவாடை
வீசியது.
நகம், மயிர், எலும்புத்துண்டுகள்,
மண்டையோடு - எஞ்சிய
இருப்புக்களாக
விதைக்கப்பட்டிருந்தது.

பூக்கள் மலர்ந்தன, மரங்கள் பேசின.
மனிதர்களிருக்கவில்லை.....
விடியலுக்குப் பின் விளக்குகள்
எதற்கு?
மின்மினிகளுக்கு வீடுகளில்லை -
விளக்குகளும் தேவையில்லை
என்பதை வரலாறுகள் எழுதி
வைக்கட்டும்.

இ.மதகுமார்(வர்மன்), பொத்துவில்.

## கலைந்த கூடு!

அன்பால் கட்டுண்டு
அழியாதிருந்த எம் கூடு
அற்ப நொடியில்
அதீதப் புயலால்
அலங்கோலமாகியது.

கூடும் கலைந்தது,
குருவிகளும் பிரிந்தன
குறியற்ற பாதைகளில்
கூட்டமே சென்று விட
குஞ்சுகள் பிழைக்குமோ?
குடும்பமும் சேருமோ?

எஸ்.சந்துரு,கொழும்பு-13.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

''அதிகபட்ச ஒழுங்கு பற்றிய நினைவுடனும், சுய கட்டுப்பாட்டுடனும் ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை மண்டைக்குள் இயங்கச் செய்வதற்கு இணையானதாகும் கவிதை அநுபவம்.

பிசகுகளும், தவறுதல்களும் ஏற்படுகின்றன. இவற்றை ஒரு ஆய்வுகூடத்தில் மீண்டும் மீண்டும் அந்த சோதனையை நடத்திச் செல்லும்பொழுது நிவர்த்தி செய்துவிடலாம்.

ஆனால் கவிதையில் ஏற்படும் தவறுகள் பெரும்பாலும் அது நாசப்படுவதிலும், கைவிடப்படுவதிலுமே சென்று முடிகின்றன.

உணர்ச்சி ரீதியான, அழகியல் ரீதியான, இருத்தலியல் ரீதியான மதிப்பீடுகள் கவிதைக்கும் அறிவியலுக்கும் ஒன்றாகவே இருக்கின்றன. பிரத்தியேகமான மனம் சார்ந்த தீவிரத்தன்மை கவிதையையும் அறிவியலையும் இணைப்பதாக இருக்கிறது.

அறிவியல் துறைகளுக்கு வார்த்தைகள் என்பவை துணைக் கருவிகளாக மட்டுமே இருக்கின்றன. இதற்கு மாறாக நவீன கவிதையில் வார்த்தைகள் தம் அளவிலேயே ஸ்தூலப் பொருளாகின்றன. கவிதை என்பது சொல்லப்பட்ட விஷயமல்ல, மாறாக சொல்லுகிற விதத்தில் விசயமாகிறது."

என்று கூறுகிற மிராஸ்லோவ் ஹோலுப், செக்கோஸ்லோவேக்கியக் கவிஞர்களில் தனித்தன்மை மிகுந்தவர். 1923ல் ஜேர்மன் - பிரெஞ்சு பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்தார். கவிதையையும், அறிவியலையும் ஒருங்கிணைத்த ஐரோப்பிய கவிஞர்களில் முக்கிய இடம் ஹோலுப்பிற்கு உண்டு. மிராஸ்லோவ் ஹோலுப்பின் இரு கவிதைகள்.

### தமிழாக்கம் : பிரம்மராஜன்

### யோகா

எல்லாக் கவிதையும் ஏறத்தாழ
ஐநூறு டிகிரி சென்ரிகிரேட்

கவிஞர்கள் தீப்பற்றுவதில்
மாறுபடுகின்றனர்
எரிசாராயத்தில் நனைக்கப்பட்டவர்கள்
பற்றிக் கொள்கின்றனர் உடனே.

அவர்கள் என்னவாக இருப்பார்கள்
அவர்களின் நோயின்றி
அவர்களின் நோயே அவர்களின்
ஆரோக்கியம்.

வைக்கோல் வயிறுகள் அவர்கள்
எரிகின்றனர்
நீட்சேவை அவர்கள் படிப்பதில்லை
உங்களை எது கொல்வதில்லையோ



அது திடப்படுத்துகிறது.

அவர்கள் கனல்கின்றனர்
ஓசையுடன் எரிகின்றனர்
இருப்பினும் ஒரு மோசமான யோகி
மட்டுமே
தன் கால்களை
எரியும் கங்குகளில் சுட்டுக் கொள்கிறான்.

☆☆☆

### நசுங்குதல் பற்றிய நோய்க் கூட்டுத் தொகுப்பு

ஒரு சமயம் அப்பொழுது, குளிர்காலத்தின்
இருட்டில்
கொங்கிரீட் கலவை இயந்திரத்தை சுத்தம்
செய்துகொண்டிருந்தேன்.
அதன் பல்சக்கரங்கள் இடான் தேசத்து
சலித்துப்போன
எலியின் பற்களைப் போல.

கையுறைக்குள் இருந்த கையை
நசுக்கின. விரல் எலும்புகள்
நீங்கள் அடிக்கடி கேட்டிராத சில
விஷயங்களைக் கூறின
பிறகு அது அமைதியானது, காரணம்
அந்த எலி கூட பீதியடைந்து விட்டது.

அந்த கணத்தில்
நான் உணர்ந்தேன் எனக்கொரு ஆன்மா
இருந்ததென்று
அது மிருதுவாகவும், சிவப்பு பட்டைக்
கோடுகளுடனும் இருந்தது
மேலும் காயத்திற்கான சல்லடைத்
துணியால்
தன்னைச் சுற்றிக் கொள்ள விரும்பியது.

காரின் இருக்கையில் என்னருகே அதை
வைத்துக்கொண்டு
ஆரோக்கியமான கையினால் காரைச்
செலுத்தினேன்
மருந்தகத்தில் வலி தெரியாதிருப்பதற்கான
ஊசிகள்
குத்தப்படும் பொழுதும்
தையலிடப்படும் போதும்
மாற்றியமைத்துக் கொள்ளக் கூடிய
மேசையின்
துருப்பிடிக்காத எ.'.குக் குமிழியினை
ஆன்மா தனது தாடைகளினால் இறுகப்
பற்றிக்கொண்டது.
இப்பொழுது வெண்ணிறப் படிகமாக
இருந்தது
ஒரு வெட்டுக்கிளியின் தலையுடன்.

விரல்கள் குணமாயின
ஆன்மா மாறிற்று முதன் முதலில்
ஆறிவரும் புண்ணின் திசுவாக
பிறகு ஒரு வடுவாக, அதிகம்
புலப்படாமல்.

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி –



பெயர்: எஸ். அமல்ராஜ்
வயது: 23
முகவரி:
P.O.BOX- 40209,
DOHA-QATAR.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
கா. சுபாஷ்
வயது: 25
முகவரி:
திருவள்ளுவர் புரம்,
தரவளை, டிக்கோயா.
பொழுது போக்கு:
வாசிப்பு, ஆக்கங்கள்
எழுதுதல், பேனா நட்பு.



பெயர்:
ஏ.பி, அப்துர் ரஹ்மான்
வயது: 25
முகவரி:
39, பட்டியடிப்பிட்டி,
அக்கரைப்பற்று–06.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்,
பேனா நட்பு.



பெயர்: ஏ. அப்துல் மஜீத்
வயது: 28
முகவரி: POST BOX 1362,
H.B.K. CONT. COMPANY,
A.G., AL-KHOR,
DOHA-QATAR.
பொழுது போக்கு:
தினமுரசு வாசித்தல்.

# குளிர்காலப் பாதுகாப்பு

**கோ**டை காலத்தில் பெண்களுக்குப் பல வகையான தொந்தரவுகள் உண்டாவது போன்றே குளிர் காலத்திலும் பெண்களுக்குப் பல வகையான தொந்தரவுகள் உண்டாகின்றன.

பெண்களில் பலருக்கும் குளிரின் தாக்கம் அதிகப்படியாக இருக்கும். குளிர் தாங்க முடியாமல் அவதிப்படுவது உண்டு. சிலர் நடுங்கி விடுவதுண்டு, அப்போதெல்லாம் கனமான ஆடைகளை அணிவது, சூடான பானம் அருந்துவது, சூடான உணவினை சாப்பிடுவது என்பதைப் பின்பற்றி வருவார்கள்.

இத்தகைய காலகட்டத்தில் பல பெண்களுக்கும், தோலில் வெடிப்பு ஏற்பட்டு கஷ்டப்படுவார்கள். உதடுகளில் கூட பலருக்கு வெடிப்பு உண்டாகும். சொர சொரப்பாகக் காணப்படும்.

இப்படி குளிர் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப நம் உடலில் அவ்வப்போது பல பாதிப்புகள் உண்டாகிக்கொண்டேதான் இருக்கும். அதற்குத் தகுந்தபடி, நம் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நாம்தான் தயாராகிக்கொள்ள வேண்டும்.

இத்தகைய உதடு வெடிப்புள்ளவர்கள், தினமும் காலையில் குளித்து முடித்தவுடன் உதடுகளில் வெண்ணை பூசலாம். கை, கால்களில் கிளிசரின், பெட்ரோலியம் ஜெல்லி போன்றவற்றைத் தடவி வரலாம். ஆலிவ் ஆயிலைக் கூட தடவி விடலாம்.

குளிப்பதற்கு முன்பாக முகத்தில் பாலாடை, கடலை மா கலந்து தடவி பத்து நிமிடங்கள் வரையில் ஊற வைத்து பிறகு குளிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் உதட்டு வெடிப்புகள் நீங்கும்.



சிலருக்கு குளிர்காலத்தில் தோலில் சுருக்கமும், வெள்ளையாய் பொடுகு போன்றும் உடம்பின் தோலில் உருவாகி பார்ப்பதற்கே அசிங்கமாக இருக்கும். இவர்கள் ஆலிவ் ஆயில்லையோ அல்லது தேங்காய் எண்ணெய் போன்ற எண்ணெய்களையோ தேய்த்து வரலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

**வி**ளாம்பழத்தைக் கோயிலுக்குக் கொண்டு போவார்களே தவிர, அப்பழத்தை யாருமே விரும்பிச் சாப்பிடுவதில்லை. அதிலுள்ள பலன்களான, நினைவாற்றலுக்கும், எலும்புகளுக்கு உறுதியைக் கொடுக்கவும் உதவுகிறது என்பது மறக்கப்பட்ட விஷயம்.

செவ்வாழை மலட்டுத் தன்மையை நீக்கும்!

பெண்களுக்குத் தொல்லையைத் தரும் நோயான வெள்ளை படுதல் நோய்க்கு செவ்வாழை அல்லது பேயன் வாழைப் பூவை உதிர்த்து நரம்புகளை நீக்கிவிட்டு இடித்த சாறை வெறும் வயிற்றில் அதிகாலையில் 20 நாட்களுக்குத் தொடர்ந்து அருந்தினால் நல்ல பலன் கிடைக்கும்.

உடல் உழைப்பு இல்லாதவர்கள், பசி எடுக்கவில்லையே என்று அவதிப்படுபவர்கள் வாழைப்பழத்தில் நெய் கலந்து சாப்பிட்டுப் பாருங்கள். நல்ல பசி எடுக்கும்.

**அழகுக்கு சில....**

பழச்சாறு, மாவுக்கூழ் ஆகியவற்றை முகத்தில் பூசி ஊறவிட்டு, பின் குளித்தால் தோல் பளபளப்பாக மாறிவிடும்.

தேமல் இருந்தால் எலுமிச்சம் பழச்சாற்றை தேமல் உள்ள இடங்களில் தேய்த்துக் குளித்தால், தேமலும் குறையும். தேகமும் பலமாகும்.

தக்காளிச் சாற்றை உடலில் தடவி வந்தால் தோல் மிருதுவாகும்.

பாலில் எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து அந்தக் கலவையை உடலில் தடவி, உலர்ந்தவுடன் வெதுவெதுப்பான நீரில் குளித்தால் தோல் பளபளப்பாகிவிடும்.

# பழங்கள் எப்படியெல்லாம் உதவி செய்யும்?



**பழங்களை விதவிதமாகச் சாப்பிடலாம்!**

கொய்யாப்பழத்தை அப்படியே கடித்துச் சாப்பிடுவதை விட சிறு சிறு துண்டுகளாக்கி மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்துச் சாப்பிடுவது நல்லது.

கலப்புப் பழங்களாக சாப்பிடும் பழக்கத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதுக்கெல்லாம் நேரமில்லை என்கிறீர்களா? சரி நேரம் கிடைக்கும்போது முயற்சி செய்து பாருங்கள்.

ஆப்பிள் துண்டுகள், கொய்யாப்பழத் துண்டுகள், வாழைப்பழத் துண்டுகள் சிறிது சிறிதாக நறுக்கிய பலாப்பழத் துண்டுகள், நறுக்கிய பேரீச்சம் பழத் துண்டுகள், திராட்சைப் பழங்கள் இவை அனைத்தையும் நன்றாகக் கலந்து கலப்புப் பழங்களைச் சாப்பிடலாம்.

இத்துடன் தேனும், தேங்காய்த் துருவலும் சேர்த்துச் சாப்பிட்டால் சுவை கூடும்.

வாழைப்பழத்துடன் வெல்லம் சேர்த்து நன்றாகப் பிசைந்து காலையில் வெறும் வயிற்றில் மாதவிடாய் சமயங்களில் சாப்பிட்டு வந்தால் கர்ப்பப்பை நல்ல சக்தியைப் பெற்று இடுப்பும் நல்ல பலத்தைப் பெறும். இதனால் இடுப்பு வலி, வயிற்று வலி வராமல் தடுத்துவிடலாம்.

மாதவிடாய்க் கோளாறு, அதிக இரத்தப் போக்கு, கர்ப்பப் பையில் கட்டி, கர்ப்பப்பை பலவீனம், வயிற்றுவலி போன்ற தொல்லைகளுக்கு ஒரு தம்ளர் அளவு திராட்சைச் சாறினை தேன் அல்லது சர்க்கரை கலந்து சாப்பிடலாம்.

நோய்கள் வராமல் தடுக்கும் முக்கிய வேலையை பழங்கள் அதிகம் செய்து வருகிறது. இயற்கை உணவை எப்பொழுதும் சாப்பிட்டு வந்தால் பெண்கள் உடல் அழகோடு மகிழ்ச்சியான மனதையும் பெறலாம்.

# சின்னச் சின்ன டிப்ஸ்

- புடலங்காயை அரை அடி நீளத்திற்கு வெட்டி எடுத்து அதன் உள்ளே உள்ள விதைகளை நீக்கிவிட்டு சீயக்காய்த் தூளைத் தண்ணீர் விட்டு நன் றாகக் குழைத்து அந்தப் புடலங்காயின் உள் காய வைக்க வேண்டும். இவ்வாறு காய்ந்த பின், அதை அம்மியில் வைத்து அரைத்து தேமல் உள்ள இடங்களில் தடவிப் பின் ஒரு மணி நேரம் சென்ற பிறகு வெந்நீரில் குளித்தால் தேமல் நீங்கும்.
- நாம் பயன்படுத்தும் சமையல் எண்ணெய்களை மூன்று மாதம் வரைதான் வைத்திருந்து உபயோகிக்கலாம். அதற்கு மேல் அதனை வைத்துப் பயன்படுத்தினால் அதிலுள்ள உயிர்ச் சத்துக்கள் எல்லாம் அழிந்துவிடும். அதே நேரம் அந்த எண்ணெயில் அமிலத்தன்மையும் கூடிவிடும். இது உடம்புக்கு மிகக் கெடுதி.
- எக்ஸ்பயரி தேதி ஆன அனாசின் போன்ற மற்றும் வெண்மை மாத்திரைகளை நன்கு பொடி செய்து வைத்துக் கொள்ளுங்கள். பிரெஞ்ச் சாக்குக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம். இந்தப் பவுடர் நீரில் கரைவது இல்லை.
- பெண்கள் அவரவர்கள் முக அமைப்புக்கு ஏற்றவாறு கொண்டை போட்டுக்கொண்டால் அழகாக இருக்கும். பெரிய முகம் உள்ளவர்களும் சிறிய நெற்றியுடையவர்களும் வகிடு எடுக்காது தூக்கி வாரி சிறிய கொண்டையாகப் போட்டுக்கொண்டால் நன்றாக இருக்கும். சிறிய வட்ட முகம் உள்ளவர்கள் கொஞ்சம் உயர்த்திப் பெரிய கொண்டையாகப் போட்டுக்கொண்டால் மிக எடுப்பாக இருக்கும். அகன்ற பெரிய நெற்றியுடையவர்கள் வகிடு எடுத்து தலையை வாரி இரு காது மடல்களின் அருகிலும் சிறிதளவு முடியை எடுத்து சுருட்டி விட்டுக்கொண்டால் அழகாக இருக்கும்.
- பலத்த காற்று அடிக்கும் இடத்தில் ரங்கோலி கோலம் நீண்ட நேரம் அழியாமல் இருக்க ஒரு வழியுண்டு. அதாவது மைதாமாவைப் பசை போல நீர்க்கக் காய்ச்சிக்கொள்ளவும். இந்தக் கரை சலை மிக இலேசாகத் தடவிவிட்டுக் கோலம் போட்டால் வெகு நேரம் அழிவது இல்லை.
- நசுக்கிய கராம்பை வெந்நீரில் போட்டு ஊற வைத்து இரண்டு மூன்று முறை பருகினால் கர்ப்பிணிகளின் வாந்தி நிற்கும்.
- சுத்தமான தண்ணீரே உலகின் முதன்மையான மருந்து.
- சிறிது மருதாணி இலைகளுடன், சிறிது படிகார உப்பைச் சேர்த்து விழுது போல அம்மியில் அரைத்து எந்த நகத்தில் நகச்சுற்று இருக்கிறதோ, அந்த நகத்தில் இரவில் மருதாணி இடுவது போல இட்டுக் கொண்டு காலையில் எடுத்தால் நகச்சுற்று சுத்தமாக நீங்கிவிடும்.



- பச்சிளம் குழந்தைகளுக்கு ஜல தோசம் வந்தால் விக்ஸ் முதலியன தடவ முடியாது. எனவே முழு மஞ்சள் ஒன்றை, ஒரு முனையில் கறுப்பாகச் சுட்டு சிறிது சுண்ணாம்புடன் விழுது தயாரிக்கவும். கரண்டியில் இந்த விழுதை இலேசாக சுடவைத்து பொறுக்கும் சூட்டில் குழந்தையின் மூக்கு, நெற்றியில் தடவினால் ஜலதோசம் பறந்து போய்விடும்.
- சாதத்திலோ அல்லது வேறு சாப்பிடும் பாதார்த்தங்களின் மீதோ எறும்புகள் வந்துவிட்டால் ஒரு கரண்டியில் சிறிது சீனியைப் போட்டு அதன் மீது வைக்கவும். சிறிது நேரத்திற்குள்ளாக எல்லா எறும்புகளும் கரண்டியின் மீது ஏறிவிடும். கரண்டியை எறும்புகளோடு மெல்ல எடுத்துவிடலாம்.
- குளிர்சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்தபின் ஒரு ஈரத் துணியில் ஒரு சொட்டு வெனிலா எஸென்ஸ் விட்டு உள்புறம் முழுவதும் துடைத்தால் பழைய வாசனை வராமல் இருக்கும்.
- பட்டுப் புடைவைகளைத் துவைக்கும் போது சவர்க்காரம் உபயோகப் படுத்தக் கூடாது. சோப்பு போடுவதால் பட்டின் பளபளப்புத் தன்மை குறைந்து மங்கிவிடும்.
- பூந்திக் கொட்டை கடைகளில் கிடைக்கும். இதனை வாங்கி இளம் சூடான நீரில் அரைமணி நேரம் ஊற வைத்து கசக்கினால் வெண்மையான நுரை வரும். அந்த நுரை நீரில் பட்டுப் புடைவையை சிறிது நேரம் ஊற வைத்து நல்ல தண்ணீரில் நன்றாக அலசினால் அழுக்குகள் நீங்கி பளபளப்பாக இருக்கும். புடைவையை பிழியாமல் நிழலில் உலர்த்த வேண்டும். பூந்திக் கொட்டைகளுக்குப் பதிலாக சவர்க் காரத்தூளை உபயோகப்படுத்தலாம்.
- பட்டுப் புடைவையை அயன் செய்யும் போது அயன்பாக்ஸ் இளஞ்சூட்டில் தான் இருக்க வேண்டும்.
- பட்டு துணிகளை உடுத்திய பிறகு அவற்றை அப்படியே மடித்து வைக்கக் கூடாது. சிறிது நேரம் லேசான வெயிலில் காயப்போட்டு காற்றில் நன்கு உலர்ந்த பின் மடித்து வைக்க வேண்டும்.
- காது வலிக்கு மரல் என்ற மூலிகையை அனலில் வாட்டி பிழிந்து காதில் விட்டால் காது வலி தீர்ந்து விடும்.
- பூண்டு ஒரு பல், சிறிது ஓமம், வேப்பங் கொழுந்து, அரை வெற்றிலை அரைத்து வடிகட்டி கொடுக்க வாயு குறைந்து பசி எடுக்கும்.
- சட்டைப் பட்டன்களின் பின்புறம் நிறமற்ற நெயில் பாலிஷை ஒரு சொட்டு வைத்துவிடுங்கள். பட்டனைச் சுற்றியுள்ள நூல் இந்த நெயில் பாலிஷால் உறுதிப்பட்டு விடுவதால் பட்டன்கள் பல நாள் கூடுதலாக உழைக்கும். ஊசிக்கு அடிக்கடி வேலை கொடுக்கவேண்டி வராது.
- மழை, குளிர் காலங்களில் அப்பளம் வாங்கி வைத்திருந்து இளகிப் போய் விட்டால் வெயில் இல்லையே உலர்த்தி எடுக்க, என்கிற கவலை உங்களுக்கு வேண்டாம். உளுத்தம் பருப்பு வைத்திருக்கும் பாத்திரத்தில் மேலாக வைத்து இறுக மூடி வைத்து விட்டால் போதும். வெயிலில் உலர்த்தி எடுத்தது போல் ஆகிவிடும்.
- உங்கள் குழந்தை உங்களுக்கே கட்டுப்படாமல் அடங்காமல் உள்ளதா? குழந்தைக்கு இனிப்பு கொடுப்பதை உடனே நிறுத்துங்கள். படிப்படியாக குழந்தை சாத்வீகமாக மாறிவிடும்.
- தக்காளியை உபயோகப்படுத்தும் பொழுது முடிந்த வரை ஜூஸ் பிழிந்து விதையை அகற்றியே உபயோகப் படுத்துவது நல்லது. ஏனென்றால் தக்காளி விதை ஆண்களின் விதை நீர் அடைப்புக்கு ஒரு காரணமாக இருக்கிறது என்று இப்பொழுது கண்டறிந்துள்ளனர்.
- தண்ணீரில் அதிகமாக நடமாடுவதால் பாதங்களில் ஏற்படும் சேற்றுப் புண்ணிற்கு மண்ணெண்ணெயை 2 அல்லது 3 தடவைகள் தடவினால் வலி நீங்கி குணமாகிவிடும்.
- குக்கரின் இரப்பர் வளைய தளர்ந்து போனால் கவலையே வேண்டாம். ரெப்ரிஜிரேட்டரினுள் குளிர் அறையில் இரண்டு நாள்கள் போட்டு வைக்கவும். பிறகு அது கெட்டியாகி இறுகிவிடும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

**சுரைக்காய் அல்வா**

**தேவைப்படும் பொருட்கள் :**

சுரைக்காய் 1 கிலோ
சீனி 2 கிலோ
பால் 1/2 லீட்டர்
பாதாம் பருப்பு 50 கிராம்
கிஸ்மிஸ் 50 கிராம்
ஏலக்காய் பொடி 1/2 தேக்கரண்டி
எசன்ஸ் 1/2 தேக்கரண்டி

**செய்முறை**

பாலை நன்றாக காய்ச்சி வற்ற வைக்கவும். கெட்டியான டால்டா பக்குவத்திற்கு வந்ததும் இறக்கிவிடவும்.

சுரைக்காயை வெட்டி, தண்ணீரில் வேகவைக்கவும், பின்பு தண்ணீரை வெளியேற்றி விடுங்கள்.

சீனியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அது கொதிக்கும்போது சிறிதளவு பால் அதில் விடுங்கள். அது நன்றாக வற்றும்போது மேலே தெரியும் துகள்களை எடுத்து விடுங்கள். அதில் சுரைக்காய் மற்றும் பாதாம் பருப்பு, கிஸ்மிஸ், ஏலக்காய் பொடி, எசன்ஸ் போன்றவைகளைச் சேருங்கள். அது அல்வா பக்குவத்திற்கு வந்ததும் தட்டில் கொட்டி சூடு ஆறியதும் வெட்டிச் சாப்பிடுங்கள்.

அங்கம் 09




எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இதனால உன்னை முழுக்க தெரிந்துகொண்டேன் என்று சொல்ல முடியாது" என்றார் அர்ஜுன்.

"ஏன்?"

"அதற்கு மிக நாட்களாகும். இட் இஸ் எ ஸ்லோ ப்ராஸஸ். என்னைப் பற்றியும் நீ முழுக்க தெரிஞ்சுக்க ரொம்ப நாளாகும். என்னைப் பத்தி நீ என்ன இது வரைக்கும் தெரிஞ்சுக்கிட்டே?"

"ஒண்ணே ஒண்ணுதான். ராத்திரி திடீர்னு காணாமப் போயிடறீங்க-நள மகாராஜா மாதிரி. இது வரை ரெண்டு தடவை."

"ஸாரி! ரெண்டு தடவை எப்படி?"

"டில்லிலயும் ஹனிமூன் தினத்தின்போது ராத்திரி எழுந்தபோது படுக்கை காலியா இருந்தது."

"சொன்னேன். லாபிக்குப் போய் போன் பண்ணிட்டு வந்தேன்னு."

"போன் பண்ணினதாச் சொன்னீங்களா என்ன?"

"என்ன நீ, ரொம்ப உளவு வேலை பண்ணுவே போலிருக்கே?"

"சேச்சே அப்படியில்லை அர்ஜுன். உங்ககிட்ட எனக்குப் பூர்ணமான நம்பிக்கை" என்றேன். முத்தம் கொடுத்தார்.

"எந்த பாங்க்ல உத்தியோகம் பார்க்கிறீங்க"

"நீங்க... பாங்க் இல்லை அது, ஃபைனான்ஸ் கம்பெனி."

"அப்பா பாங்க் என்றாரே?"

"ஏறக்குறைய பாங்க் மாதிரித்தான் இது. எல்லாத்தையும் விளக்கமாச் சொல்றேன். இப்ப அதைவிட முக்கியமான வேலை இருக்கு...."

மீண்டும் படுத்தபோது முதல் தூக்கத்தின் மேல்பரப்பில் மிதந்தேன். கனவில் திடுக்கிட்டு எழுந்த



போது அர்ஜுன் மீண்டும் கதவைத் திறந்துகொண்டு வெளியே போவது தெரிந்தது.

எங்கே போகிறார் என்று அறிய சற்று ஆர்வமாக இருந்தது. தூக்கம் முழுவதும் கலைந்துவிட்டது. வெளியே ஒருவேளை சிகரெட் பிடிக்கப் போயிருப்பாரோ என்று தோன்றியது. தனக்கு சிகரெட் பழக்கம் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார். "என்னுடைய ஒரே பழக்கம் முப்பத்தஞ்சு. முப்பத்தஞ்சுதான்."

இருந்தாலும் அவ்வப்போது சில சமயம் அவரிடம் மிக அருகில் இருக்கும்போது லேசாக சிகரெட் வாசனை சட்டையில் அடித்தது. சிகரெட் பாக்கெட்டை அவரிடம் பார்த்ததில்லை. இந்த "முப்பத்தஞ்சு முப்பத்தஞ்சு" என்பதை அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்.

"எனக்கென்னவோ பட்சி சொல்கிறது. இதை நான் எப்படியும் அடைந்து விடுவேன்" என்பார். முப்பத்தைந்து வயசுக்குள் முப்பத்தைந்து லட்சம் பணம் சேர்ப்பது அவர் குறிக்கோள்.

அவர் வெளியே போய் அரை மணியாகிவிட்டது. அறைக்குள் அகலமாக எம்.டீ.வி. ஓடிக்கொண்டிருந்தது. ஒரு பெண் தோன்ற, அவள் யார் என்ன என்று தெரிந்துகொள்வதற்குள், கடற்கரை, பஸ் ஸ்டாண்டு என்று பொம்மை மாறிக்கொண்டே இருக்க, ஒன்றும் புரியாமல் நான் தூங்கிவிட்டேன். "என்னடி இது, நள மகாராஜா மாதிரி அர்த்தராத்திரியில விட்டுவிட்டு வேஷ்டியை அறுத்துக்கொண்டு போய்விட்டானா?" என்று அம்மா கேட்பது போல் கனவு கண்டு, திடுக்கிட்டு விழித்தபோதுதான். தூங்கிவிட்டேன் என்று உணர்ந்தேன்.

தூக்கத்திலிருந்து எழுந்ததற்கு மற்றொரு காரணம், அவர் லேசாக சாவி போட்டுக் கதவைத் திறக்கும் சப்தம்தான். என்னதான் செய்கிறார் என்று மௌனமாகவே அவரைக் கவனித்தேன். லைட் போடாமல் படுக்கைக்குள் வந்து, போர்வைக்குள் நுழைந்துகொண்டு, என் கழுத்தைச் சுற்றி கட்டிக்கொண்டு, தன்பால் இழுத்தபோது,

"எங்க போயிடீங்க?" என்றேன்.

"பாத்ரூம்."

"மூணுமணி நேரமா, பொய் சொல்லாதீங்க."

"பாத்ரூம் போய்ட்டு அப்படியே 'லாபி'ல போய் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துட்டு வந்தேன்."

"என்ன வேடிக்கை?"

"சும்மா....தூக்கம் வரலை, அதனால."

"எனக்கென்னவோ பொய்-

எழுதுவது - சுஜாதா

சொல்றீங்கன்னு தெரியறது."

"சே, அப்படி இல்லை."

"பொய் வேண்டாம்" என்றேன்.

அவர் சற்று நேரம் யோசித்துவிட்டு, "ஆல்ரைட் சொல்றேன். இந்த ஓட்டலுக்கு வெளியில ஒரு ரெக்ரியேஷன் க்ளப் இருக்கு. அங்க அவங்கல்லாம் கார்ட்ஸ் ஆடிக்கொண்டு இருந்தாங்க. வேடிக்கை பார்த்துட்டு வந்தேன்" என்றார்.

"நீங்க ஆடலியா?"

"இல்லை" என்றார்.

சற்று நேரம் விட்டு அவரை கட்டிக்கொள்ளும்போது, சட்டைப் பையில் உறுத்தியது. காகிதக் கட்டு போல் இருந்தது. சில்லறை உதிர்ந்தது. இது என்ன என்று படுக்கை அருகில் இருந்த விளக்கைப் போட்டால், நூறு, பத்து என்று ரூபாய் நோட்டுக்களாக இருந்தன.

"என்ன இது, எதுக்காக பணத்தை இப்படி லூஸா வெச்சிருக்கீங்க?"

அவர், "இதுக்குத்தான் பையையெல்லாம் நோண்டக் கூடாதுன்னு பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்" என்றார்.

எனக்கு சட்டென்று தோன்ற, "அந்த க்ளப்பில கார்ட்ஸ் ஆடிக்கொண்டு இருந்தவங்க, காசு வெச்சா?" என்றேன்.

"ஆமா ஹை ஸ்டேக் ஆடினாங்க. பப்புலு ஆட்டம் கொஞ்சம்தான் நான் ஆடினேன். அதிலேயே ஆயிரம் ரூபா ஜெயிச்சேன்! பிகின்னர்ஸ் லக்."

"ஆடலைன்னீங்களே."

"அப்படிச் சொல்லலையே?"

"நேத்திக்குக் கூட ராத்திரி அங்க போயிருந்தீங்களா?"

"நேத்து ராத்திரி நாம் சினிமா போகலை?"

"அப்புறம் நடுராத்திரி?"

"சின்ன விஷயத்தையெல்லாம் போட்டு மனசைக் குழம்பிக்காதே."

இது சின்ன விஷயமா என்று குழப்பமாகத்தான் இருந்தது. அந்த நூறு ரூபாய் நோட்டுக்களைப் பார்க்கப் பயமாக இருந்தது. நம் பணம் இல்லை அது. "உங்களுக்கு தினம் கார்ட்ஸ் ஆடி ஆகணுமா?" என்றேன்.

"சேச்சே!"

நான் சும்மா இருக்க, "ஏன் கேக்கறே?" என்றார்.

"இல்லை, ஏரோப்ளேன்ல கூட என்ன இழுத்து வச்சு சீட்டாடினீங்களே, அதனால அது ஒரு பழக்கமான்னுட்டு....?"

"இல்லை பழக்கம் இல்லை."

"சரி."

"ஆனா நான் எப்ப விளையாடினாலும் ஜெயிக்காம வர மாட்டேன், அதான். போட்ட பணத்தை யாவது எடுத்துட்டுத்தான் வருவேன்!"

தொடர்ந்து "இன்னைக்குப் பாரு, ஒரு ஆட்டம். கை பூரா ஜோக்கர். ஸீக்வென்ஸ் வரலை. புக் கொடுத்தேன். ஃபுல்புக் அந்த கிளப்ல ஆயிரம் ரூபாய். ஆனா அடுத்த ஆட்டமே ஃபுல் பண்ண உடனே பிக் அண்ட் டிக் ஆச்சு! என்ன பார்க்கறே?" என்றார்.

"எனக்கு நீங்க சொல்றது ஏதும் புரியலை."

"ரம்மி ஆடினதில்லை?"

"ஆடிருக்கேன். ஏதோ பொழுது போக்கறதுக்கு ஒருத்தருக்கொருத்தர் பார்த்துண்டு செட் சேக்கறதுன்னு வெளையாடுவோம். நீங்க சொல்லுறது சூதாட்டம்!"

"ரெண்டும் விதிகள் ஒண்ணுதான். இப்ப பப்லுன்னா ஜோக்கருக்குக் கீழ இருக்கற கார்டும் ரெண்டு டைமண்டும்."

எனக்கு இதில் ஆர்வமில்லை. எனினும் புதுசாகக் கல்யாணம் ஆனவர்கள் கணவன் சொல்வதை எல்லாம் சுவாரஸ்யமாகக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்கிற எழுதாத விதியின் கீழ் அதை கவனித்துக் கேட்டேன். அவருக்குச் சீட்டைத் தவிர வேறு எதில் ஆர்வம் உண்டு என்று கேட்டதில் ஸ்டாக் மார்கெட் பற்றி மஃபத்லால், டிஸ்கோ, டெல்கோ என்று மணிக்கணக்காகப் பேசினார்.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

## வானமும் பூமியும் இணைந்த நேரம்...



**கெ**த்தரினா திமித்திரியேவ் அமெரிக்காவில் வசிக்கும் 26 வயது யுவதி. இவர் கடந்த வாரம் ரஷ்ய இராணுவத்தில் பணி ஆற்றும் கேணல் யூரி மெலன்சன்கோ என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இதில் அப்படி என்ன புதுமை இருக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள்.

இவர்கள் திருமணம் செய்துகொண்டது ஒருவர் ஆகாயத்திலும் மற்றவர் பூமியிலும் இருக்கும் நிலையில்.

கேணல் யூரி ரஷ்ய விண்வெளி ஓடம் ஒன்றில் பணியாற்றுகிறார். கெத்தரினா அமெரிக்க இராணுவத்தில் பணிபுரிகிறார். இருவருக்கும் நீண்ட நாள் காதல். இந்த ஆகஸ்டில் திருமணம் செய்துகொள்வதாகத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொலம்பியா விண்வெளி ஓடம் பூமிக்குத் திரும்பும்போது வெடித்துச் சிதறியதில் சர்வதேச விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் பல மாற்றங்கள் நடந்தன. யூரி தற்போது பணியாற்றும் விண்வெளி ஓடத்தை ஒக்டோபர் மாதம் வரை விண்வெளியில் நிறுத்தி வைக்க ரஷ்யா தீர்மானித்தது. இதனால் திட்டமிட்டபடி யூரிக்கு நாடு திரும்ப முடியவில்லை. ஆனால் இருவரும் ஏற்கெனவே முடிவு செய்ததன் பிரகாரம் குறித்த தினத்தில் திருமணத்தை நடத்தியே தீர்வதெனத் தீர்மானித்தார்கள். இதன் பிரகாரம் மணமகன் சர்வதேச விண்வெளி ஓடத்தில் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்க மணமகள் அமெரிக்காவின் நாசா விண்வெளி நிலையத்திலிருந்து செய்மதி மூலம் இயங்கும் வீடியோ முறையில் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்து திருமணம் செய்துகொண்டார்கள். செய்மதி ஊடாக முத்தங்கள் பறிமாறப்பட்டன. மீதியைப் பூமிக்கு வந்து பார்த்துக்கொள்ளலாம் என்று நண்பர்களின் கேலிப் பேச்சுகளுக்கு மத்தியில் திருமணம் நடந்து முடிந்தது. ரஷ்ய மற்றும் நாசா விண்வெளி நிலையப் பணியாளர்கள் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்தத் திருமணம் உலகில் இது வரை காலத்தில் இடம் பெற்ற மிகவும் வித்தியாசமான திருமணமாக கருதப்படுகிறது. எப்படி இருந்தாலும் ரஷ்ய விண்



வெளி வீரர்களுக்கு இந்தத் திருமணத்தில் அத்தனை மகிழ்ச்சி இல்லைப் போல் தெரிகிறது. அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டது ஒரு காரணமாக இருக்கலாம்.

விண்வெளி வீரர்கள் போன்ற தொழில்சார் நிபுணத்துவ மனிதர்கள் வெறுமனே நடிகர்கள் போல் நடந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என ரஷ்ய விமானப்படையின் கேணல் விளாடிமீர் மிக்காய் லோஃப் கூறுகிறார்.

## நாகரிகத்திற்காக ஆடை களைதல்

**உ**டம்பில் பொட்டுத் துணி கூட இல்லாமல் அம்மணமாக லண்டன் நகர வீதிகளை வலம் வந்து 'சமூக சீர்திருத்தம்' ஒன்றுக்கு முயற்சி செய்கிறார் பிரிட்டிஷ்காரர் ஒருவர்.

44 வயதான இந்த நபரின் பெயர் ஸ்டிவ்கஃப். மனிதருக்கு மூளைக் கோளாறு எதுவும் கிடையாது.

கடந்த யூலை 16ந் திகதி பிரிட்டனின் லேன்ட் என்ட என்ற இடத்திலிருந்து இப்படி நிர்வாணமாக நடக்க ஆரம்பித்தவர் இதுவரை சுமார் 900 கிலோ மீட்டர் வரை நடந்திருக்கிறார். இவரது இந்தச் சாதனைக்கு ஏகப்பட்ட ஊடகப் பிரசாரம் வேறு. சன்கிளாஸ் ஒன்றும் தோளில் ஒரு பயணப் பொதியுமாக நடந்து திரியும் இவருக்கு வழி நெடுகிலும் ஏகப்பட்ட இடைஞ்சல்கள். 8 தடவை இந்த நபரை பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். ஒரு முறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கொண்டு சென்றபோது அங்கேயும் நிர்வாணமாகவே போனதால் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. பின்னர் அவருக்கு பொலிஸார் ஆடை வழங்கினார்கள். இந்த நபர் அணிய மறுத்துவிட்டார்.

பிரிட்டிஷ் சட்டத்தின் பிரகாரம் நிர்வாணமாகப் பொது இடங்களில் நடமாடுவோரைத் தண்டிக்க முறையான ஏற்பாடுகள் இல்லை. இந்தப் பலவீனம்தான் ஸ்டீவ் கஃப்பிற்கு சாதகமாக அமைந்துவிட்டது போல் தெரிகிறது.

ஏன் இப்படி ஒரு கண்றாவியான முயற்சி என்று கேட்டால் ஏதோ மாபெரும் மேதை போல் தத்துவார்த்தமாகப் பதில் சொல்கிறார் இவர்.



"ஆடைகளை அணியப் பழக்கப்பட்டதன் மூலம் மனிதன் தனது உண்மையான உருவ அமைப்பை மறுதலிக்கத் தொடங்கிவிட்டான். இது சரியானதல்ல. ஆடையின்றி வாழ்தல்தான் நாகரிகம் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் வளர்ப்பது இந்த நடைப்பயணத்தின் நோக்கம். இதை நான் வெட்கமாகக் கருதவில்லை." இது அந்த நிர்வாணப் பயணியின் விளக்கம்.

# தாய் மனசு



பொலிகை.பி.ஜெயா, சுவிஸ்

தன் மன ஆசைகளை தன் மனத்தினுள் குழி தோண்டி ஆழமாகப் புதைத்து விட்டிருந்தான் சந்திரன். இருந்தபோதும் கடும் மழை வெள்ளத்தின் பால் புதைத்த பொருட்கள் நிலத்தின் மேல் தலைகாட்டுவது போல அவனது அந்த நிறைவேறாத வெளிநாட்டு ஆசை அத்திபூத்தது போல இடைக்கிடை அவனது மனவோட்டத்தில் வந்து வந்து போனது.

சந்திரனது குடும்பக் கஷ்டத்தை இலங்கையில் இருந்து உழைத்துத் தீர்க்க முடியாது. ஒரு பக்கம் அதிகரித்த வாழ்க்கைச் செலவு, மறுபக்கம் மனிதநேயம் அற்ற வரி அறவீடு, அதைவிட ஐரோப்பிய நாடுகளில் இருந்து நாட்டிற்கு வரும் அந்நிய செலாவணியான கரன்சி நோட்டால் சந்தையிலே ஏழைகள் கஞ்சிக்கு கருவாடு கூட வாங்க முடியாத கந்தறுந்த நிலை.

சந்திரன்தான் குடும்பத்தில் ஓர் ஆண்பிள்ளை. அவனது தலையில் இரு குமர்ப்பிள்ளைகளைக் கரைசேர்க்கும் பொறுப்பும், கஷ்டத்தினால் தகப்பன் மாணிக்கம் பட்ட கடனும் வட்டியுடன் பெருகி ஓர் தொகையாக தொக்கி நிற்கிறது.

அவனால் தற்பொழுது முன்பு போல தன்னை மறந்து தனது இளமைக் கனவுகளை எண்ணித் தூங்க முடியவில்லை. தூங்கப் போனால் பாறாங்கல் மலையிலிருந்து உருண்டு அவனது தலை மேல் விழுவது போன்ற ஓர் பிரமை. "எப்படி அக்காமாரை கலியாணம் கட்டிக் கொடுக்கப் போகிறேன். அப்பர் பட்ட கடனை எந்தவிதத்தில் அடைக்கப் போகிறேன்" போன்ற கவலை, கடல் அலை கரையைத் தொட்டு முட்டி மோதுவது போல அவனின் மனம் கொந்தளித்தது.

தான் எப்பாடுபட்டாவது வெளிநாடு செல்ல வேண்டும். இந்த விடயத்தை எப்படி அப்பாவிடம் கூறுவது? சொல்லப் போனால் பணத்திற்கு எங்கு போவது? என்று என்னை திட்டித் தீர்த்துவிடுவாரோ என்ற ஓர் நியாயமான பயம் கலந்த கேள்வியுடன் அம்மாவிடம் சொல்லிப் பார்த்துவிடுவோம் என்ற முடிவுடன் தூங்கச் சென்றான். தூக்கம் அவனை அரவணைத்துக்கொண்டது.

பொழுது புலர்ந்தது. சந்திரன் கண் விழித்து இரு கைகளாலும் கண்களைக் கசக்கிய வண்ணம் தூக்கத்தால் எழும்ப மனமற்று எழுந்து தாயைத் தேடியபோது, அவள் குசினிக்குள் தேநீர் ஊற்றிக்கொண்டு இருப்பதைக் கண்டு இது நல்ல தருணம், அம்மாவிடம் எப்படியும் தன் ஆசையை வெளிப்படுத்திவிட வேண்டும் எனும் ஆதங்கத்தில் குசினிக்குள் சென்று தாயின் காதில் போட்டு வைத்தான்.

தாய் எந்தப் பதிலும் கூறாது அவனுக்கும் தேனீரைக் கொடுத்துவிட்டு புருசன் மாணிக்கத்துக்கு சுடு தேயிலைத்தண்ணியுடன் சிறிது சீனியும் கடதாசியில் எடுத்து வந்து அவரிடம் கொடுத்து மாணிக்கரிடம் விடயத்தைச் சொன்னாள்.

மாணிக்கர் சிறிது மௌனத்தின் பின்பு "அவன் வெளிநாடு போய் உழைத்தால் எங்கடை கஷ்டமெல்லாம் பறந்து போகும், இந்த இரண்டு பெட்டைக் குஞ்சுகளை நல்ல முறையில் கட்டிக் கொடுக்கலாம். பணத்திற்கு என்ன செய்வது?" என்று ஓர் பெருமூச்சு விட்டார்.

அவர்கள் இருக்கும் ஓலைக்குடில் உள்ள காணியை விட்டு புறம்பாக ஓர் தோட்டக்காணி மாணிக்கத்தாரின் பெயரில் இருந்தது. அதை விற்பதற்காக ஏற்பாடுகளை அந்த அயிட்டியப்புலம் ஸ்ரீ முருகனை வேண்டி தொடங்கினார்.

அந்த முருகனின் அருளால் சந்திரன் சவுதி சென்று அங்கு பாலங்களுக்கு கம்பி கட்டும் தொழிலாளிகளுள் முதன்மையானவனாக அதாவது போர்மனாக வேலை செய்து மாதாமாதம் தவறாது பொறுப்புடன் வீட்டிற்குப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தான்.

சந்திரனின் உழைப்பால் மாணிக்கம் தனது இரு பெண்பிள்ளைகட்கு அளவான இரு கல்வீடுகளும் கட்டி, அவர்கட்கு நல்ல உத்தியோக மாப்பிள்ளைகளையும் திருமணம் முடித்துக் கொடுத்ததோடு, தனது மகனுக்கு தான் முன்பு விற்ற காணியைப் போல ஒன்பது மடங்கு காணியும் வாங்கி வசதியாக வாழுகிறார்.

சந்திரன் தனது ஐந்து வருட ஒப்பந்தம் முடிந்து ஊர் திரும்பும் நேரம் வீட்டாருக்கு என்னென்ன தேவை என எழுதும்படி கடிதம் எழுதினான்.

அதற்கு அவனது இரு சகோதரிகள் தமக்கு, கணவன்மார்கட்கு, பிள்ளைகட்கு மணிக்கூடு, சாறி, உடுப்பு, மொத்தமான சங்கிலி, வேறு நகை, கிறைண்டர், தொலைக்காட்சி, வீட்டு அழகுசாதனப் பொருட்கள் என்று ஓர் நீண்ட பட்டியல் போட்டனர். ஈற்றில் தாயிடம் என்ன தேவை என்று கேட்டபோது, அத் தாய் "எனக்கு எதுவும் தேவையில்லை. என்ரை பிள்ளை நல்ல சுகத்துடன் வந்து சேர்ந்தால் போதும்" என்று தன்னலமற்று பாசத்துடன் கூறினாள்.

**இவ்வார சிறு கதைகள்**

# ப்ரியமான...

"தர்ஷி...! தர்ஷி...! அடியே உனக்கு போன்..." அக்கா பவானி கூப்பிடுவது தர்ஷியின் காதில் விழுந்தபோதும் பதில் எதுவும் சொல்லாமலே இருந்தாள்.

"அன்ரி...! கொழும்புல இருந்து தர்ஷிக்குப் போன். லைன்ல.... சிவா எடுக்கச் சொல்லுங்கோ..." பவானிக்கு கூப்பிட்டு அலுத்துப் போயிற்று.

"அடியே கதைக்கிறதெண்டா கதைக்கணும். இல்லயெண்டா இல்லையெண்டு சொல்லணும். ம்.....எண்டிருந்தா என்னடி அர்த்தம்." தர்ஷியின் அம்மா ஆசிரியை என்பதாலோ என்னவோ அதே தோரணையில் அவளின் வார்த்தைகள் உதிர்ந்தன.

"எனக்கேலா....அவருக்கு நினைச்சா கதைப்பார்...நினைச்சா சண்டைபிடிப்பார்... எனக்கு கதைக்க ஏலாது..." தர்ஷி கொஞ்சம் கோபமாகவே பதிலளித்தாள்.

"பேபி....அவள் கதைக்க மாட்டாளாம். வெளியில போயிட்டாளெண்டு வையடி."

"அந்தப் பெடியன் வேணுமெண்டே சண்டை பிடிக்கிறவன். பிரன்சிப் எண்டு ஏதாச்சம் வம்பு பண்ணுறவன் உங்களுக்குத்தானடி திமிர்." டீச்சர் கோபமாகவே சொன்னார்.

வரவேற்பறைக்குள் இருந்த தர்ஷி எழுந்து படுக்கை அறைக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டதுமே மடை திறந்த வெள்ளம் போல் அழுகை அவளை மிஞ்சி வெளிப்பட்டது. வெளியில் சத்தம் கேட்டுவிடக் கூடாது என்று வாயைப் பொத்திக்கொண்டே அழுதாள். சிவா போன் எடுத்தால் எப்பவுமே கதைக்காமல் இருந்ததில்லை.

நேற்று இரவு நண்பிகளோடு கதைத்துக்கொண்டிருக்கும்போது சிவா பற்றிய பேச்சு தேவையில்லாமலே ஆரம்பமானது.

"கொழும்புக்கு பரீட்சை எழுதப் போக வேணும். பயண ஒழுங்குகள் என்ன செய்யிறதெண்டு தெரியல்ல... அப்பாவோடுதான் போக வேணும். தர்ஷியும் எங்களோட வருவாய்தானே" என்ற நண்பி திஷாவின் கேள்வி நியாயம்தான்...



"ம்...அப்படித்தானே வர வேணும்...அம்மாவுக்கும் அடிக்கடி சுகமில்லாமல் போயிடுது. அவவ இழுத்துக்கொண்டு திரிய முடியாது" என்று தர்ஷி வழமையான யதார்த்தமான பதிலையே சொன்னாள்.

"அவளுக்கென்ன கொழும்புக்குப் போனதும் பிரண்ட் இருக்கிறார். அங்க இங்க...கூட்டிக்கொண்டு போவார். எங்களுக்குத்தான் யாருமில்ல...."என்று இன்னொரு நண்பியான குமுதா சொன்னபோது தர்ஷியின் முகம் கோபத்தால் சுருங்கிப் போனது.

"இஞ்ச பார்... நீ நினைக்கிற மாதிரி அவன் இல்ல... ரொம்ப நல்லவன்...திரிஷாவக் கேட்டுப் பார்... எல்லாத்துக்கும் மேலாக நல்ல பிரண்ட் அவ்வளவுதான்.... நீ இப்ப கதைச்சதக் கூட அவனிட்ட சொல்லுவன் தெரியுமே....அவன் அப்படியான ஓபன் டைப்...இப்படி நினைச்ச உன்னோட இனியும் என்னால பழக முடியாது. வா சிவா. நான் போறன்" என்று அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் தர்ஷி....

"பிரண்டாம்...பெரிய பிரண்ட்....இப்படித்தான் எல்லாரும் சொல்றது...பாப்பம் எத்தின நாளைக்கு இந்த பிரண்ட் நீடிக்கிறார் எண்டு...."குமுதாவின் கிண்டலான பேச்சு தர்ஷியின் காதில் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"சே...என்ன சமூகமடா இது...ஒரு ஆணும் பெண்ணும் பழகினா...தப்பா...? வேற அர்த்தங்களே இல்லையா?...உடன காதல் கீதல் எண்டுதான் யோசிக்கிறதா?... ஏன் நல்ல நட்பா அது இருக்கக் கூடாதா? எனக்கு நம்பிக்கை இருக்கு...நானும் அவன் சிவாவும் நல்ல நண்பர்களா இருப்பம் எண்டு...யாரும் எதையும் கதைக்கட்டும்... அவுங்களுக்கு பிழையா தெரிஞ்சால் அதுக்கு நான் ஒண்டும் செய்ய முடியாது" என்று தர்ஷி தனக்குத் தானே எத்தனையோ தடவை சமாதானம் சொல்லிப் பார்த்தும் குமுதாவின் கிண்டலான வார்த்தைகளே மிகவும் அருவருப்பாக அடிக்கடி தலை காட்டியது.

கொழும்பிலிருந்து போன் என்றதும் கதைத்திருந்தால் இந்தச் சம்பவங்களை அவனிடம் சொல்ல வேண்டி வரும். அதனால் அவனது மனசும் வேதனைப்படும் என்பதால்தான் இன்று அவனோடு கதைப்பதைத் தவிர்த்துக்கொண்டு சண்டை என்று அம்மாவிடம் பொய் சொன்னாள்.

"என்றாலும் இன்னும் இரண்டு நாட்களில் கொழும்பு போக இருப்பதால் அது குறித்து சிவாவுக்கு தெரியப்படுத்த வேணும்" மனசு ஞாபகமூட்டியது.

"என்னதான் கொழும்பில இருந்தாலும் யாரோட எப்படியோ, ஆனா என்னோட எவ்வளவு மரியாதையா, ஒழுக்கமா பழகிறான். அவன நம்பி நான் மட்டுமல்ல எத்தின பொம்பிளைப் பிள்ளைகளும் தங்கலாம். அப்படியான ஒருவனுடைய பழக்கத்தை சமூகத்துக்குப் பயந்து இழக்க முடியாது.

தாமரை மகன், கிண்ணியா.

அவன மாதிரி நல்ல நண்பன் கிடைச்சத நினைச்சு நான் சந்தோசப்படுறன்." என்று தர்ஷியின் மனசு ஒப்பந்த கைச்சாத்தலுக்கு போனபோது முகத்தின் ஈரம் காய்ந்து போயிருந்தது. சிவாவின் தொலைபேசி இலக்கங்களை ஞாபகப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்து :.போனை நெருங்கினாள்....

## கோலிவுட் புரடக்ஷன்ஸ் பெருமையுடன் வழங்கும்

# புதுத் தமிழ் அகராதி

தமிழில் காதல், ஆக்ஷன், குடும்ப சென்டிமெண்ட் என வெவ்வேறு விதமான படங்கள் வெளிவந்து வெற்றி பெற்றுக்கொண்டிருந்தாலும், மீண்டும் மீண்டும் ஒரே படத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் உணர்வு சினிமா இரசிகர்களுக்கு ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. காலாகாலமாகப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளை மீறினாலும் எல்லோராலும் இரசிக்கத் தக்க படம் சாத்தியம் எனினும் அந்த விதிகளை மீறுவதற்கு எவரும் முன்வரக் காணோம். பெரும்பாலும் தமிழ் சினிமாக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருப்பதை இங்கே பட்டியலிட்டுள்ளோம். அநாவசியமாக அலட்டிக் கொள்ளாமல் சுலபமாகப் படம் எடுக்க விரும்புவர்களுக்கு இந்தப் பட்டியல் உதவும். நிறைய எதிர்பார்ப்புகளுடன் தியேட்டருக்குச் சென்று, ஏமாற விரும்பாதவர்களுக்கும் இது உதவக்கூடும்.

1. அம்மா - ஹீரோ பணக்காரராயிருந்தால் எப்போதும் தலை நிறைய மல்லிகைப் பூ, பட்டுச்சேலை சகிதம் குடும்பத்தினருக்கு இட்லி பரிமாறுவார்.

ஹீரோ ஏழையாக இருக்கும் பட்சத்தில், பணக்கார வில்லனால் பலவித இன்னல்களுக்கு உள்ளாவார். குறைந்தபட்சம் கால் மணி நேரமாவது வில்லனுடைய கோடௌனில் ஹீரோ வரும் வரை கட்டிப் போடப்பட்டிருப்பார்.

2. அப்பா - ஹீரோவின் அப்பாவா, ஹீரோயினின் அப்பாவா என்பதைப் பொறுத்து இவருடைய குணாதிசயங்கள் கொஞ்சம் மாறுபடும். இவருக்கும் ஹீரோவுக்கும் 'க்ளைமாக்ஸ்' வரை ஒத்துப் போகாது. ஹீரோவை தண்டச் சோறு என்றுதான் கூப்பிடுவார்.

ஹீரோயினுடைய அப்பா வெளிநாட்டில் இருந்துகொண்டு, அடிக்கடி செல்போனில் ஹீரோயினுக்கு ஹலோ சொல்லுவார். திருமணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பு தன் மகள் யாரையோ காதலிப்பதை அறிந்து திடுக்கிடுவார்.

கிராமத்து அப்பா, நகரத்து அப்பா என்ற இரு உட்பிரிவுகள் இதில் உண்டு. கிராமத்து அப்பாக்களுக்கு மானம், மருவாதி இவற்றைத் தவிர வேறெதுவும் தெரியாது. கவரிமான் இவர்களுக்குப் பிடித்த மிருகம்.

3. புரொபஸர் - பெரும்பாலும் அகநானூறு அல்லது குறுந்தொகையிலிருந்து 'கிக்'கான செய்யுளைப் பாடம் நடத்திக்கொண்டிருப்பார். கோமாளித்தனமான இமேஜ் அவசியம்.

4. ஆலமரம் - களவு, கொலை முயற்சி, கற்பழிப்பு, தீவைப்பு போன்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளைப் பேசி முடிக்கும் இடம்.

5. பியானோ - பிறந்த நாள் விழாக்களில் ஹீரோ வாசிக்கும் இசைக்கருவி. ஹீரோயினின் வருங்காலக் கணவரின் பெயர் எதிர்பாராத விதமாக அறிவிக்கப்பட்டு, அது இரு பெரும் விழாவாகிவிட ஹீரோ பெரும்பாலும் சோகமான ட்யூன் தான் இதில் போடுவார்.

6. பில்லியர்ட்ஸ் - வில்லன்களுக்குப் பிடித்த விளையாட்டு.

7. சேலை-பணத்திமிர் பிடித்த ஹீரோயின் மனம் திருந்திய பிறகு விரும்பி அணியும் உடை.

8. ரயில் நிலையம் - காலேஜிலோ, கேன்டீனிலோ வருஷக்கணக்கில் அரட்டையடித்துக்கொண்டிருந்தபோது எதையும் சொல்லாமல், க்ளைமாக்ஸில் காதலைத் தெரிவிப்பதற்கு ஹீரோ, ஹீரோயின் தேர்ந்தெடுக்கும் இடம். படம் முழுக்கத் துரத்தித் துரத்தியடித்துவிட்டு திடீரென இந்தக் காதலர்களைச் சேர்த்துவைத்தால் என்ன? என்று ஹீரோயினின் அப்பா முடிவெடுக்கும் ஸ்தலம். காலம், இடம், சூழல் தெரியாமல் ஹீரோவும் ஓடிவந்து கட்டிப்பிடித்துக்கொள்ளும் இடமும் கூட.

9. கிராமம் - ஆறு, குளம், ஏரி, பம்புசெட், மலை, அழகான கோவில், பச்சை வயல், கரும்புத் தோட்டம் என சகல சம்பத்துக்களும் அமையப்பெற்ற இடம்.

10. கனவு - நியூஸிலாந்தில், ஆஸ்திரேலியாவில் சம்பந்தப்பட்ட காட்சிகள் மட்டும் இடம்பெறும் அரை மயக்க நிலை. பனிமலையில் கரடித்தோலில் செய்த சட்டை அணிந்து உற்சாகமாகப் பாட, ஹீரோயினுக்கு அங்கேயும் சற்றுப் பெரிய கர்ச்சீப்தான் காஸ்ட்யூம்.

11. தோழிகள் - காதல் விஷயத்தில் மதில் மேல் பூனை மாதிரி முழித்துக்கொண்டிருக்கும் ஹீரோயினை 'என்னடி லவ்வா' என்று சீண்டி அபத்தமாக முடிவெடுக்கத் தூண்டுபவர்கள்.

12. ஒயின்ஷாப் - காதலில் ஹீரோ தற்காலிகமாகத் தோற்றிருக்கும்போது நண்பர்களால் கூட்டிச் செல்லப்படும் இடம். "உள்ளே போனது குவார்ட்டரு வெளிய வந்தது லவ் மேட்டரு" என ஹீரோ தத்துவக் கானா பாடும் இடமும் கூட.

13. கானா - சர்ச், பார்க், கான்வென்ட்டில் படித்து முடித்த ஹீரோ வாழ்க்கையில் விரக்தியுற்றபோது அவருக்குத் திடீரென சரளமாகப் பாட வரும் பா வகை.

14. ⁘பாதர் - பாவமன்னிப்பு வழங்குவதை மட்டுமே வேலையாகக் கொண்டவர். முகத்தை எப்போதும் சீரியஸாக வைத்திருப்பவர். ஹீரோயினை 'My Child' என்று சொல்லி, செல்லமாகக் கன்னத்தைத் தட்டுவார்.

15. இன்டர்வியூ - நேர்மையில்லாதவர்களை ஹீரோ தன் வாழ்க்கையில் முதன் முதலாகச் சந்திக்கும் நிகழ்ச்சி. தனக்கு வேலை கிடைக்காது என்பதை யூகித்துக்கொண்டு ஹீரோ தன் பேச்சில் வாய்த்துடுக்கை வெளிப்படுத்த ஆரம்பிப்பார்.

16. பொலிஸ் கமிஷனர் , ஐ.ஜி - சட்டம், ஒழுங்கு கெட்டுவிடுவதை 'தினத்தந்தி' படித்துத் தெரிந்துகொள்பவர்கள். இந்த அவமானத்தை "இது நம்ம டிபார்ட்மெண்டுக்கே கேவலம்" என்று பூசி மறைப்பார்கள், என்று ஒற்றை ஆளாய் தீவிரவாதிகளைப் பிடிக்கப் போவதாக சூளுரைக்கும் ஹீரோவை "ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் ஸெல்ப்" என்று ஆசுவாசப்படுத்துபவர்கள்.

17. ப்ரெண்ட் - ஹீரோவின் காதல் நிறைவேற உடல், பொருள், ஆவியைத் தரத் தயாராயிருப்பவர்கள். பியர் பாரில் "மச்சான் கடலுக்குள்ள போனா மீன் நம்மள சாப்பிட்டுடும். அதே மீன் கரைக்கு வந்தா அத வறுத்து நாம சாப்பிட்டுடுவோம். அது மாதிரிதாண்டா காதலும்" என்பது போன்ற பகீர் தத்துவங்களைக் காதல் தோல்வியடைந்த ஹீரோவிடம் சொல்பவர்கள்.

18. பாம்பு - அம்மன் பக்தையான ஹீரோயினின் குடும்ப நண்பர்களில் ஒருவர். அவளுடைய சொத்துக்காகத்தான் வில்லன் அவளைத் காதலிக்கிறான் என்பது தெரிந்தாலும், அதை யாரிடமும் சொல்ல முடியாத துரதிர்ஷ்டசாலி. எமர்ஜென்சி சமயங்களில் ஹீரோவுக்கும் ஹீரோயினுக்கும் இடையே லெட்டர் பரிமாறும்.

19. இடுப்பு - 1. பாடல்களில் ஹீரோ அடிக்கடி விசிட் செய்யும் ஏரியா. 2. பம்பரம் விடுதல், ஆம்லெட் சுடுதல், கம்மல் மாட்டுதல் என்று தன்னுடைய பயன்பாடுகளை அதிகரித்துக்கொண்டே போகும் விநோத உறுப்பு.

20. அரிவாள் - கிராமங்களில் ஒவ்வொரு வீட்டின் கூரையிலும் பனை ஓலை விசிறி போல சொருகி வைக்கப்பட்டிருக்கும் இரண்டு அடி நீளமுள்ள ஆயுதம். பெண், ஜாதி, குடும்ப கௌரவம் சார்ந்த பிரச்சினைகளை அவுட்லைனாகக் கேள்விப்பட்டால் கூட போதும், இதை உருவிக் கையிலெடுத்து, கத்திக்கொண்டே வேகமாக ஓட வேண்டும்.

21. ரௌடி - ஹீரோவிடம் ஹீரோயினுக்குப் பிடித்த குணநலன். அடிக்கடி "உங்கிட்ட எனக்குப் பிடித்ததே இந்தப் பொறுக்கித்தனம்தாண்டா" என்று ஹீரோயின் கொஞ்சுவார். எனினும் இப்பழக்கத்தையும் சிகரெட்டையும் தவிர்க்கும்படி ஹீரோவிடம் கேட்டுக்கொள்வார்.

22. சேரி - கானா பாடவும் ஆடவும் எப்போதும் தயாராயிருக்கிற ஜனங்கள் வாழுமிடம்.

23. விஸ்கி பாட்டில் - இனி குடிக்கப் போவதில்லை என்பதைப் பிறருக்குத் தெரிவிக்க நடு வீட்டில் போட்டு உடைக்கப்பட வேண்டியது.

24. காலேஜ் - அட்மிஷன், ராகிங், புரொபஸர்ளை நண்பர்கள் போல பாவித்தல், பிரின்ஸிபலிடம் திட்டு வாங்குதல், கேன்டீனில் கோக், சிகரெட் குடித்தல், மரத்தடியில் லவ், ⁘பேர்வெல் டே, ஆட்டோகிரா⁘ப் பரிமாறுதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் இடம். பாண்டு, மதன்பாப், வெண்ணிற ஆடை மூர்த்தி போன்றவர்கள் பேராசிரியர்களாகவும், விவேக், சார்லி, தாமு போன்றவர்கள் மாணவர்களாகவும் கூச்ச நாச்சமில்லாமல் வந்து போகும் இடம்.

25. கராத்தே, ஜூடோ, குங்⁘பூ இத்யாதிகள் - டவுன் பஸ்ஸை நோக்கி ஓடுவதைத் தவிர உடற்பயிற்சி என்று ஏதும் செய்யாத ஹீரோவிடமிருந்து சிக்கலான நேரங்களில் திடீரென வெளிப்படும் கலைகள். □

**ஆனந்த் செல்லையா**

---

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**சமஷ்டியிலிருந்து பிரிவினைக்கு.......***(தொடர்ச்சி)*

புதிய அரசியலமைப்பின் நகல் வரைபை நிராகரிப்பதாகத் தீர்மானித்த தமிழரசுக் கட்சியின் மாநாடு அதற்காகப் பத்துக் காரணங்களை முன்வைத்தது. அக்காரணங்கள் வருமாறு.

1. 1970ல் நடந்த பொதுத் தேர்தல் மூலம் பெற்ற மக்களாணையை நிறைவேற்றுவதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் 1956 முதல் ஐந்து பொதுத் தேர்தல்கள் மூலமாக தமிழ் பேசும் மக்கள் வழங்கிவரும் மக்கள் ஆணையை மதிக்கவில்லை.

2. சோல்பரி அரசியலமைப்பின் 29ம் சரத்து நீக்கப்பட்டுள்ளது.

3. சிங்கள மொழி மட்டும் என்பது அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழ் மொழி அமுலாக்கம் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

5. நாடு முழுவதிலும் நீதிமன்ற மொழியாகச் சிங்களம் மட்டுமே இருக்கும் என்பதை அரசியலமைப்பு வலியுறுத்தும் அதே வேளை, வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களிலாவது தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

6. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

7. நாடற்றவர்கள் பிரச்சினைக்கு ஒரு முடிவும் காணப்படவில்லை.

8. அடிப்படை உரிமைகள் தொடர்பான கூற்றுக்கள் பூரணமாக்கப்படவில்லை. செயலற்றதுமாக இருக்கிறது.

9. சாதிப் பிரச்சினைக்கு முடிவு கட்டும் வகையில் அடிப்படை உரிமைகள் குறித்து எதுவும் பேசப்படவில்லை.

10. தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அரசாங்கத்துடன் தமது நடவடிக்கைகளைச் செய்துகொள்வதற்குத் தமிழ் மொழியைப் பயன்படுத்தும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது.




பாராளுமன்றத்திற்குத் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளும் புதிய அரசியலமைப்பின் நகல் வரைபுக்கு எதிராக வாக்களிக்க வேண்டுமெனவும், புதிய அரசியலமைப்பின் நகல் வரைபு தமிழ் மக்களை இரண்டாந் தரப் பிரஜைகளாக்கிவிட்டது எனவும் இம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பதன் மூலம் தமிழ் மக்களைப் பிரிவினைவாதப் போக்கை நோக்கி அரசாங்கம் தள்ளுவதாக இம் மாநாடு அறிவித்தது. இந்த நிலையில்

1 சிங்கள மொழிக்கு வழங்கப்படும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் உரித்தாக்கப்பட வேண்டும்.

2. மத சார்பற்ற அரசாங்கமாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

3. இந்த நாட்டைத் தமது தாயகமாகக் கருதும் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டும்.

4. தமது பாரம்பரிய பிரதேசத்தில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆட்சி புரிவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும்.

என்ற கோரிக்கைகளைத் தமிழரசுக் கட்சியின் இம் மாநாடு முன்வைத்தது. இக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகத் தமிழ் மக்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயாராக வேண்டும்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை விட்டு தமிழர்கள் அனைவரும் தென்பகுதியிலுள்ள தமது வளங்களையும், சொத்துக்களையும் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு இடம் மாற்றிக்கொள்வதன் மூலம் பாதுகாப்பான வாழ்க்கையை உத்தரவாதப்படுத்த வேண்டும். இது இம் மாநாட்டில் எடுக்கப்பட்ட கடுமையானதொரு தீர்மானம் ஆகும். இம் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கும் வகையிலான பொதுக் கூட்டங்கள் தொகுதிகள் தோறும் நடத்தப்பட்டது. இக் கூட்டங்களில் பேசப்பட்ட பிரதான விடயமானது சமஷ்டியிலிருந்து பிரிவினையை நோக்கி நகர்வதாகவே இருந்தது குறிப்பிடத் தக்கது.

*(அரசியல் தொடர்)*

**சமஷ்டியிலிருந்து தாயக விடுதலை நோக்கி**

தமிழ் இளைஞர்கள் மத்தியில் சமஷ்டிக்கான கோரிக்கையிலிருந்து தாயக விடுதலைக்கான கோசம் வலுப்பெற்று வந்தது.

"அமுதத் தமிழர் நாட்டிலே
தமிழர் ஆட்சி நாட்டவே
திமுதிமுவென தமிழர்காள்
திரண்டெழுந்து வாருங்கள்"

எனத் தொடங்கும் பாடல் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களால் மேடைதோறும் உணர்ச்சி பூர்வமான இசையுடன் பாடப்பட்டு வந்தது. எனினும் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் மத்தியில் பதவிப் பொறுப்புக்கள் குறித்த சர்ச்சைகள் தலைதூக்கின. மட்டக்களப்பின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த செல்லையா இராசதுரையுடன் ஏற்பட்ட போட்டியை அடுத்து அமிர்தலிங்கம் செயலதிபர் பதவிக்கான தனது வேட்பு மனுவை மீளப் பெற்றார். இது தொடர்பாக அமிர்தலிங்கம் அப்போது கூறியிருந்த வார்த்தைகளை மேற்கோள் காட்டுவது இங்கு பொருந்தும்.

"தமிழினத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இப்போது நாங்கள் இருக்கிறோம். கருத்து ஒற்றுமை மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இத் தருணத்தில் சிலர் கட்சிக்குள் ஒற்றுமையின்மையை ஏற்படுத்த முனைவது மனக்கவலையைத் தருகிறது. 1961லும் 1969லும் கட்சியின் செயலதிபர் பதவிக்காக எனது பெயர் முன்மொழிவு செய்யப்பட்ட போதும் தந்தை செல்வநாயகம் அவர்களின் தலையீடு காரணமாக போட்டியிலிருந்து நான் ஒதுங்கி இருந்துள்ளேன். எனினும் என்னைப் பதவி ஆசை கொண்டவனாகச் சித்தரிக்கப் பலர் முயன்று வருகின்றனர். ஆனால் நான் அத்தகையவனல்ல. கட்சியின் நலன்களையேதான் எப்போதும் பெரிதாகப் போற்றி வந்துள்ளேன். 1964ம் ஆண்டு வரை நான் கட்சியின் சாதாரண உறுப்பினராகவே பணிபுரிந்து வந்துள்ளேன். எனது ஆற்றலுக்கு உகந்த வகையில் கட்சி நலன்களை முன்னிறுத்தி நான் தொடர்ந்தும் பாடுபட்டு வருவேன்."

1972 ஏப்பிரல் 8ம் திகதி கூடிய தமிழரசுக் கட்சியின் செயற்குழு அமிர்தலிங்கம் அவர்களின் பதவி துறப்பை ஏற்றுக்கொண்டு கோப்பாய் பிரதிநிதியான எஸ்.கதிரவேற்பிள்ளையை கட்சியின் செயலதிபராக நியமித்தது. பின்னர் ஜூலை 1972ல் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த இடைக்காலத்தில் மூன்று முக்கியமான விடயங்கள் அரங்கேறியிருந்தன. அவற்றை

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

1. 1972 பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் தந்தை செல்வநாயகமும், தளபதியான அமிர்தலிங்கமும் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்தமை

2. தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் ஒன்றுபட்டுச் செயற்பட தமிழர்களின் அரசியல் கட்சிகள் முன்வந்தமை

3. 1972 மே 22ல் இலங்கைக்கான புதிய குடியரசு அரசியலமைப்பு அமுலுக்கு வந்தமை என இனங்காட்டலாம்.

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?



**சி**வநாதன் 30 வயதுடைய வளர்ந்து வருகின்ற கணக்கியலாளர். தனது கல்வித் தகைமையும், விடா முயற்சியும் காரணமாக குறுகிய காலத்துக்குள் அவரினால் உத்தியோக உயர்வுகளைப் பெற முடிந்தது. அண்மையில் தனது அலுவலக வேலை நிமித்தம் வெளிநாடு செல்லுவதற்கான அவசியம் ஏற்பட்டது. இதனை அறிந்தவுடன் திடீரென ஒரு பயத்தை அவர் உணர்ந்தார். விமானப் பயணம் பற்றிய நினைவு அவருக்கு இந்த அச்சத்தைக் கூட்டியது. வெளிநாடு போக வேண்டிய நாள் அண்மிக்க அண்மிக்க அச்சமும் கூடிக்கொண்டே போனது. தொடர்ந்தும் எவ்வாறு இந்த விமானப் பயணத்தை மேற்கொள்ளப் போகின்றோம் என்ற அச்சம் அவரை வாட்டியது. இந்த விமானப் பயணத்தைத் தவிர்ப்பதற்கு அவர் முயற்சித்தபோதிலும் அவரால் முடியாமற் போனது. தனது அலுவலக வேலைகளில் ஏற்படும் வெவ்வேறு பிரச்சினைகளை சுலபமாகக் கையாளும் அவர் இதனை இவ்வாறு தவிர்க்க நினைப்பது மற்றையவர்கட்கு ஒரு புதுமையான அநுபவமாயிருந்தது. சிவநாதனும் தன் வாழ்க்கையின் பாரிய சவாலாக இதனைக் கருதினார். எத்தனையோ பாரிய சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்த அவருக்கு ஆரம்பத்தில் இதனையும் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தபோதிலும், காலப்போக்கில் இந்த நம்பிக்கை குறைவடைந்தது. பயமும், கவலையும் ஏற்பட்டது. இந்த நிலையில் நண்பர் ஒருவரின் ஆலோசனைப்படி உளமருத்துவத் துறையின் உதவியை நாடினார்.

சிவநாதன், ரமேஷ் என்ற மேற்குறிப்பிட்ட இருவரும் தனியான அச்ச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

**தனி அச்ச நோய் என்றால் என்ன?**

இங்கு அச்சம் தனியான ஒரு பொருளைப் பற்றியதாகவோ ஒரு சந்தர்ப்பத்தைப் பற்றியதாகவோ அமையலாம். இப்படியான பொருளைப் பார்க்கும்போதோ அல்லது அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுக்கும் போதோ பதற்ற நிலை அறிகுறிகள் ஏற்படுகின்றன. இந்த அச்ச உணர்வு காரணமாக அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்க்க இவர்கள் முற்படுவார்கள்.

எவ்வாறான பொருட்களில் அல்லது சந்தர்ப்பங்களில் இந்த அச்ச நோய் ஏற்படுகின்றது?

இவை எந்த ஒரு பொருள் பற்றியதாகவோ சந்தர்ப்பம் பற்றியதாகவோ அமையலாம். ஆயினும் பின்வருவன தொடர்பான அச்சம் சாதாரணமாய்க் காணப்படுகின்றது.

1. விலங்குகள் / பூச்சிகள்
2. இருட்டு
3. தனியே இருத்தல்
4. மின்னல்/இடியோசை
5. குருதி
6. பாலமொன்றின் மேல் நடத்தல்
7. உயரமான இடத்தில் இருத்தல்
8. விமான/கடல் பயணங்கள்.

**எவர்களை இந்த அச்ச நோய் அதிகம் பாதிக்கின்றது?**

தனியான அச்ச நோய் முதன் முதலில் சிறுவர்களிலேயே தோன்றுகின்றது. பெரும்பாலான சிறுவர்கள் காலப் போக்கில் இந்த அச்சங்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு பலம் பெறுகின்றனர். ஒரு சிலரில் மட்டுமே இந்த அச்ச நோய் தொடர்கின்றது.

## உள மருத்துவம்

**தனியான அச்ச நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?**

(அ) நடத்தை மாற்றுச் சிகிச்சை (Behaviour Theraphy)

இந்தத் தனியான அச்ச நோய்க்கு உள்ளாகியிருப்பவர்களை சிறிது சிறிதாக அவர்கள் பயப்படுகின்ற பொருட்களுக்கோ அல்லது சந்தர்ப்பங்களுக்கோ முகங்கொடுக்க ஊக்கமளிக்கிப்படுகின்றது.

பெரும்பாலும் உண்மையான நிகழ்வுகளை இவர்கள் எதிர்கொள்ள உற்சாகமளிக்கப்படுகின்றது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் கற்பனையில் அவர்களுக்கு இதனை செய்யுமாறு (Imaginal Exposure) அறிவுறுத்தப்படுகின்றது. உதாரணம் : விமானப் பயணம், இடியோசை.

(ஆ) சாந்த வழிமுறைகள் (Relaxation Therapy)

இது பதற்ற நிலை அறிகுறிகளைத் தணிப்பதற்கு உதவுகின்றது.

(இ) மருந்துகள் (Medication)

அளவுக்கதிகமான பதற்ற நிலை உள்ள சந்தர்ப்பத்தில் சில வேளைகளில் பதற்ற தணிப்பு மருந்துகள் (Anxiolytic) குறுகிய காலத்துக்குக் கொடுக்கப்படுகின்றன.

**நா**ன் ஒரு க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவி. இவ் வருடம் ஏப்ரல் மாதம் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றிற்காகக் காத்திருக்கிறேன். பரீட்சை நெருங்கிய காலப்பகுதியில் வீட்டில் நடந்த சில எதிர்பாராத சம்பவங்களாலும் மேலும் சில காரணங்களாலும் என்னால் மனதை ஒருநிலைப்படுத்திப் படிக்க முடியாமல் போனது. இதனாலும் என்னால் பரீட்சையை எதிர்பார்த்தது போல் எழுத முடியாமல் போய்விட்டது. எனவே நான் இப்பொழுதிலிருந்தே மீண்டும் பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்துவிட்டேன். இதற்காக இப்பொழுது கொழும்பில் வந்து தங்கியிருந்து படித்து வருகிறேன். ஆனால் இப்பொழுது என்னால் மனதை ஒரு நிலைப்படுத்திப் படிக்க முடியவில்லை. படிப்பது மனதில் பதிவதோ ஞாபகத்தில் வைத்திருப்பதோ இல்லை. எனக்கு கற்றலில்தான் சிறுவயது முதலே அலாதி ஈடுபாடு. ஆனால் இப்போது படிப்பதற்கான 'மூட்' வருவதே இல்லை. படிக்க நினைத்தாலே போரடிக்கி றது.

சிறுவயது எதிர்பார்ப்பு, ஆசை எல்லாமே வைத்தியராக வேண்டும் என்பதுதான். என்னை நினைக்க எனக்கே கவலையாக உள்ளது. உயர்தரம் கற்க முன் நான் மேலதிக வகுப்புகளிற்கு செல்வதோ வீட்டிலிருந்து சுயகற்றலில் ஈடுபடுவதோ கிடையாது. ஆசிரியர் தரும் வீட்டு வேலைகளை மட்டும்தான் வீட்டில் செய்வேன். இருந்தும் கூட வகுப்பில் நான்தான் எப்பொழுதும் முதலாம் பிள்ளை. அதுவும் கணித, விஞ்ஞான பாடங்களில் 90 இற்கு மேல்தான் புள்ளிகள் எடுப்பேன். ஆனால் உயர்தரம் கற்க ஆரம்பித்த பின் சுயகற்றலில் ஈடுபட்டேன். ஒரு வேளை சரியான திட்டமிடல் இன்மை காரணமாகத்தான் என்னால் பரீட்சையை ஒழுங்காகச் செய்ய முடியாமல் போனதோ தெரியவில்லை.

நான்தான் வீட்டில் மூத்த பிள்ளை. ஒரே பெண் பிள்ளை. எனது இரு தம்பியரும் பாடசாலை மாணவர். எனது பெற்றோரும் உறவினரும் என்னை மிகவும் எதிர்பார்க்கின்றனர். நான் எப்பொழுதும் தனியே இருந்துதான் படிப்பேன். இப்பொழுது நான் தங்கியுள்ள அறையில் இன்னொரு பெண்பிள்ளையும் இருக்கிறார். அவரும் என்னை ஒத்த மாணவிதான்.

ஆனால் என்னால் இன்னொருவர் இருந்தால் படிக்க மிகவும் கஷ்டமாக உள்ளது. இவ்வீட்டு உரிமையாளர் அடுத்த அறையிலுள்ள பெண்களுடன் கதைக்க கூடாது என்றும் எனது வீட்டார் மாதத்திற்கு இரு முறைக்கு மேல் வரக் கூடாது என்றெல்லாம் கூறிவிட்டார். எனவே பெற்றோரிடம் எனது மன உளைச்சலைச் சொல்லி அறிவுரை பெறவும் முடியவில்லை. என் மனநிலை அறிந்தால் எனது பெற்றோர் மிகவும் மனவேதனைப் படுவார்கள். என் பெற்றோர் என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை, எதிர்பார்ப்புகள் என்பவற்றை நினைக்க எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. தற்போது நான் உங்களிடம் வேண்டுவது என்னவென்றால் நான் மனதை ஒருநிலைப்படுத்தி படிக்கவும் எனது இலட்சியத்தை அடையவும் என்ன வழி என்பதுதான். நான் எனது கல்வியை ஊரில்தான் மேற்கொண்டேன். ஆனால் இப்பொழுது அங்கு ஆசிரியர்கள் இன்மையாலும், மேலதிக வகுப்புகள் இன்மையாலும் தற்போது கொழும்பு வந்து கற்க நேர்ந்துள்ளது. வீட்டில் இருந்தபோது கூட ரி.வி. பார்ப்பதிலோ, வானொலி கேட்பதிலோ ஈடுபாடு காட்டுவதில்லை. படிக்கச் சொல்லி என்னை யாரும் கட்டாயப்படுத்துவதும் இல்லை. நானாகவேதான் படிப்பேன். ஆனால் இப்பொழுதெல்லாம் நேரத்தை வீணாக்காமல் படி என்று தாயார் கூறினாலும் கூட என்னால் படிக்க முடிவதில்லை. எனக்கு இதனால் மிகவும் மனக்கவலையாக உள்ளது. சிலவேளை இதை நினைத்து அழுவதும் உண்டு. இதனால் எனக்கு மனதில் ஒரு இனமபுரியாத பயமும் வேதனையும் இருந்துகொண்டே இருக்கிறது. சரியாகத் தூங்கவும் முடிவதில்லை.

எனவே தாங்கள் தயை கூர்ந்து எனக்கு இப் பிரச்சினைகளில் இருந்து விடுபட வழிகளையும், ஆலோசனைகளையும் கூறி உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

**(இக் கேள்விக்கான பதிலை அடுத்தவார முரசில் எதிர்பாருங்கள்.)**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான காசுக்கட்டளை தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரமும் காசுக்கட்டளை இலக்கமும் தரப்பட்டுள்ளன.

| பெயர் | கா.க. இல. |
|---|---|
| 22. செல்வி அபிராமி கணேசவேல், யாழ்ப்பாணம். | 17144466 |
| 23. வி. மரிய சுசிலா, சிலாபம். | 17144465 |
| 24. திருமதி ஜே.எஸ். லெட்சுமி, பிபிலை. | 17144464 |
| 25. திருமதி லில்லி சின்னத்தம்பி, திருகோணமலை. | 17144463 |
| 26. திரு. ரி. நாகையா, கல்முனை. | 17144467 |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.29க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி.தர்சனாப்பிரியா எட்வேட், நீதிமன்ற வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.எச்.எம்.ஜவ்பர், கல்பொக்கை வீதி, வெலிகாமம்.
02. சுமையா மொஹமட், தண்ணீர்த் தாங்கி வீதி, திக்வெல்ல.
03. செல்வி.நதா ஜெமீல், அல்பிடிய வீதி, மாவனல்லை.
04. கே.எம்.எஸ்.அபடீன், போல்ஸ் வீதி, புத்தளம்.
05. அ.கவிதா, பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம், பசறை.
06. எம்.கே.மஹ்ஜபீன், மத்திய வீதி, மருதமுனை - 03.
07. தாமோதரம் வடிவேல், ஏறாவூர், செங்கலடி.
08. செல்வன்.பா.சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
09. வி.செல்வநாயகம்,சிவன் கோயில் வீதி, புத்தூர்.
10. சு.செந்தில் குமரன், 3ம் பிரிவு, மண்டூர்.

## குறுக்கெழுத்துப் போட்டி 31

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | ■ | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | ■ | 15 | ■ | 16 |
| 17 | 18 | 19 | ■ | 20 |
| 21 | ■ | 22 | 23 | ■ |

**இடமிருந்து வலம்**

1. தொலைவிலிருந்து குறிபார்த்து சுடும் கருவி.
7. கடலுணவு (திரும்பியுள்ளது)
9. இந்த இயக்கத்தின் தந்தை பேடன்பவல்
17. தூக்கத்தில் வருவது. (குழம்பியுள்ளது)
22. நமது தாயும், மொழியும் இது போன்றது. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. யோகாசனத்தில் ஒரு ஆசனம்
4. பலாபலன் என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
5. நல்வினை என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
11. சிரித்தாலும் இது வரும் அழுதாலும் இது வரும் என்று கவிஞன் கூறியுள்ளான். (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி 29 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 து | 2 ரோ | 3 ண | 4 ர் | ■ |
| 5 ரு | ■ | 6 ங் | ■ | 7 தீ |
| 8 வா | 9 னி | 10 அ | 11 த் | ■ |
| 12 ச | 13 ங் | 14 கு | ■ | 15 நு |
| 16 ன் | 17 ப | ■ | ■ | 18 ங் |
| ■ | 19 கு | 20 ங் | 21 ர | 22 கு |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 20.08.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-31**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 594727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

05

பெயர்:....................
முகவரி:....................
....................
தொழில்: ....................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-08-2003

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**கம்பளை வாசகிக்கு அதிர்ஷ்டம்!**

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஜோதிலக்ஷ்மி சுதாகர்
03, மொல்லிகொட ஒழுங்கை, கம்பளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!
## —வாழ்க்கைச் சரிதம்—

### எந்தையும் தாயும்

ஒரு சமயம் "நான் சிறுகதையொன்று எழுதி வைத்திருக்கிறேன்" என்ற சங்கதியை மெதுவாக அவர் காதில் போட்டேன். அதை அவர் காதில் வாங்கிக்கொள்ளவேயில்லை. "படம் எழுதி உருப்படப்பார்!" என்று சொல்லி என் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். என்னுடைய இலக்கிய அரிப்புக்கு எங்கேயாவது சொறிந்துகொள்ள இடம் கிடைக்குமா என்று நான் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். தூரிகையைக் காட்டிலும் பேனாதான் என்னைத் துரத்திக் கொண்டிருந்தது.

அப்போதுதான், நான் பணிபுரிந்து கொண்டிருந்த வானொலி நிலையத்திற்கு நேர் எதிராக ஒரு பத்திரிகை அலுவலகம் செயற்பட்டுக்கொண்டிருந்தது என் கவனத்தைக் கவர்ந்தது.

அந்தப் பத்திரிகையின் ஓவியரோடு என்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டு அடிக்கடி அங்கே போய் அமர்ந்து அரட்டையடிக்கலானேன். ஒரு நாள் அந்த ஓவியர் அந்தப் பத்திரிகையின் உரிமையாளரும் ஆசிரியருமான ஒருவரிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அன்று முதல் அந்த ஆசிரியரின் அறைக்குச் சென்று எனக்குத் தெரிந்த அரைகுறை இலக்கிய ஞானத்தோடு சிறுகதைகள், நாவல்கள் பற்றிய சர்ச்சைகளில் ஈடுபடலானேன். சரத்சந்திரர், பிரேம்சந்த், க்வாஜா அஹமத், அப்பாஸ், பண்டிட் சதர்சன் ஆகிய பிறமொழி எழுத்தாளர்களின் படைப்புகளையெல்லாம் ஆங்கிலத்திலும், தமிழிலும் படித்ததை வைத்துக்கொண்டு கூடை கூடையாக விமர்சனம் செய்வேன். அந்தப் பத்திரிகை ஆசிரியர் தன் இதழ்களில் மெல்லிய புன்னகையைத் தவழவிட்டவாறே என் வாதங்களையும், விதண்டாவாதங்களையும் வெகுவாக இரசித்துக்கொண்டிருப்பார். அவர் குட்டையான மனிதர்தான். இருப்பினும் நெட்டையான உள்ளம் வாய்க்கப் பெற்றவர். ஒரு சின்னப்பயல் தனக்கு சரிசமமாக உட்கார்ந்துகொண்டு கையளவு அறிந்ததையெல்லாம் கடலளவு அளந்து கொட்டுகிறானே என்று கடுகளவும் அவர் கடுகடுப்புக் காட்டியதில்லை. அவருடைய பத்திரிகை, இளைஞர்களின் இதயங்களை மந்திரம் போல மயக்கி வைத்திருந்த காலம் அது. மீசை முளைக்காதவனுக்கெல்லாம் அந்தப் பத்திரிகையைப் படித்து ஆசை முளைக்க ஆரம்பித்தது. அந்தப் பத்திரிகையின் பெயர்தான் 'காதல்'. அதன் ஆசிரியர்தான் என்பால் அன்பு



பாராட்டிய பண்பாளர் திரு.அரு.ராமநாதன் அவர்கள். ஆனால், ஒரு வேடிக்கை பாருங்கள். இவ்வளவு நெருக்கமாகிவிட்ட திரு.அரு ராமநாதன் அவர்களிடம் ஒரு நாள் கூட நான் என்னுடைய கதையையோ, கவிதையையோ நீட்டிப் பிரசுரிக்கக் கேட்டதில்லை. இந்த சலுகையை அவரிடம் எதிர்பார்ப்பது கூட, அவர் என்பால் வைத்திருக்கும் அன்புக்கு ஊறு விளைவிக்க ஏதுவாகும் என நான் அஞ்சினேன். இருப்பினும், அவரது ஓவியர் மூலமாக நான் கதைகளும், கவிதைகளும் புனைவேன் என்பதை அவர் புரிந்து வைத்திருந்தார்.

ஒரு நாள் மாலைப்பொழுதில் திரு.அரு. ராமநாதன் அவர்களை நான் சந்திக்கப் போனபோது அவருடன் இன்னொரு நண்பர் பேசிக்கொண்டிருந்தார். அந்த இன்னொருவர் ஒல்லியாகவும், உயரமாகவும் இருந்தார். நெற்றியில் விபூதியும், குங்குமமும் இருந்தாக நினைவு. வந்தவரிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அரு.ராமநாதன்.

"இவர் பேரு வாலி. ஸ்ரீரங்கத்துக்காரரு. 'வானொலி' பத்திரிகையிலே இருக்காரு. இலக்கியத்தைப் பத்திப் பேச ஆரம்பிச்சா, விடிய விடிய வெளுத்துக்கட்டுவாரு."

என்னைப்பற்றிய Bio-Datait அரு.ராமநாதன் மூலம் கேட்டறிந்த அவர் "அப்படியா....?" என்று ஒரே வார்த்தையோடு ரத்தினச் சுருக்கமாகத் தன் பேச்சை முடித்துக்கொண்டார்.

தேநீர் வந்தது. மூவரும் அருந்தினோம்.

"வாலி இவரும் ஒரு பத்திரிகை ஆசிரியர்தான். பத்திரிகை பேரு

"சண்டமாருதம்" என்றார் அரு.ராமநாதன்.

உடனே ராமநாதனின் நண்பர் என்னைப் பார்த்து "என் பத்திரிகைக்குக் கவிதை அனுப்புங்க....பிரசுரிக்கிறேன்" என்று என்னை உற்சாகப்படுத்தும் விதத்தில் பாசத்தோடு பேசினார்.

பின்னாளில் அந்தப் பத்திரிகைக்கு நான் எதையும் அனுப்பவுமில்லை, எனவே அவர் பிரசுரிக்கவுமில்லை.

இருந்தாலும் அவரோடு ஏற்பட்ட அந்த முதல் சந்திப்பு பிற்காலத்தில் எனக்கு முக்கியமாகப்பட்டது.

அரு.ராமநாதன் அலுவலகத்தில் நான் சந்தித்த ஒல்லியும் உயரமுமாக - விபூதியும் குங்குமமுமாக வந்து போன நபர் வேறு யாருமல்ல. கவியரசர் கண்ணதாசன்தான்!

தொடர்ந்து வரும்....

# உன்னத குறிக்கோள்

தம் வாழ்க்கையில் முன்னேறிய, பெரும் சாதனையாளர்களின் வரலாற்றைப் படித்துப் பார்த்தால் அவர்கள் அனைவரும் தம் வாழ்வில் உன்னத குறிக்கோளாக உயர்ந்த இலட்சியமொன்றை மட்டுமே கொண்டிருந்தவர்கள் என்பது தெரிய வரும். தாம் தேர்ந்தெடுத்த ஒன்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருப்பவர்கள் இடையறாமல் அல்லும் பகலும் உழைத்



தவர்கள். அத்தகு முயற்சியால் வெற்றியும் பெற்றவர்கள்.

உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவரான நக்பெல்லர் என்பவர் இப்படிச் சொல்கிறார் "ஒவ்வொருவரும் உலகிலே தாம் பெரிய அறிஞராக, பெரும் செல்வந்தராக வர வேண்டுமென விரும்புகின்றனர். ஆனால் அதற்கான வழிகளைத் தேடிக் கண்டுபிடித்து, உழைப்பது கிடையவே கிடையாது. தம் அறிவு ஆற்றலுக்கேற்ப ஒரு வாழ்க்கைக் குறிக்கோளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்கென இடைவிடாது பாடுபட வேண்டும்" என்கிறார்.

**தேர்ந்தெடுங்கள்**

உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றினாலும் காத்து வளர்க்கப்படுவதே குறிக்கோள் அல்லது இலட்சியமாகும். நீருக்குள் உருவாகும் காற்றுக் குமிழிகளைப் போல தோன்றி அவ்வாறே மறைந்து போவதுதான் ஆசை. கொதி மணலில் தெளிந்த நீரைப் போல துன்பமோ தடையோ ஏற்பட்டால் உடனே மறைந்து போவதுதான் விருப்பம்.

ஆசையும் விருப்பமும் அல்ல மனித வாழ்க்கை. மனித வாழ்க்கைக்குச் சரியான குறிக்கோள் வேண்டும். உறுதியின் மீது நம்பிக்கை, நம்பிக்கையுடன் கூடிய உழைப்பு, தளராத முயற்சி இருந்தால் வெற்றி மகுடம் நமக்காகக் காத்திருக்கிறது என்பது உண்மை.

குறிக்கோளாகிய அந்த எண்ணம் நமது மனமாகிய நிலத்தில் விதைக்கப்படல் வேண்டும். தன்னம்பிக்கை எனும் உரம் போடப்பட வேண்டும். மன ஒருமைப்பாட்டுடன் தொடர்ந்தும் உழைப்பாகிய நீர் ஊற்றப்பட வேண்டும்.

உலகப் பெருங் கடலில் நமது வாழ்வை ஒரு சிறு கப்பலுக்கு ஒப்பிடலாம். கப்பலைச் செலுத்தும் மாலுமி நாமே. எந்த இடத்திற்கு நாம் செல்ல வேண்டும் என்ற குறிக்கோள் - இலக்கு இல்லை என்றால் மாலுமியும் கப்பலும் கடலில் திசை மாறி உடைந்து போக வேண்டியது தான்.




# படிப்பின் மீது ஆசை வேண்டும்

**நேரமும் காலமும்**

அவரவர் இயல்புக்கும் வசதிக்கும் சூழ்நிலைக்குமேற்ப படிக்கும் நேரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு படிப்பதுதான் சிறந்தது. சிலருக்கு மாலை நேரம் படிப்பதற்குப் பிடிக்கும். சிலருக்கு காலைப் பொழுது படிப்பதற்குப் பிடிக்கும். 'வைகறைத் துயில் எழு', 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்னும் வரிகள் காலை நேரத்தில் எழுந்து படிப்பதன் அவசியத்தை உணர்த்தும். கதிரவன் உதிப்பதற்கு முன்னுள்ள வைகறைப் பொழுதை 'பிரம்ம முகூர்த்தம்' என்பர். கல்வி பயில்வதற்குச் சிறந்த நேரம் அதுவென வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன. இசை மீது ஆர்வமுள்ளோர் அதிகாலையிலேயே எழும்பி வாத்தியங்களை இசைத்து நெடுநேரம் பயிற்சி செய்வதை நாம் காணலாம்.



**அறிவியல் என்ன கூறுகிறது?**

அறிவியல் அறிஞர்களும் உளவியல் நிபுணர்களும் பாடங்களைப் பயில அதிகாலையும் காலைப் பொழுதுமே சிறந்தது எனக் கூறுகின்றனர். அதிகாலையில்தான் மூளை ஓய்வாக இருக்கும். அப்போது எதனைப் படித்தாலும் மூளை இலகுவாக உள்வாங்கிக் கொள்ளும். படிப்பதற்கு காலை நேரம், பகல் வேலை செய்யும் நேரம், இரவு திட்டமிடும் நேரம் என அறிவியல் உலகம் கூறுகிறது.

# நம்பிக்கை வேண்டும்

**என்னால் முடியும்**

"முடியாது" எனும் சொல் என் அகராதியில் கிடையாது என்று ஆர்ப்பரித்தவர்கள் மாவீரர் அலெக்சாண்டரும், நெப்போலியன் போனபார்ட்டும். இருவரும் இளமையிலேயே உலகில் பாதியை வென்று வரலாறு படைத்தவர்கள். நம்பிக்கை கொண்டுவிட்டால் நாம் நினைத்ததைச் சாதித்துவிடலாம். ஏனெனில் உறுதியான நம்பிக்கை எப்போதும் தோல்வியைத் தழுவுவதில்லை.



என்னால் முடியும் என்று எண்ணுங்கள். "என்னால் ஆற்ற முடியாத செயல் எதுவும் இல்லை. எதையும் சாதிக்க என்னால் உறுதியாக முடியும்" என்று நம்புங்கள். அந்த நம்பிக்கையின் உறுதியே உங்களுக்குள் ஒளிந்திருக்கும் அளவற்ற ஆற்றலை வெளிக்கொண்டு வரும்.

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

# சிந்தித்துப் பார்க்க...

## வெற்றிப் பாதை

வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாமல் அவைகளை வெற்றிப் பாதையின் படிக்கற்களாக்கிக் கொண்டால் வெற்றி நமக்கேதான்.

எதிர்பாராத ஏமாற்றங்கள் புரிந்துகொள்ளப்படாத நிலை, தவறான அபிப்பிராயம் போன்றவைகள் அழுத்தும்போது சோர்ந்துவிட வேண்டாம்.

ஆடையில் படிந்த தூசியைத் தட்டி ஆடையை சரிசெய்து கொள்வது போல எழுந்து நின்று இதுவரை நடந்து வந்த பாதையைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய வெற்றிப் பாதையில் வீர நடை போட சில நேரங்களில் தோல்வி என்ற காலணி தேவைப்படுகிறது. அதனைச் சற்று சரி செய்துவிட்டால் நம்முடைய பயணத்தை நிச்சயமாகத் தொடர முடியும்.

அதற்கு ஏற்ப நம்முடைய மனநிலையை ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும். ஆம், இல்லை என்று சிறு சொல்லில் இருப்பது அவசியம். வாழ்வில் நமக்கென்று ஒரு தெளிவான குறிக்கோள் இலட்சியம் இருக்கிறது. அதை அடைவதற்கு ஒவ்வொரு நாளும் முயற்சி செய்து வருகிறோம்.

பழக்க வழக்கம், பாரம்பரியத் தன்மை இவைகளை விடாமல் தொடர்ந்து பின்பற்றி வருவதே இயல்பாக இருக்கிறது. நல்லவை வளர்ச்சி தருபவை எங்கிருந்து யார் வழியாக வந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் அவசியம் வேண்டும்.

பிரச்சினைகளைப் பார்த்துப் பயப்படாமல் வீரச் சவால்களாக எண்ணித் துணிவும், துடிப்பும் கொண்டு செயலாற்ற வேண்டும். நாம் பின்பற்ற வேண்டியவர், வழிகாட்டியாக இருப்பவர் என்று எவரும் இல்லை என்று நினைக்காமல் இருக்க வேண்டும். பிறர் காட்டும் வழி வகைகளை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.

இன்னும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றது என்று எண்ணிக்கொள்ள வேண்டும். இதற்கு என்ன விடை கூறப்போகிறோம் என்பதைப் பொறுத்துத்தான் நம்முடைய வெற்றி அமையும். நம்மைத் திருத்திக்கொள்ள இயலும்.

# சிந்தியா

## பதில்கள்

✐ அடக்கமே இல்லாமல், சரிக்குச் சரி பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு உறைக்கும்படியாக ஏதாவது சொல்ல முடியுமா?

– முஹம்மது ஸாஜித், கரம்பை.

எனக்குப் பிடித்த ஒரு பழமொழி :
பிறர் உன்னைப் பார்க்க வேண்டுமானால் - எழுந்து நில்!
கேட்க வேண்டுமானால்-பேசு!
பாராட்ட வேண்டுமானால்-வாயை மூடு!

✉ ✍ ✉

✐ **ஹாய் சிந்தியா, என் நீண்ட நாள் சந்தேகம் இது. யாரிடம் கேட்டாலும் தெரியாது என்று சொல்கிறார்கள். உமக்காவது விடை தெரியுமா, அதாவது, தெரியும் என்பதன் எதிர்க் கருத்து என்ன?**

–செ.கோகிலா, கோணப்பிட்டிய.

தபாலட்டையில் நீங்கள் தலைகீழாக எழுதிக் கேட்டாலும் நான் நேரடியாகவே சொல்லிவிடுகிறேன். தெரியும் என்பதால் இதற்கு தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும் என்பது உங்களுக்கும் தெரியும் என்று எனக்குத் தெரியும். தெரியாது என்பது தெரியும் என்றாகலாம். தெரியும் என்பது தெரியாதாகலாம். தெரியாததுவே தெரியும் என்றாவது போல தெரியும் என்பதும் எப்போது தெரியாதாகிவிடப் போகிறதென்று யாருக்குத் தெரியும்!

✉ ✍ ✉

✐ **தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்துடன் அல்லது தமிழ் எதிர்ப்புக் கட்சிகளுடன் சேர்ந்திருக்கும் வரை வட, கிழக்கிலிருந்து மாற்றுக் கட்சிகள் அனைத்தும் துரத்தப்பட வேண்டியவை தானே?**

–எஸ்.காந்தன், கொழும்பு – 06.

சரி, தமிழ் மக்களுக்கு எதிரான தமிழர்கள் யார், எவர் என்பதை அறிய - மாற்றுக் கட்சித் தமிழர்களை எல்லாம் சுட்டுத்தள்ளும் ஆயுதங்கள் இல்லாத ஒரு கருத்துக் கணிப்பு உண்டா?

காட்டுமிராண்டிக் காலத்து நியாயங்கள்தான் நம் இனப் பெருமைக்குத் திருப்தி தருகிறதென்றால் நம் 'வளர்ச்சி' என்ன?

✉ ✍ ✉

✐ **தொலைக்காட்சியில் 'ரன்' பார்த்தீர்களா?**

சர்மிளா பீரட், களேவெல.

"இச்சுத் தா இச்சுத் தா" என்று குதிக்கிற அந்தப் பொண்ணுக்காகவும், அதுல் குல்கர்னிக்காகவும் மீண்டும் அந்தப் படத்தைப் பார்த்தேன். கடைசியில் பாராட்டப்பட வேண்டியவர் இயக்குநர் லிங்குசாமி என்று புரிந்தது.

✉ ✍ ✉

✐ **சிந்தியா! காதலை முதலில் வெளிப் படுத்துவது ஆண்களா, பெண்களா?**

–கலைப்பிரியன் வேணு, பெரியநீலாவணை.

கண்கள்.

✉ ✍ ✉

✐ **நம் நாட்டில் மீண்டும் மரண தண்டனை அமுலுக்கு வருமா?**

–மனோ கோபாலன், ஹப்புத்தளை.

அதுதான் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறதே!

✉ ✍ ✉

✐ **அவரவர் எதிர்காலம் அவரவர் கனவில்தான் இருக்கிறது என்கிறார்களே?**

–என்.பிரியா, வெலிமடை.

ஆகவே தூங்குங்கள்!

✐ **மறைந்த பத்திரிகையாளர் சிவகுருநாதன் பற்றி?**

–ஆ.குமரன், கொழும்பு – 12.

எல்லோரும் சிரித்திருக்க விரும்பியவர்.

✉ ✍ ✉

✐ **பாடல்களைத் தவிர வேறெதுவுமில்லாத இந்த FM ரேடியோக்களால் என்ன பிரயோசனம்?**

–இரா.ஸ்டாலின், கொட்டகலை.

FM ரேடியோக்களால் ஒலிபரப்பில் ஏற்பட்ட ஜனநாயகத் தன்மை மிக முக்கியமானது. அறிவிப்பாளர் ஒருவர் சொல்வதை எல்லோரும் கேட்டுக்கொண்டிருத்தல் என்ற நிலை மாறி, நேயர்களும் பேசலாம் என பன்முக உரையாடலாகியிருப்பது நல்ல மாற்றம். அதற்காக அவர்களுக்கு நன்றியும் சொல்ல வேண்டும். ஆனால் இந்த உரையாடலைப் பிரயோசனமாக்குகிறார்களா என்பதில்தான் உங்கள் சலிப்பு உண்டாகிறது. இப்போது தமிழகத்தவரும் இந்த தவிர்க்க முடியா அவஸ்தையில் மாட்டுப்பட்டிருக்கிறார்கள். அங்கே FM கேட்ட ஓர் எழுத்தாளர் எழுதுகிறார் :



"உங்க குரல் சூப்பர் மேடம். எங்க வீட்டில எல்லோருமே உங்க ரேடியோ தான் கேட்போம். ஆல் தோட்ட பூபதி பாட்டை கண்டிப்பா போடுங்க மேடம். அந்தப் பாட்டை அயனாவரத்தில் இருக்கிற என் அத்தைப் பொண்ணு தனலட்சுமிக்காக கேட்க விரும்புறேன் மேடம்....."

யாரோ எழுதிய பாடல், யாரோ இசையமைத்து, யாரோ பாடி, யாரோ நடித்து, யாரோ விற்று சம்பாதித்துக் கொண்டிருக்கிற சரக்கைத் தூக்கி அயனாவரம் தனலட்சுமிக்கு சமர்ப்பணம் செய்யும் பரம பக்தர்கள் நிறைந்த புண்ணிய பூமியை நினைத்தாலே புல்லரிக்கிறது!

.....நமக்கும் இங்கே புல்லரிப்புகளுக்குப் பஞ்சமில்லை.

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

**பஞ்சணையில் தூக்கம் வராமல் கிடந்தாள் தைலா. வெளியே இருள் மூடியிருந்தது. பொழுது நள்ளிரவைத் தாண்டியிருக்க வேண்டும். நிறம் குன்றிப் போன ஒரு பளிங்குச் சிலை போல வெளுத்த முகத்தோடும், கூரையில் நிலைத்த விழிகளோடும் கிடந்தாள் தைலா.**

**இன்னதென விளங்காத ஒரு மனத் துயரை அநுபவித்துக் கொண்டிருந்தாள். இரத்தமும் கண்ணீரும் பெருக்கிக்கொண்டு தேம்பியழும் மனதை வெளியே இருளுக்குள் விரட்டிவிட முயன்று தோற்றாள்.**

**நெருப்பேறிய நிமிடங்கள் அசைவதற்கு மறுத்தன. கண்மூடிக் கிடந்தவளின் மனக்குகையில் அடங்கி ஒடுங்கிக் கிடந்த அகங்கார விரக மேகங்கள் துள்ளிக் குதித்துக் குமும்பி இடிமுழக்கத்துடன் கூடியலறி ஆரவாரிக்கலாயின.**

**இழுத்து நெஞ்சுக் கூட்டுக்குள் வைத்துவிட எவ்வளவோ முயன்றாலும், இந்த நோயைத் தந்தவனைத் தேடியே பீறிட்டுப் பாய்ந்தது மனது!**

**பெரிதாக மூச்சிரைத்தது. ஆசையின் வேகத்தினால் அவள் புத்தியில் ஓட ஆரம்பித்த இன்ப அலைகள் அவளுடலை இல்லாத பாடெல்லாம் படுத்தி வைத்தன.**

**இதே கட்டிலில் சேந்தனும் அவளுடனிருந்த கணங்கள் நெருப்புச் சொட்டுக்களென அவள் புத்தியிலிருந்து வழிந்தன.**

**மென்பட்டுத் தலையணையின் மாரணைப்பும், கற்பனைச் சுரப்புமாய்ச் சேர்ந்து விளைவித்த போதை, நரம்புப் பின்னலில் முறுக்கேற்றி மெய்மறத்தியது. கண்கள் மேலேறிச் செருகின. ம்ஹ்ம்...ம்ஹ்ம்....**

**பஞ்சணையில் கிடந்த பளிங்குச் சிலையைக் கண்கொட்டாமல் பார்த்தான் சேந்தன்.**

**அவளது அழகிய உடல் ஓர் அற்புத சிற்பம் போலவே தோன்றியது. விழிகளின் கருமணிகளில் படர்ந்திருந்த பளபளப்பு நிலவின் விரக ஒளி போலத் தாக்கியது. தன்னுணர்வின்றி அவளை நெருங்கினான் சேந்தன். அவள் உடலில் மறைந்தும் மறையாமலுமிருந்த எழிலம்சங்கள் அவனுக்கு உன்மத்தம் ஊட்டியதால், அவன் மெதுவாகக் குனிந்து, அவளை அணைக்க விரும்பித் தாபத்துடன் அவள் தோள்களைத் தொட்டான்.**

**தைலா இவன் கைகளை மிகப் பலவீனமாக விலக்கிவிட்டுக்கொண்டே "ம்ஹ்ம்" என்று முனகினாள்.**

**அது ஒரு மறுப்பாகவே சேந்தனின் புத்தியில் படவில்லை.**

**பஞ்சணையில் ஒளிமயமாய்க் கடந்த அந்தப் பருவ மங்கையின் வசீகர உடலின் ஒவ்வோர் அசைவிலிருந்தும், அவனை "வா" என்றழைக்கும் காமக் கணைகளே எழுந்து அவன் சித்தத்தில் பாய்ந்தன.**

**அவள் உடல் முழுவதிலிருந்து ஒரு விநோத ஆவல் வெளிப்பட்டதை சேந்தன் பார்த்தான்.**

**எதுவும் பேசாமல் தைலாவை இறுகத் தழுவிக்கொண்டான். அவளது தலையை வருடியபடி நெற்றியில் முத்தமிட்டான். அவள் ஒரு அழகிய விலங்கைப் போல இவனது கைகளில் தகித்து உருகினாள்.**

**அவளது ஆடைகள் மீது,**

# கள்வனைத் தேடி இருளிலே போனால் கண்டுபிடிக்க இயலுமா...?



**விரோதம் பாராட்டிய அவன் கைகளை விலக்குவதற்குத் தெம்பில்லாதவளாக**

**"சரியான காமுகன் நீ" என்றாள் கிசுகிசுத்த குரலில்.**

**"ம்" என்று சிரித்தான் சேந்தன்.**

**"கொள்ளைக்காரன்" என்றாள்.**

**அவன் மேலும் சிரித்தபடியே**

**"பெறுமதி குறைந்த ஆடைகளைத்தானே எடுத்திருக்கிறேன். பெறுமதி மிக்க ஆபரணங்களை விட்டு வைத்திருக்கிறேனே..."**

**தைலா கண்களை மூடி இரகசியக் குரலில் "வெறியன்" என்றாள்.**

**"ஆமாம், போர் வெறியன்"**

**"போரா, என்ன போர்?"**

**"இதுதான், காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த களப்போர்... செயங்கொண்டார் பாடியது..."**

**"கலிங்கப் போர் இங்கே எங்கு வந்தது?"**

**"சோழன் காஞ்சியில் இருந்தபடியே கலிங்கத்தை உருக்குலைத்த வீரப் போரை செயங்கொண்டார் பாடினாரல்லவா?"**

**"என்ன அதற்கு...?" தைலா ஜலதரங்கமாய்ச் சிணுங்கினாள்.**

**சேந்தன் அவள் கீழுதட்டை இரு விரல்களால் அழுத்தியபடியே சொன்னான் செயங்கொண்டார் சிலேடையாகச் சொல்வது கலிங்கப் போரை அல்ல."**

**"வேறு எந்தப் போராம்?"**

**"காஞ்சி என்பது பெண்கள் அணியும் ஆபரணம். கலிங்கம் என்பது ஆடை. ஆபரணம் இருக்க ஆடை குலையும் போரைத்தான் சொல்கிறார் அந்தப் பரணி பாடியவரும்" என்று விஷமமாக அவளைத் தன்னோடு அழுத்திக் கண் சிமிட்டினான் சேந்தன்.**

**"என்ன இது முரட்டுத்தனம்?" என்று ஒரு துளி கோபம் கலந்த குரலில் சொன்னாள் தைலா. பின் குறிப்பாக "விட்டுவிடாதே!" என்று கிசுகிசுப்பாகச் சொல்லி அணைத்துக்கொண்டாள்.**

**நெஞ்சோடு இறுக அணைத்திருந்த தலையணையை நெகிழ்த்தாமல் சாளரத்தினூடு இருட்டை வெறித்தாள் தைலா. வெளியே எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. "யாரும் எதையும் காண முடியாத இந்த இருள் சூழ்ந்த வேளையிலா அவனைத் தேடிச் சென்றாய் மடநெஞ்சே!" என்று தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டாள். "அவனைக் காணாமல் ஏமாந்து திரும்பிவிட்டாயே! என்னை வதைத்துக் கொடுமைப்படுத்தும் இந்தக் காமநோயைத் தந்த கள்வனைத் தேடி இருளிலே சென்றால், நெஞ்சே எப்படி உன்னால் அவனைக் கண்டுபிடிக்க இயலும்?" என்று சலிப்புடன் முணுமுணுத்தவாறே பஞ்சணையில் முகத்தைக் குப்புறம் புதைத்துக் கொண்டாள் தைலா.**

**காணாமை இருள்பரப்பிக்**
**கையற்ற கங்குலான்**
**மானா நோய் செய்தான்**
**கண் சென்றாய்**
**மற்று அவனை நீ**
**காணவும் பெற்றாயோ**
**காணாயோ மடநெஞ்சே**

**(கலித்தொகை : 6: 6–8)**

✐ **அடுத்த படத்தை அறிவிப்பதில் ரஜினிகாந்த் ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறார்?**

–எம்.ராஜபூபதி, அக்கரப்பத்தனை.

மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனுக்குப் பிறகு சினிமாவிலிருந்து விலகி அரசியலில் தீவிரமாகிவிட்ட எம்.ஜி.ஆர். மீண்டும் படம் நடிக்கும் ஆசை வந்தபோது, அப்போது நன்றாக ஓடிக்கொண்டிருந்த மகேந்திரனின் 'உதிரிப் பூக்கள்' படத்தைப் போய்ப் பார்த்தாராம். தியேட்டரை விட்டு வெளியே வந்த எம்.ஜி.ஆர். சொன்னது: "சினிமா அடுத்த கட்டத்துக்குப் போய் விட்டது. மக்கள் இரசனையும் மாறிவிட்டது. இனியும் நான் பழைய பாணியில் நடித்தால் மக்கள் பார்க்க மாட்டார்கள். நான் நடிக்காமல் இருப்பதே நல்லது."

ரஜினியும் புதிய படங்களைப் பார்த்திருப்பார்.

✉ ✍ ✉

✐ **நடிகைகளில் நல்ல குணமுடையவர் யார்?**

–எம்.றிஸ்வான், கொழும்பு – 12.

இதென்னடா வம்பாப் போச்சு! அடுத்த கேள்விக்கு வாருங்கள்.

✉ ✍ ✉

✐ **பதில் தெரியாத கேள்விகளைக் கண்டால் என்ன செய்வீர்கள்?**

–கை.ரமேஷ், பொத்துவில் நகர்.

அடுத்த கேள்விக்குத் தாவிவிடுவேன்.

✉ ✍ ✉

✐ **இறப்பைத் தேடித் தற்கொலை செய்து கொள்வது சரியா?**

–ஆ.பத்மா, சாமிமலை.

தானாக வருகிற ஒன்றை நாமாகத் தேடிக்கொள்வதில் வீரமும் இல்லை.... விவேகமும் இல்லை!

✉ ✍ ✉

✐ **எந்த தைரியத்தில் எங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லலாம் என்று ஆரம்பித்தீர்கள்?**

–ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

பதில்களை நான் எங்கிருந்தெல்லாம் திருடுகிறேன் என்கிற விஷயம் சுலபமாக மற்றவர்களால் கண்டுபிடிக்க முடியாது என்ற அசட்டுத் தைரியத்தில்தான்!

✉ ✍ ✉

✐ **எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?**

–சி.அபிராமி, கல்கிசை.

பிரபலமான ஒரு கதை :

மலையில் வசித்த மந்திரவாதி ஒருவன் தான் வைத்திருந்த ஆட்டு மந்தையில் ஆடுகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சாப்பிட்டு வந்தபோது சில ஆடுகளுக்கு மட்டும் சந்தேகம் ஏற்பட்டதாம். தமது கூட்டத்தில் அநியாயமாக ஒவ்வொரு நாளும் சில ஆடுகள் காணாமல் போவதாக, சந்தேகப்பட்ட ஆடுகளில் ஒன்றை அழைத்த மந்திரவாதி சொன்னான் :

"உண்மையில் மற்றதுகளைப் போல் நீ ஒரு ஆடல்ல,

நீ சிங்கம். நான் சாப்பிடப்போவது ஆடுகளை மட்டும்தான். நீ தைரியமாக இரு."

அடுத்து, மற்றொரு ஆட்டை அழைத்து

"நீ ஆடே அல்ல, அவர்கள்தான் ஆடுகள். சரியாகச் சொன்னால் நீ ஒரு புலி. நான் கொல்லப் போவது ஆடுகளை மட்டும்தான், நீ பதற்றமடைய வேண்டாம்."

இது போல வேறொரு ஆட்டுக்கு கரடி, இன்னொன்றுக்கு காண்டாமிருகம் என ஒவ்வொரு ஆட்டிற்கும் ஒவ்வொரு விளக்கம் கொடுத்தான் மந்திரவாதி.

அந்த அப்பாவி ஆடுகள் ஒவ்வொன்றும் தன்னை சிங்கமாகவும், புலியாகவும், கரடியாகவும் கற்பிதம் செய்துகொண்டிருந்த வேளைகளில் தமது கூட்டத்திலிருந்தவர்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் காணாமல் போனதை உணரவேயில்லை.

# நிலை தடுமாறிய தேவதைகள்!

"திணற வைத்த கம்யூனிஸத்தின் கெடுபிடியில் இருந்து இரக்கமற்ற முதலாளித்துவ கோளாறுக்குள் சீனப் பெண்கள்" என்ற தலைப்பில் 'டைம்ஸ்' சஞ்சிகை இரு வாரங்களுக்கு முன்னர் விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்தக் கட்டுரை சீனாவில் படிப்படியாக நிகழ்ந்தேறி வரும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மத்தியில் பெண்களின் நிலை எந்த அளவு அதள பாதாளத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

நைட் கிளப்புகள், விபசார விடுதிகள் என்றால் என்ன என்று தெரியாத சீன கிராமப்புறப் பெண்களின் நிலை இன்று தலைகீழாக மாறி வருகிறது. நாட்டுப்புறங்களில் இருந்து பெண்கள், குறிப்பாகச் சிறுமிகள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதற்காக நகர்ப்புறங்களுக்குக் கடத்தப்படும் போக்கு அண்மைக் காலமாக பாரதூரமான அளவுக்கு சீனாவில் அதிகரித்துக் காணப்படுகிறது. தனியறையில் உறவினர் அல்லாத ஒரு ஆணுடன் அருகருகாக அமர்ந்திருக்கும் அநுபவத்தைக் கூட வாழ்நாளில் ஒருபோதும் கொண்டிராத அளவுக்கு நாட்டுப்புறச் சூழலில் வளர்க்கப்பட்ட சிறுமிகள் கடத்தப்பட்டு விபசார விடுதிகளில் பலவந்தமாகத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

ஹூனான் மாகாணத்தின் சிங்ஸா நகரில் உள்ள விபசார விடுதிகளில் ஒன்றில் சேர்க்கப்பட்டு பலவந்தமாக விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு தப்பிச் செல்வதற்கான மார்க்கம் கிடையாது என்பதை நன்குணர்ந்துகொண்டதன் பின்னர் அந்தச் சூழ்நிலைக்குத் தங்களை இசைவாக்கிக் கொண்ட சில சிறுமிகளையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். சிகரெட் புகைத்தவாறு கடதாசிக் கூட்டம் விளையாடுகிறார்கள். விடுதியில் ஒரு ஆணுடன் ஒரு தடவை போவதற்கு இச் சிறுமிகளின் சார்பில் 18 டொலர்கள் அறவிடப்படுகின்றன. ஒரு இரவு பூராவும் இருந்தால் இரட்டிப்புத் தொகை.



இச் சிறுமிகளை இந்தப் படுபாதகத் தொழிலில் ஈடுபடுத்தும் மாமாக்கள் பொலிஸாரிடம் பிடிபடுவார்கள் என்ற பேச்சுக்கே அநேகமாக இடமில்லை.

சிறுமிகள் தப்பிச் செல்லாதவாறு அவர்களை நோட்டமிட்ட வண்ணம் இந்த மாமாக்களின் அடியாட்கள் இருப்பார்கள். சில விபசார விடுதிகளுக்கு அருகாக பொலிஸ் கார்கள் தரித்து நிற்கும். பொலிஸ் அதிகாரிகளுக்கு இலஞ்சத்தையும் பெண்களையும் கொடுத்து மாமாக்கள் அவர்களைத் தங்கள் செல்வாக்கில் வைத்திருக்கின்றார்கள் என்று பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

மாஓவின் ஆட்சியின் உச்சக்கட்டத்தில் சீனாவில் விபசார விடுதிகள் இருந்ததேயில்லை எனலாம். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் சிறுவர், சிறுமியரும் கண்காணிப்புக் குழுக்களினால் அவதானிக்கப்பட்டனர். மாஓவிற்குப் பின்னர் அதிகாரத்துக்கு வந்த டெங்ஸியாவோ பிங் நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களை ஆரம்பித்ததும் மக்கள் எல்லா விடயங்களிலும் அலைய ஆரம்பித்தார்கள். அயல் கண்காணிப்புகளில் இருந்து விலகி காணாமல் போனார்கள். வர்த்தகத்தில் ஈடுபடுவதற்காகப் பயணங்களைச் செய்யும் ஆண்கள் புதிதாகத் திறக்கப்பட்ட விபசார விடுதிகளுக்குச் சென்றார்கள். எந்த விதமான சந்தேகத்துக்கும் ஆட்படாமல் வாகனங்களில் நாட்டுப்புறச் சிறுமிகளையும், பெண்களையும் மாமாக்களினால் நகர்ப்புறங்களுக்கு ஏற்றிவரக் கூடியதாக இருந்தது.

இன்று சீனாவில் விபசாரம் வியாபகம் அடைந்துவிட்டது. சிங்ஹுவா புதிய சொற்கள் அகராதியில் (Xinhua Dictionary of New Words) புதிய சொல் ஒன்று புகுந்திருக்கிறது. பாஓ நியு (Pao niu) என்ற சொல்லே அது. விபசாரிகளுக்காகப் பார்த்துக்கொண்டிருத்தல் என்பதே அதன் அர்த்தம்.

சிறுமிகள் பெரும் எண்ணிக்கையில் கடத்தப்படுவதைத் தடுக்க முடியாமல் பெற்றோர்கள் தவிக்கிறார்கள். அந்தளவுக்கு இக் குற்றச் செயலுக்குப் பொலிஸ் அதிகாரிகளின் உடந்தை இருக்கிறது.

மாஓ யுகத்தின் பெருமைக்குரிய சாதனைகளில் ஒன்று, பாடசாலைகளில் மிகவும் அதிகரித்த எண்ணிக்கையில் பெண் பிள்ளைகள் கல்வி கற்றதாகும். இன்று கல்விக்கான கட்டணங்கள் அதிகரித்ததையடுத்து, முதலில் பாடசாலைக்குச் செல்லாதவாறு தடுக்கப்படுபவர்கள் சிறுமிகளே. "ஆண்களுக்கு மாத்திரமே கல்வியறிவு தேவை" என்ற நிலப்பிரபுத்துவ சிந்தனை ஊக்குவிக்கப்படுகிறது. 1995ஆம் ஆண்டுக்குப் பிறகு பல்கலைக்கழகக் கல்வி பெறும் பெண்களின் வீதம் வருடாவருடம் கடுமையாகக் குறைந்து வருகிறது. கடந்த வருடம் ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்ட சிறுமிகள் எண்ணிக்கை அத்தகைய சிறுவர்களின் எண்ணிக்கையை விட 11 மடங்கு அதிகமானதாகும். இதே நிலைதான் கல்லூரிப் படிப்புக்கும்.

"ஆகாயத்தின் அரைவாசியைத் தாங்கிப் பிடிக்கக் கூடியவர்கள் பெண்கள்" என்று மாஓ பிரகடனம் செய்து சமுதாயத்தில் பெண்களுக்குரிய சமத்துவ அந்தஸ்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஆனால், இன்று இலட்சோப இலட்சம் சீனப் பெண்களின் மீது ஆகாயமே விழுகின்றது போல் தோன்றுகிறது. மூச்சுத் திணற வைக்கும் கம்யூனிஸ கடும்போக்கில் இருந்து இரக்கமற்ற முதலாளித்துவ ஒழுங்கின்மைக்குள்ளும் குளறுபடிகளுக்குள்ளும் சீனா நகருகிறது.




பிஞ்சில் பழுத்தவை





# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

## 25

எகிப்து ஒரு பழம் பெரும் நாடு. நாகரிகத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தலை நிமிர்ந்து நின்ற நாடு. உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் பிரமிட் எனப்படும் அழியாச் சின்னங்ளை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவிய நாடு.

முடி மன்னர்களால் ஆளப்பட்டு வந்த நாட்டில் 20ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் மக்களாட்சி மலர்ந்தது. மக்களாட்சித் தலைவர்கள் விட்ட சில தவறுகளால் ஊழல்கள் மலிந்தன.

அன்வர் சதாத் எகிப்து நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றதும் அந் நாட்டில் ஊழல்கள் மலிவதற்கு ஏதுவாக இருந்த காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்குரிய நடைமுறைகளை வகுத்தவர். நாட்டு மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவ

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்



ராக விளங்கிய அதிபர் அன்வர் சதாத் நேர்மையான முறையில் நல்லாட்சியை ஏற்படுத்தினார்.

பொதுவாக தீய நோக்குடன் செயற்படுபவர்களுக்கு எதிரிகள் குறைவு. பெரும்பாலானோர் தீயவர்களை மனதார வெறுத்தாலும் பயத்தின் காரணமாக, தங்களுக்கு தீயவர்களால் கேடு விளையக்கூடும் என்பதனால் தங்கள் வெறுப்பைக் காட்ட முடிவதில்லை. ஆனால் நல்லவர்களுக்கு எதிராக தீயவர்கள் எழுப்பும் குரல்களுக்கு ஆதரவு அதிகரித்தே காணப்படுவதுண்டு. இது உலக இயல்பு.

இதே போன்றுதான் அதிபர் அன்வர் சதாத் நாட்டு மக்களுக்கு எத்தனையோ நற்காரியங்களை மேற்கொண்டார். ஆனால் அவரைச் சுற்றியிருந்தவர்களே அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவர்களே அவருக்கு எதிராகச் சதி வலை விரித்தார்கள். அன்வர் சதாத்தைக் கொலை செய்யத் திட்டம் தீட்டினார்கள்.

இராணுவ அணிவகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. முப்படையினரும் தத்தமது ஆயுத தளபாடங்களுடன் அணிவகுத்துச் சென்றனர். அதிபர் அன்வர் சதாத்தும் அவருடைய அதிகாரிகளும் படையினரின் அணிவகுப்பைப் பார்த்த வண்ணம் மரியாதையை ஏற்றுக்கொண்டிருந்த வேளையில், துப்பாக்கிகளைத் திருப்பி படையினர் மேடைமீது நின்றுகொண்டிருந்த அதிபர் மீதும் ஏனைய அதிகாரிகள் மீதும் சரமாரியாகச் சுட்டனர். அதிபர் சதாத்தும் சில அதிகாரிகளும் அந்த இடத்திலேயே தாக்குண்டு சாவைத் தழுவிக் கொண்டார்கள். கண்மூடித் திறப்பதற்குள் இச் சம்பவம் நடைபெற்று முடிந்தது.

நொஸ்ரடாமஸ் தனது முதலாவது இலக்கத் தொகுப்பின் 40 வது நான்கு வரிப் பாடல்களில் அவர் கணக்கிட்டுக் கூறிய எகிப்து நாட்டு அதிபர் அன்வர் சதாத்தின் கொடூரக் கொலை நடந்தேறியது.

லிபியா நாட்டின் அதிபர் கேணல் கடாபி பற்றி நொஸ்ரடாமஸ் தனது

## பிரமிக்க வைப்பது
## ராஜகுமாரன்

மூன்றாவது தொகுப்பின் 27வது நான்கு வரிப் பாடலில் கூறியிருக்கிறார்.

"லிபிய இளவரசன் மேற்குலகில் ஒரு சக்தி வாய்ந்தவனாக விளங்குவான். பிரான்ஸில் அராபிய மொழி மீது பற்றுக் கொள்ளும். அவர் கற்றிந்தவரென்பதனால் அவர் மீது அனுதாபம் ஏற்படலாம். அராபிய மொழியில் உள்ளவை பிரெஞ்சு மொழிக்கு மொழி மாற்றம் செய்யப்படலாம்."

நொஸ்ரடாமஸின் கூற்று உண்மையானவை என்பது நிரூபிக்கப்பட்டவை. மேற்குலகு, குறிப்பாக அமெரிக்கா கேணல் கடாபியை இல்லாதொழிக்க மறைமுகமாகவும் நேரடியாகவும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால் அத்தகைய குறிகள் அனைத்தையும் கடாபி முறியடித்து உயிர் தப்பினார் என்பது வரலாறு. இதனால் மேற்குலகின் தந்திரோபாயங்களையும் சூழ்ச்சிகளையும் முறியடித்தமையினால் மேற்குலகை விட சக்தி வாய்ந்தவராக கடாபி விளங்குவார் என்பதை நொஸ்ரடாமஸ் துல்லியமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

லிபியா நாடு எண்ணெய் வளத்தை மேலதிகமாகப் பெற்றிருக்கிறது. விற்பனை மூலம் திரட்டும் பெரும் செல்வத்தைக் கொண்டு தன்னையும் தன் நாட்டையும் பாதுகாப்பதற்குரிய சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார் கேணல் கடாபி.

பிரான்ஸ் நாட்டுடன் கடாபி நல்ல ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தியுள்ளார் என்பதை விளக்கவே நொஸ்ரடாமஸ் 'அரபு மொழி பிரெஞ்சுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது' என்று சங்கேத மொழியில் கூறியிருக்கிறார். பிரான்ஸ் நாட்டுடன் நல்லுறவு வைத்துக்கொண்டிருப்பதனால் லிபியாவுக்கான தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் கேணல் கடாபி உதவிகளைப் பெற்று வருகிறார்.

கடாபி சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவுடனான தனது பனிப் போரை சற்று மேலாகவே தொடர்ந்து வந்தார். இப்பொழுது தானுண்டு தன் நாடுண்டு என்று அமைதி காத்து வருவதாகத் தெரிகிறது. இருப்பினும் அவர் நீறுபூத்த நெருப்பினைப் போல் இருந்து வருகிறார் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.



நொஸ்ரடாமஸ் பல நாடுகள் பற்றி முழுமையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ஆனால் சில நாடுகளின் எதிர்காலம் பற்றிக் கூறாமல் இடை நிறுத்திவிட்டார் போல் தோன்றினாலும் அக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர் ஒரு நாட்டைப் பற்றிய கருத்துக்களை முன்னும் பின்னுமாகத்தான் தெரிவித்து வந்திருக்கிறார். அவர் விட்டுச் சென்ற குறிப்புகளை ஆராய்ந்து கூறும் ஆர்வலர்களால் ஒன்றன் பின் மற்றொன்றாக வரிசைப்படுத்தித் தொகுக்க முடியாதிருக்கிறது.

மேலும் நொஸ்ரடாமஸின் ஆரூடங்களின் முழுமையான தொகுப்புக்கள் இது வரை நிறைவுபெறவில்லை என்றும் தெரியவருகிறது.

ரஷ்யப் புரட்சியின் பயனால் தோன்றிய சோவியத் ஒன்றியம், அதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி 400 ஆண்டுகளுக்கு முன்னரே நொஸ்ரடாமஸ் கூறியிருக்கிறார். பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியனின் தோற்றமும் வீழ்ச்சியும், உலக மகா யுத்தம் (2), ஹிட்லரின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றியெல்லாம் முழுமையான தகவல்கள் எமக்குக் கிடைத்த நூல்களில் தரப்பட்டுள்ளன. அவற்றை எமது தொடரில் தொடர்ந்து பார்க்கலாம்.

(பிரமிப்புகள் தொடரும்)

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

கொஞ்ச நாளுக்கு முன்னால ஒரு தொலைக்காட்சி விவாதம் பாத்தன். தங்கட கட்சித் தலைவர் சிறீ சபாரத்தினத்தைக் கொண்டது இந்திய 'றோ'க் காறர்தானாம் எண்டு ரெலோ சிறீகாந்தா சொன்னதக் கேட்டிட்டுப் படுத்துக் கண்ணை மூடின உடன கனவில வந்த இன்னொரு விவாதம் இது.

குட்டிமணி: நாங்கள் எல்லாம் உங்கட இயக்கத்துக்குத் தலைவர்களா இருந்தனாங்கள். இந்தா, சிறீ சபாரத்தினம் முன்னாள் தலைவர். அந்தா, தங்கதுரை அதுக்கு முன்னாள் தலைவர். எங்கள உமக்கு ஞாபகம் இருக்குதோ இப்ப?

**சிறீகாந்:** பின்ன இல்லாமல்? நீங்கள் தானே ரெலோவை உருவாக்கித் தந்தனீங்கள், எங்கள வைச்சு அனுபவிக்கச் சொல்லி, சொறி, சொறி, காப்பாற்றச் சொல்லி...

**சிறீ சபா:** நாங்கள் முந்தி ஒரு பாட்டுப் பாடுவம் ஞாபகமிருக்கோ?

**சிறீகாந்:** நானும் அந்தக் காலத்தில படம் பாத்திட்டு வந்து நிறையப் பாட்டுக்கள் பாடுறனான் பள்ளிக்கூடப் பெட்டையளப் பாத்து.. (பாடுதல்) நடையோ, இது நடையோ... ஒரு நாடகமன்றோ நடக்குது.... அந்தக் காலம் இனியெங்க வரப்போகுது...ம்? நீங்களும் பாடியிருப்பியள் யார் இல்லையெண்டது?

**சிறீ சபா:** இது அந்தப் பாட்டிலலை. எங்கட இயக்கப் பாட்டு. மறந்திட்டியள் போல. (பாடுதல்) தமி- ழீழ- விடு- தலை- இயக்கம்.

முதல்- முதல்- தொடங்- கிய- இயக்கம்.
தங்கண்ணா- தலைமையில்- தொடக்கம்...

**சிறிகாந்:** (இடை மறித்து) ஐயோ, உதை நிப்பாட்டுங்கோ. முதலையும் கடைசியையும் முடிவு செய்யிறது இப்ப எங்கட கையில இல்லைத் தம்பியவை. உதப் பாடிக்காட்டி உபத்திரவத்தைத் தேடித் தராதேங்கோ. எப்பவோ மறந்த பாட்டை இப்ப ஏன் ஞாபகப்படுத்திறியள்?

**குட்டிமணி:** பாட்டை மட்டும் மறந்திட்டியளோ, இல்லை எங்களையும் சேத்து மறந்திட்டியளோ? எங்களுக்கு ஞாபகக் கூட்டம் கூட நடத்திறதில்லையாமே?

**சிறீகாந்:** உங்கள நாங்கள் ஞாபகம் வைச்சிருந்தால் போதாதே? ஏன் சனத்துக்கு ஞாபகப்படுத்துவான்? எக்கணம் மற்றவைக்கு ஞாபகம் வந்திட்டால் இருக்கிற எங்கள யார் ஞாபகம் வைச்சிருக்கிறது?

**தங்கதுரை:** அதுசரி, நாங்கள் எப்பிடிச் செத்தமெண்டதாவது தெரியுமோ உங்களுக்கு?

**சிறீகாந்:** அது, அந்தப்படியே பாடமாய்க் கிடக்குது எனக்கு. இந்த இனவாத,- சொறி, பேரினவாத அரசாங்கங்கள் நிராயுதபாணியான எங்கட தமிழ்ப் போராளிகளை, கோழைகள் போலச் சிறைக்குள்ள வைத்து, சிறைக் கைதிகளை ஏவிவிட்டுக் கதறக் கதறக் கொண்டாங்கள். சிங்கள இனவெறியின்ர உச்சக் கட்டம் தமிழ்ப் போராளிகளின்ர ரெத்தமாய்க் கொப்பளிச்ச அந்தக் காட்சிய இந்தக் கண்ணால நேராய்க் காணாட்டாலும்....

**சிறீ சபா:** அதையெல்லாம் நல்லாத் தான் ஞாபகம் வைச்சிருக்கிறியள். நான் எப்பிடிச் செத்தனெண்டதையும் சொல்லுங்கோவன்...

**சிறீ காந்:** தம்பி.... அது வந்து... அது தான் ... இந்த இந்த 'றோ' தான் தம்பி உம்மைக் கொண்டது.

**சிறீ சபா:** நான் எப்பிடிச் செத்தனெண்டு எனக்குத் தெரியும்தானே. நீங்களென்ன அப்பிடிச் சொல்லுறியள்?

**சிறீ காந்:** இல்லைத் தம்பி. 'றோ' தான் உம்மச் சுட்டது. உமக்குத் தெரியாது. நான் பின் வீட்டுக்க ஒளிஞ்சு நிண்டு பாத்தனான். முன்னால வேற பெடியள் வந்ததத் தான் நீர் பாத்திருக்கிறீர். பின்னால பாத்தனீரோ? இல்லை மேல அண்ணாந்து ஆகாயத்தைப் பாத்தனீரோ? இல்ல மண்ணுக்குக் கீழ கிண்டிப் பாத்தனீரோ?

**சிறீ சபா:** என்ன குளப்பிறியள், நானறிய...

**சிறீ காந்:** ஆ... அது நீரறிய. நீர் அறியாததத்தான் நான் இப்ப சொல்லுறன். அதாவது நான் அறிஞ்சது.

**சிறீ சபா:** எது?

**சிறீகாந்:** நீர் முன்னால பாத்துக்கொண்டிருக்க, ஆகாயத்தால வந்து குதிச்ச மிஸ்ட்டர் 'றோ' பின்னால நிண்டு சுட்டுப்போட்டு டக்கெண்டு மண்ணுக்குள்ள புகுந்து மறைஞ்சிட்டார். நான் கண்ணால கண்டனானெண்டிறன்.

**சிறீ சபா:** என்ன, கதை விடுறியள்? உப்பிடியும் நடக்குமோ?

**சிறீகாந்:** இதுவும் நடக்கும் இதுக்கு மேலயும் நடக்கும். அரசியலில எதுதான் நடக்காது. நீர் உண்மையில தானாவேதான் தற்கொலை செய்துகொண்டனீரெண்டும் புறூவ் பண்ண என்னால ஏலும். ஏன் எங்கட கூட்டணிக்காறர் அப்பிடித்தானே சொல்லினம் அமிரண்ணைக்கு? நான் உமக்கு உந்தளவிலயாவது ஒரு வீரச் சாவைக் குடுத்திருக்கிறனெண்டு சந்தோஷப்படும் போம்.

**சிறீ சபா:** அப்ப குட்டிமணி, தங்கதுரை ஆக்களை மட்டும் 'றோ' கொல்லேலலையோ?

**சிறீகாந்:** நீர் அரசியல் அரிச்சுவடே தெரியாத ஆளாய்க் கதைக்கிறீர்? அவை சிங்களத் தரப்பால கொல்லப்பட்டவை. அவையை இனவாதிகள் கொண்டதாச் சொல்லி இப்பவும் போஸ்டர் ஒட்டலாம். நீரும் சிங்களத் தரப்பால கொல்லப் பட்டிருந்தால் உமக்கும் அதே புகழ் கிடைச்சிருக்கும். இந்த மட்டில துரோகி எண்டு முத்திரை குத்தாமல் 'றோ'வால கொல்லப்பட்டதாச் சொன்னதால உம்மட மதிப்பைக் காப்பாற்றித் தந்திருக்கிறன் எண்டு சந்தோஷப்படும். சரியோ.

**கு.மணி, தங்கதுரை, சிறீ சபா:** சாவுகளையே மாத்திப் போட்டீங்கள். வாழ்க்கைய விட்டு வைக்கவா போறீங்கள்? நல்ல காலம். நாங்கள் உங்கட காலத்தில வாழேல்லை. நாங்கள் வாறம்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்தவாரம் உங்கள் பலன்

17.08.2003 தொடங்கி 23.08.2003 வரை


## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை


**சிங்கம்**- சூரியன், வியாழன், புதன், **விருட்சிகம்** - கேது, **கும்பம்** - செவ்வாய்,
**இடபம்** - இராகு, **மிதுனம்** - சனி, **கர்க்கடகம்**- வெள்ளி,
சந்திரன் மீனம், மேடம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்




**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நன்மை, பணவரவு, காரியானுகூலம், உறவினர் உதவி, மனமகிழ்ச்சி, வெளியிடப் பிரயாணம், உத்தியோகக் கஷ்டம், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மந்தம், முயற்சி குறைவு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04




**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு, பிரயாண மிகுதி, கடன் படல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06




**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் சிறப்பு, காரியசித்தி, மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, இனசன நன்மை, உத்தியோகப் பயம், மனக் குறை நீங்கும், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05




**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் உயர்ச்சி, பொருள் வரவு, உயர்ந்த நிலை, புதிய தொழில் கிடைத்தல், வெளியிடப் பயணம், உத்தியோகச் சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02




**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி, பொருள் வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், முயற்சி குறைவு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 07




**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக் குறையதிகம், கடன் தொல்லை, பயனற்ற செயல், வெளியிட வாசம், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லை, இடமாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் சித்தி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05




**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் குழப்பம், மந்தநிலை, செலவு மிகுதி, கடன்படல், வெளியார் தலையீடு, உத்தியோக முயற்சி, பதவி மாற்றம், மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06




**விருட்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நன்மை, பெரியோர் உதவி, பணவரவு, அன்னியர் சகவாசம், முயற்சி பலிதம், உத்தியோகச் சிறப்பு, பதவிகளில் நன்மை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிறப்பு, இனசன கொண்டாட்டம், செலவு மிகுதி, பெரியோர் உதவி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 01



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் மந்தம், காரியத் தடை, மனக்கிலேசம், வெளியிட வாழ்க்கை, உத்தியோக உயர்ச்சி, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் மந்தம், காரியானுகூலம், கடன் தொல்லை, பெரியோர் உதவி, உத்தியோகச் சிக்கல், பதவிகளில் கஸ்டம், மாணவர் கல்வி மந்தம், பிரயாச மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.





# சர்ச்சைப் பேர்வழி








**அ**திபார குத்துச் சண்டைப் போட்டியில் விளையாடிப் புகழ் பெற்றதை விட சர்ச்சைகளால் அதிகம் பிரபலம் அடைந்தவர் மைக் டைசன். இவர் குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொள்கிறாரோ இல்லையோ இவர் பற்றிய செய்திகளுக்குக் குறைவில்லை.

மைக் டைசனுக்கு உளவியல் மருத்துவம் பார்த்து அவரை அமைதிப்படுத்திய உளவியல் நிபுணர் டைசனின் லேட்டஸ்ட் டென்ஷனுக்குக் காரணமாகியிருக்கிறார்.

மிச்சல் கிப்ஸன்—கடந்த காலங்களில் டைசனின் மனநிலை பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதில் ரொம்பவும் அக்கறையோடு செயற்பட்டவர்.

அரிசோனா மாநிலத்தில் கிளினிக் நடத்தி வரும் கிப்ஸன், டைசன் தர வேண்டிய கன்சல்டன் ஃபீஸ் 3000 டாலர் மற்றும் வேறு செலவுகள் என்று எல்லாம் சேர்த்து 29360 டாலர்களைப் பெற்றுக்கொள்ள நீதி மன்றத்தின் உதவியை நாடியிருக்கிறார்.

இந்தப் பணத்தைத் தந்துவிடும்படி நல்ல முறையில் கேட்டபோது டைசன் தனது வழமையான பாணியில் கிப்ஸனையும் கையாள முயற்சித்தார் என்பது தனியான குற்றச்சாட்டு.

ஹொலி ஃபீல்டின் காதைக் கடித்து போட்டித் தடையை எதிர்கொண்டிருந்த சமயம், டைசனின் விவாகரத்து வழக்கின்போது, பாலியல் வல்லுறவு குற்றத்திற்காக சிறையில் இருந்த காலத்தில் என பல நெருக்கடியான சந்தர்ப்பங்களின்போதெல்லாம் இந்த உளவியல் நிபுணரின் ஒத்துழைப்புடன்தான் டைசன் தன்னைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததாகக் கூறப்பட்டது.

ஒரு தடவை கியூபாவின் தலைநகரமான ஹவானாவில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் இசகு பிசகாகக் கேள்வி கேட்ட ஒரு செய்தியாளரை கையில் கிடைத்த பேப்பர் வெயிட்டால் ஓங்கி அடித்தார் டைசன். இந்தச் சம்பவத்தையடுத்தே டைசன் உளவியல் நிபுணரின் உதவியை நாடியதாகக் கூறப்படுகிறது.

"டைசன் சம்பாதித்த பணத்தோடு ஒப்பிடுகையில் 30 ஆயிரம் டொலர் என்பது பெரிய விஷயமல்ல. ஏன்தான் இதற்கெல்லாம் போய் வழக்கு வம்பு எனச் சிக்கலில் மாட்டிக்கொள்கிறாரோ." என்று எரிச்சலுடன் கூறுகிறார் ஒரு டைசன் இரசிகர்.

மைக் டைசன் மீது என்னதான் வழக்குகள் குற்றச்சாட்டுக்கள் என்று கிளம்பினாலும் அவர் கலந்துகொள்ளும் போட்டிகளுக்கு இருக்கும் வரவேற்பு வேறு யாருக்கும் இல்லை என்பதுதான் உண்மை.

**உப தகவல் ஒன்று:** குத்துச்சண்டை வீராங்கனைகள் மத்தியில் குறுகிய காலத்தில் அதிக அளவில் புகழ் பெற்றுவிட்ட லைலா அலி(முகம்மத் அலியின் மகள்) பொப் பாடகிகள், நடிகைகளின் தரத்திற்கு இரசிகர்களைக் கொண்டிருப்பதாக சஞ்சிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் இருந்து தெரிய வந்துள்ளது.

## 1வது பிறந்த நாள் நல் வாழ்த்து



ஷாமினி — 19.08.2003 — ஷாரனி

[illegible]

## பாட்டும் பரதமும் அரங்கேற்றம்



செல்வி செந்துஜா — செல்வி தரண்ஜா

கைதடியைச் சேர்ந்த திரு.வே.சீராளன் - கச்சாய் கொடிகாமத்தை சேர்ந்த திருமதி பிரேமவதி சீராளன் ஆகியோரின் புதல்விகள் செல்வி தரண்ஜா, செல்வி, செந்துஜா இருவரும் எதிர்வரும் 23.08.2003ல் பாட்டும் பரதமும் அரங்கேற்றம் காணவுள்ளனர்.

**விழா மண்டபம்** : Burerhaus Kirchheide49 Vegesach, Breman Nord Germany.

இவர்கள் பரதாலயா நடன ஆசிரியை கலைமாமதி செல்வி கலைநிதி நவரெட்ணம் அவர்களிடம் பரதமும் செல்வி.தக்ஷபாலினி பாலசுப்பிரமணியம், பாண்டிச்சேரி சங்கீத சலங்கை நாட்டியாலயா இசை நடனப் பள்ளி இயக்குநர் கலைமாமணி திரு.கா.இராஜமாணிக்கம் அவர்கள் ஆகியோரிடம் சங்கீதமும் பயின்ற மாணவிகள்.

தகவல் : திரு.திருமதி.வே.சீராளன், Ginsterweg - 15B, 27616 Bokel, Germany. Tel No:04748 - 7290.

## 2வது பிறந்த நாள் வாழ்த்து



விஜேகா 14.08.2003

நயினாதீவைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் [illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி விஜேகா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 14.08.2003 வியாழக்கிழமை அவரது கோட்டை இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பெரியா அக்கா, [illegible] அக்கா, அம்மம்மா, அப்பம்மா, கோபன் மாமா மற்றும் மாமிமார் - மாமாமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எங்கும் எழில் சிரம் எழிலான நயினை ஸ்ரீ நாகபூசனி அம்பாள் அருட் கருணை வேண்டி விஜேகாவை பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்-ஜெகதீஸ்வரன் அப்பா

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



துஷித்தா வசந்தகுமார் 14.08.2003

யாழ்ப்பாணம், சித்தன்கேணியைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் றகு(குமார்)-தங்கா தம்பதிகளின் செல்வப் புதல்வி துஷித்தா தனது முதலாவது பிறந்த நாளை 14.08.2003 அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் வசிக்கும் அம்மம்மா, அப்பம்மா, கனடாவில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள் (தர்மிதா) மற்றும் மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், ஆசை அக்கா றஜித்தா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் துஷித்தாவை சித்தன்கேணி பிள்ளையாரின் அருள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் : றஜித்தா இந்திரன், வெள்ளவத்தை.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஸ்தாபனத்தால் மருதானையில் உள்ள பிடிசி சகின் அச்சகத்தில் ஆகஸ்ட் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது